நாடோடி

புருஷர்களுக்கு மட்டும்

பிரசுரம்

நாடோடி

தியாகராயநகர் :: சென்னை—17

முதற் பதிப்பு 1950
சகல உரிமையும் ஆசிரியருக்கே

விலை ரூபாய் நான்கு

தமிழ்ப் பண்ணை அச்சகம்
தியாகராயநகரம்—சென்னை

என் பெண்

அனுராதாவுக்கு

1, 2, 3, 19 எண்ணிக்கையிட்ட
இந்த நான்கு கட்டுரைகளும்
அகில இந்திய ரேடியோவில்
ஒலிபரப்பப்பட்டவை

பொருளடக்கம்

			பக்கம்
1.	ஹாஸ்ய எழுத்தாளர்	...	9
2.	முகஸ்துதி செய்தல்	...	21
3.	அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்ளுதல்	...	30
4.	கடன் கொடுங்கள்	...	37
5.	புருஷர்களுக்கு ஆபத்து	...	42
6.	நல்லதுக்குக் காலமில்லை	...	48
7.	என் வீட்டுக்காரர்	...	54
8.	ஸ்திரீகள் ஜாக்கிரதை	...	60
9.	மதிப்புக் குறைவு	...	65
10.	கதவைத் தட்டுதல்	...	71
11.	டாக்டர் பெண்ணுக்குக் கல்யாணம்	...	77
12.	எஜமான் தேவை	...	83
13.	சண்டைக்காரனும் சாட்சிக்காரனும்	...	90
14.	மாப்பிள்ளையாசுரன்	...	98
15.	அடிப்பதற்குச் சுதந்திரம்	...	101
16.	தமிழர்களுக்கு ஆபத்து	...	108
17.	பாக சாஸ்திரம்	...	121
18.	ஓயாப் பேச்சு	...	125
19.	புகழ் தேடுதல்	...	135
20.	புருஷர்களுக்கு மட்டும்	...	143

நாடோடி எழுதிய நூல்கள்

புருஷர்களுக்கு மட்டும்
பரந்த அனுபவம்
தமிழா, தூங்காதே!
என்னைக் கேளுங்கோன்னு
அட பரமசிவா!
குடும்ப ரகசியம்
முடியாத யுத்தம்
படித்த பெண் வேண்டாம்
நாடகமே உலகம்
இதுவும் ஒரு பிரகிருதி
ஒரு நாள் கூத்து
ஹே, அனுராதா
பிழைக்கும் வழி
எங்கள் குடும்பம் பெரிது
ஸ்திரீகள், ஜாக்கிரதை
கிழவியும் குமரியும்
பேசும் பதுமை
மாயப் பிரபஞ்சம்
ரஷ்ய நீதிக் கதைகள் (அச்சில்)

நாடோடி

ஹாஸ்ய
எழுத்தாளர்

கல்யாணமான இரண்டு மாதத்துக்கெல்லாம் என் மாமனுர் என்னைப் பார்ப்பதற்கு வந்தார். அவர் பெண்ணை நான் எப்படி வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று தெரிந்துகொள்ள அவருக்கு ஆவல். அதற்காக வந்து சேர்ந்தார்.

ஆனுல் அவர் வீட்டுக்குள் காலடி வைத்ததும், மேஜையில் இருந்த காப்பி டம்ளரை நான் வாசலை நோக்கி விசிறி எறிந்ததும் ஒன்று சேரவே, நான் சௌக்கியமா என்று அவர் என்னை விசாரிப்பதற்கு முன்னர், அவர் சௌக்கியமா என்று நான் கவலைப்பட வேண்டி வந்துவிட்டது. நான் தூக்கி எறிந்த வெள்ளி டம்ளர் அவர் நெற்றியைப் பலமாகத் தாக்கி விடவே நான் உடனே டாக்டருக்கு சொல்லி அனுப்ப வேண்டி வந்து விட்டது.

ஆனுல் மாமனுர் நெற்றிக் காயத்தைப்பற்றிக் கவலைப்படாமல் வெள்ளி டம்ளர் நசுங்கிப் போனதைப் பற்றி கவலைப்பட ஆரம்பித்து விட்டார். தாம் வாங்கிக் கொடுத்த வெள்ளி டம்ளர் நசுங்கி விட்டதே என்ற கவலையைவிட வெள்ளி டம்ளர் நசுங்கத் தாம் காரணம் ஆகிவிட்டதைப்பற்றி அவருக்கு அதிகக் கவலை வந்து விட்டது. டம்ளர் அப்பொழுது நசுங்கவில்லையென்றும், நசுங்கி ஒரு மாதம் ஆகிறது என்றும் சரசு அவரைச் சமாதானப் படுத்திய பிறகுதான் அவருக்கு சற்று நிம்மதி ஏற்பட்டது.

ஆனுல் வாலுப் போச்சு, கத்தி வந்தது என்ற கதையாக, இரண்டு மாதத்திற்கு முன்னர் தான் வாங்கிக் கொடுத்த டம்ளர் அதற்குள் எப்படி நசுங்கிற்று என்று விசாரிக்க ஆரம்பித்தார்.

"எல்லாம் உங்கள் மாப்பிள்ளை இந்தமாதிரி தூக்கி எறிந்து தான். இந்தத் தடவை டம்ளர் இன்னும் அதிகம் நசுங்காமல் தாங்கிக்கொள்ள நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். போன தடவை அந்த கைங்கரியத்தை நான் ஏற்றுக்கொள்ளாமல் வீட்டுச் சுவருக்கு விட்டு விட்டதால் டம்ளர் நசுங்கி விட்டது" என்று சரசு அவருக்குப் பதில் அளித்தாள்.

"ஐயோ! இத்தனை பொல்லாதவன் என்று தெரியாமல் கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுப்பதுபோல் நம் பெண்ணை இவனுக்குக் கொடுத்து விட்டோமே என்று மாமனார் வருத்தப் பட்டுக் கொண்டே என்னை ஒரு மாதிரி பார்த்துவிட்டு பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்காரப் போனார். "ஐயையோ! அதில் உட்காராதீர்கள்! உட்காராதீர்கள்!" என்று நான் கத்து வதற்குள் மாமனார் அதில் உட்கார்ந்து விடவே ஏற்கெனவே ஒரு காலை ஒடித்துக்கொண்டு மூன்று காலில் நின்று கொண்டிருந்த நாற்காலி. மாமனாரைக் கீழே தள்ளிவிட்டு, தன் இன்னொரு காலை ஒடித்துக் கொண்டதுடன், மாமனார் கால் ஒன்றையும் ஒடித்து விட்டது. நெற்றிக் காயத்திற்கு மருந்து போடவந்த டாக்டர் மாமனாரின் காலுக்கு மருந்து போட்டுக் கட்டிவிட்டுப் போனார்.

வெள்ளி டம்ளர்கள் நசுங்குவதற்கும், நாற்காலிகள் உடை வதற்கும், வந்தவர்கள் நெற்றியிலும், காலிலும் அடிபட்டுக் கொள்வதற்கும் பொறுப்பாளிகள் பொது ஜனங்களாகிய நீங்கள் தான்.

நீங்கள் எல்லோரும் சிரித்து மகிழ்ச்சியுடன் விளங்க வேண்டும் என்பதற்காக நான் அடிக்கடி டம்ளர்களை நசுக்க வேண்டியிருக்கிறது, நாற்காலிகளை உடைக்க வேண்டியிருக்கிறது, வீட்டைத் தேடி வரும் மாமனார்களையும் மற்றவர்களையும் காயப் படுத்தி அதனால் ஆகும் வைத்தியச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

பொது ஜனங்கள் சிரித்து மகிழ்ச்சியுடன் விளங்குவதற்கும் நான் நாற்காலியைப் போட்டு உடைப்பதற்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்கலாம்.

நான் இந்தமாதிரி கடு கடு, சிடு சிடு, என்று முகத்தை வைத்துக் கொண்டு நாற்காலியைப் போட்டு உடைத்தால் தான் எனக்கு ஹாஸ்யமாக எழுத வருகிறது. எவ்வளவுக் கெவ்வளவு நான் அதிகம் சாமான்களைப் போட்டு உடைக்கிறேனோ, அத்தனைக் கத்தனை அதிக ஹாஸ்யமாக எழுத முடிகிறது என்று அனுபவ பூர்வமாகக் கண்டு பிடித்திருக்கிறேன்.

இந்த வாரம் உங்கள் கட்டுரை பலே ஜோர் என்று வழக்கத் துக்கு அதிகமாகக் கடிதங்கள் வந்த போதெல்லாம் வீட்டில் எத்தனை நாற்காலிகள் உடைபட்டன, எத்தனை டம்ளர்கள் நசுங்கின என்று கணக்குப் பார்த்திருக்கிறேன். நசுங்கின டம்ளர்களும் உடைந்த நாற்காலிகளும் அப்பொழுது வழக்கத் துக்கு அதிகமாகவே இருந்தன.

ஹாஸ்ய எழுத்தாளர்கள் என்றால் சிரித்துக் கொண்டே எழுதுவார்கள் அல்லது எழுதிக் கொண்டே சிரிப்பார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் அநேகருக்கு இது திகைப்பாக இருக்க லாம். ஹாஸ்ய எழுத்தாளர் என்றால் எழுதாத போது கூட சிரித்துக் கொண்டே இருப்பார்கள் என்று நினைத்துக் கொண் டிருக்கும் அநேகரை இது தூக்கி வாரிப் போடும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் மற்ற ஹாஸ்ய எழுத்தாளர்கள் விஷயம் எப்படியோ, நான் எழுத உட்கார்ந்து விட்டால் வீடு இரண்டாகும், நாற் காலிகள் உடையும், டம்ளர்கள் நசுங்கும், நண்பர்களுக்கு அடி படும், டாக்டருக்கு வரும்படி அதிகரிக்கும்.

நீங்கள் எல்லோரும் சிரித்து மகிழ வேண்டும் என்பதற்காகத் தான் நான் இத்தனை நஷ்டத்துக்கும் கஷ்டத்துக்கும் ஆளாக வேண்டியிருக்கிறது.

ஆனால் இன்னொரு வகையில் பார்த்தால் இன்று நாற்காலிகள் உடை படுவதற்கும், வெள்ளி டம்ளர்கள் நசுங்குவதற்கும் காரணம் என் தம்பி என்றுதான் சொல்ல வேண்டும். குடுமி வைத்துக் கொண்டிருந்த என் தம்பி திடீரென்று கிராப்பு வைத்துக் கொண்டது தான் நான் ஹாஸ்ய எழுத்துத் துறையில் இறங்கு வதற்குக் காரணமாகி விட்டது.

பீ. ஏ. பாஸ் பண்ணும் வரையில் குடுமி வைத்துக் கொண்டு ஆசாரமாய் இருந்த என் தம்பி யாரோ இரண்டு பேர் கல்யாணத் துக்காக அவன் ஜாதகத்தைக் கேட்க வருகிறார்கள் என்று தெரிந்ததும் சொல்லாமல், கொள்ளாமல் 'டக்' கென்று கிராப் வைத்துக் கொண்டு வந்து விட்டான்.

அன்று வீட்டில் நடந்த ரகளையை இன்று நினைத்துக் கொண்டாலும் எனக்குத் திகிலாக இருக்கிறது.

வயது வந்த பிள்ளையாகி விட்டதே, அடிக்கலாமா என்று கூட பாராமல் என் தாயார் அவனை மொத்து, மொத்து என்று மொத்தினதுடன், அவன் திரும்பவும் குடுமி வைத்துக் கொண்டு வந்தால் ஆச்சு, இல்லாவிடில் பட்டினி கிடந்து உயிரை விட்டு விடுவேன் என்று பட்டினி கிடக்க ஆரம்பித்தாள். என் தாயாரின் சத்யாக்கிரகம் அன்று மாலை ஆறு மணிக்கு வெற்றியடைந்தது. முன் வைத்த காலை பின் வைத்தாலும் வைப்பேன், முன் குடுமி வைத்துக் கொண்ட நான் பின் குடுமி வைத்துக் கொள்ள மாட்டேன் என்று சாயந்திரம் வரை பிடிவாதம் செய்த என் தம்பி, கடைசியில் மாலை 6 மணிக்கு மனம் இளகி திரும்பவும் போய் குடுமி வைத்துக் கொண்டு திரும்பினான். அவனைப் பார்த்து விட்டு கிராப்பு வைத்துக் கொள்ள விரும்பிய நான் ஒரு ஏகாதசியாகப் பார்த்து கிராப் வைத்துக் கொண்டேன். ஏனெனில் தாயார் எப்படியும் ஏகாதசியன்று பட்டினி கிடக்கப் போகிறாள். நமக்காகப் பட்டினி கிடந்தாள் என்ற பாவம் நம்மைப் பிடிக்காதல்லவா?

நாங்கள் இருவரும் கிராப் வைத்துக் கொண்ட விந்தையையும் அதற்காகப் பட்ட மொத்துக்களையும் ஒரு கட்டுரையாக எழுதி திருச்சியில் இருந்த களிராட்டை என்னும் பத்திரிகைக்கு அனுப்பினேன். அந்த பத்திரிகையின் ஆசிரியர் பேஷ் பேஷ் என்று அந்த கட்டுரையைப் பாராட்டியதன் காரணமாகத் தான் நான் பார்த்துக் கொண்டிருந்த உத்தியோகத்தை விட்டு விட்டு ஹாஸ்ய எழுத்துத் துறையில் புகுந்தேன்.

சில பத்திரிகைகளுக்கு வெளியே இருந்து சில கட்டுரைகள் எழுதி அனுப்பினேன். பிறகு ஒரு பத்திரிகையின் உதவி ஆசிரியராகச் சேர்ந்தேன்.

பத்திரிகைக்கு வெளியே இருந்து கதைகளோ, கட்டுரைகளோ எழுதி அனுப்பி அங்கீகாரம் பெறுவதை விட பத்திரிகையில் வேலை பார்த்துக் கொண்டு நாம் எழுதும் கதைகளுக்கோ, கட்டுரைகளுக்கோ அங்கீகாரம் பெறுவது எளிது என்று அநேகர் நினைக்கிறார்கள்.

ஆனால் இதைப் போல தப்பான அபிப்பிராயம் வேறு கிடையாது என்பது பத்திரிகைகளில் உதவி ஆசிரியர்களாக வேலை பார்த்தால் தான் தெரியும்.

முக்கால் வாசி ஆசிரியர்கள் மிகவும் கண்டிப்பான பேர் வழிகள். உதவி ஆசிரியர்கள் என்ன எழுதினாலும் இவர்கள் பார்த்து அங்கீகாரம் பண்ணினால் தான் அது அச்சாக முடியும். இல்லையானால் முடியாது.

உதவி ஆசிரியர்கள் திருந்துவதற்கு இது மிகவும் உதவுகிறது என்றாலும் இதில் ஒன்று, இரண்டு சங்கடங்கள் உள்ளன.

பத்திரிகைக்கு வெளியே இருந்து எழுதி அனுப்பிய போது நம் கட்டுரைகளைக் கொண்டு நம்மை மதிப்பிட்ட ஆசிரியர் இப்பொழுது நம்மைக் கொண்டு நம் கட்டுரைகளை மதிப்பிட ஆரம்பித்து விடுகிறார். நாம் சற்று மரியாதைக் குறைவாக நடந்து கொண்டாலோ, அல்லது ஏதாவது ஒரு விதத்தில் அவருக்கு அதிருப்தியை விளைவித்தாலோ, அல்லது நம்மைப்பற்றி யாராவது கெடுதலாகச் சொல்லி விட்டாலோ, உடனே ஆசிரியர் நம் மீது உள்ள கோபத்தை யெல்லாம் நம் கட்டுரை மீது காட்டத் தொடங்கி விடுவார். ஆசிரியர் கட்டுரையைத் திருப்பி விட்டாரே என்ற அவமானத்தைவிட மற்ற உதவி ஆசிரியர்களுக்கு எதிரில் இதைச் செய்து விட்டாரே என்ற அவமானம் அதிகமாக இருக்கும்.

இம் மாதிரி நான் எவ்வளவோ அவமானப்பட்டிருக்கிறேன். ஆனால் குற்றம் கட்டுரைகளில் அல்ல, ஆசிரியரின் உள்ளத்தில் தான் என்று தெரியுமாதலால், அக் கட்டுரைகளையே திரும்பவும் இன்னொரு சமயம் ஆசிரியர் என் மீது நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கும் சமயம் பார்த்துக் கொடுத்து அங்கீகாரம் பெற்று விடுவேன்.

ஆனால் இந்த தந்திரத்தை நான் முதலில் தெரிந்து கொள்ள வில்லை. நம் கட்டுரைகளில் தான் ஏதோ தவறு இருக்கிறது என்று தீர்மானித்து ஆசிரியரிடம் காண்பிக்கும் முன் அவற்றை என் நண்பர்கள் சிலரிடம் வாசித்துக் காட்டி அங்கீ காரம் பெறுவது என்று வைத்திருந்தேன்.

ஆனால் நண்பர்கள் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டாதலால் அவர்கள் வெகு நாள் இந்தச் சங்கப் பலகை வேலையைப் பார்க்க இசைய வில்லை. ஒரே ஒரு நண்பரைத் தவிர மற்ற எல்லா நண்பர் களும், என்னையும் என் கட்டுரைகளையும் கண்டதும் ஓடி ஒளிய ஆரம்பித்தார்கள். கடைசியில் ஒரே ஒரு நண்பர்தான் மிஞ்சினார். அவர் தான் வெகு காலம் வரை என் கட்டுரையைப் பற்றி இது நன்றாய் இருக்கிறது, இது நன்றாயில்லை யென்று அபிப்பிராயம் சொல்லி வந்தார். அந்த நண்பர் சொல்லும் அபிப்பிராயத்தைக் கொண்டு, ஆசிரியர் கட்டுரையை அங்கீகரிப்பாரா, மாட்டாரா என்று நிச்சயமாகச் சொல்லி விடலாம்.

நண்பர் "பலே ஜோர், பலே ஜோர்" என்று கட்டுரையைச் சிலாகித்துப் பேசும் போதெல்லாம் எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கும். ஏனெனில் அவர் சிலாகித்துப் பேசிய ஒரு கட்டுரையை யும் ஆசிரியர் அங்கீகரித்ததில்லை.

நண்பர் என் கட்டுரை மிகவும் மோசம் என்று அபிப்பிராயம் சொன்னாரானால் நான் ஆனந்தம் தாங்காமல் துள்ளிக் குதிப்பேன். "உண்மையாகச் சொல்லுங்கள். கட்டுரை மோசந்தானா?" என்று கேட்பேன்.

"மோசம் தான்" என்பார்.

உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, "ரொம்ப மோசமாகவா இருக்கிறது?" என்று கேட்பேன். "ஆம், ரொம்ப மோசம் தான்" என்பார். சரி, கட்டுரை இன்று கட்டாயம் ஏற்றுக் கொள்ளப்படும் என்று சந்தோஷப் படுவேன்.

நான் இப்படி யெல்லாம் கஷ்டப்பட்டதற்குக் காரணம், "எல் லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறி

யேன் பராபரமே” என்று தாயுமானவர் கூறினரே அதைப் போல நீங்கள் எல்லாரும் நான் எழுதுவதைப் படித்து, விழுந்து விழுந்து சிரித்து மகிழ்ச்சியுடன் விளங்க வேண்டும் என்று நான் ஆசைப்படுவதுதான்.

ஏனெனில் என் கடன் உங்களைக் களிப்பூட்டுவதே. உங்களை சிரிக்க வைப்பதையே நான் ஒரு தொழிலாகக் கொண்டிருக்கிறேன்.

நீங்களெல்லோரும் சிரிக்க வேண்டியது அவசியம் தானு, உங்களைச் சிரிக்க வைக்க என்னைப் போன்ற ஹாஸ்ய எழுத்தாளரும் அவசியம் தானு என்று நீங்கள் கேட்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்.

நீங்கள் எல்லோரும் சேர்ந்து சிரிக்கவேண்டிய அவசியமே இல்லையென்றும், அதனுல் உங்களைச் சிரிக்க வைப்பதற்கு என்னைப் போன்ற ஹாஸ்ய எழுத்தாளர்கள் தேவையில்லை யென்றும் தீர்மானம் செய்தாலும் அதற்காக நான் என் தொழிலை விட்டு விடப் போவதில்லை. இப்படித் தீர்மானம் பண்ணக் கூடிய ஜனங்களும் இருக்கிருர்களா என்று தான் நான் உங்களைப் பார்த்துச் சிரிப்பேன். நான் சிரிப்பதைப் பார்த்துவிட்டு நீங்களும் என்னுடன் சேர்ந்து சிரிக்க ஆரம்பிப்பீர்கள்.

சிரிப்பு இருக்கிறதே, அது ஒரு பெரிய தொத்து வியாதி. மற்ற தொத்து வியாதிகளை அழிப்பதுபோல் இதை அழித்து விட முடியாது. உலகம் முழுவதும் சிரிப்பதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டாலும் ஒரே ஒரு ஆள் சிரிக்க ஆரம்பித்தால் போதும், இந்த வியாதி மெள்ள மெள்ள எல்லோருக்கும் பரவி எல்லாரும் சிரிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஒரு ஆள் சிரிப்பது போல் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருக்கும் கிராமபோன் ரிக்கார்டுகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அந்த ரிக்கார்டுகளைக் கேட்டு யாரும் சிரிக்காமல் இருக்க முடியாது. சிரிப்பு ஒரு தொத்து வியாதி என்பதற்கு இந்த உதாரணம் போதும்.

ஹாஸ்ய எழுத்தாளர்களின் அதிர்ஷ்டம் தமிழ் நாட்டில் இந்த வியாதி வெகுவாகப் பரவி விட்டது. தேச விடுதலைக்காக

அன்னிய ஆட்சியுடன் அல்லும் பகலும் கடும் போர் நடத்திக் கொண்டிருந்த காலத்திலும் கூட நம் தேச பிதா மகாத்மா காந்தி தம் பொக்கைவாய்ச் சிரிப்பை விட வில்லை. என்ன விஷய மானுலும் சரி, ஹாஸ்ய ரஸம் கலந்து கொடுத்தால் தான் தமிழர்கள் ரஸிக்கிருர்கள்.

வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஹாஸ்ய ரஸம் பொதிந்து கிடக்கிறது. நாம் எல்லாரும் முன்னுக்குப் பின் முரணுக வாழ்க்கை நடத்துவதால் உண்மையை எடுத்துக் கூறினுலே அது ஹாஸ்யமாக விளங்குகிறது. எல்லோரும் பளீ ரென்று சிரிக்கிருர்கள்.

உதாரணமாக, சில பாகவதர்கள் ஹரிஹதா காலக்ஷேபம் பண்ணும் போது பின் வரும் கதையைக் கூறுவதை நீங்கள் கேட்டிருக்கலாம்.

ஒரு வியாபாரி வெளியே புறப்பட்டுக் கொண்டிருக்கிருர். அப்பொழுது தம் கடைப் பையனைப் பார்த்துப் பின் வருமாறு கேள்விகளைக் கேட்கிருர்.

"என்னப்பா! அரிசியில் கல்லைக் கலந்தாச்சா?"

"கலந்தாச்சு"

"நெய்யில் எண்ணெய் கலந்தாச்சா?"

"கலந்தாச்சு"

"சர்க்கரையில் மணலைக் கலந்தாச்சா?"

"கலந்தாச்சு"

"சரி அப்படியானுல் கடையை மூடு. கோவிலுக்குப் போய், சாமி கும்பிட்டு வருவோம் வா."

இம்மாதிரி முரணுன வாழ்க்கை நாம் நடத்துவதால் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஹாஸ்யம் பொதிந்து கிடக்கிறது.

ஆனாலும தனிப்பட்ட ஒரு தொகுதியினரைப் பற்றிய ஹாஸ்யத்தைவிட பொதுவாக குடும்ப வாழ்க்கையைப் பற்றியும், அவர்கள் சம்பந்தப் பட்டுள்ள பொதுப்படை விஷயங்களைப் பற்றியும் ஹாஸ்யமாக எழுதினால் எல்லோரும் ரஸிப்பார்கள் என்பதற்காக நான் குடும்ப வாழ்க்கையைப்பற்றி ஹாஸ்யமாக எழுதுவது என்று வைத்துக் கொண்டேன். அதிலும் சாதாரணமாக எல்லாத் தமிழர்கள் குடும்பத்திலும் நடக்கும் விஷயங்களை என் குடும்பத்திலேயே நடப்பதாக வைத்துக் கொண்டு "நான்" என்று தன்மையில் எழுத ஆரம்பித்தேன்.

ஒரு புருஷனும், மனைவியும், பத்து நாளைக்கு முன்னர்தான் பிறந்த தங்கள் பெண் குழந்தையை யாருக்குக் கல்யாணம் செய்து கொடுப்பது என்று இப்பொழுதே சண்டை பிடித்தார்கள் என்றால் அதை நானும், என் மனைவி சரசுவும் எங்கள் மூன்றுமாதக் குழந்தை அனு கல்யாண விஷயமாகச் சண்டை போட்டுக் கொள்வதாகக் காட்டுவேன்.

மாப்பிள்ளைக்குக் கொடுத்த கடன் எங்கே திரும்பி வரப் போகிறது என்று மாமனார் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று காட்ட விரும்பினால் என் மாமனாரே எனக்குக் கடன் கொடுத்துவிட்டு எங்கே திரும்பி வரப் போகிறது என்று என் மாமியாரிடம் சொல்லிக் கவலைப் படுவதாகக் காட்டுவேன்.

இம்மாதிரி மற்றவர்களுக்கு ஏற்படும் அனுபவங்களையெல்லாம் நான் எனக்கே ஏற்பட்டதாக எழுதப் புகுந்தது என்னை எத்தனையோ சங்கடங்களில் மாட்டிவிட்டது.

மாட்டுப் பெண், மாமியார் சண்டையைப் பற்றி எழுதியதற்காக என் தாயார், தன்னைப்பற்றித்தான் எழுதினேன் என்று நினைத்துக் கோபித்துக் கொண்டு தனிக் குடித்தனம் பண்ணுகிறாள். மாமனார்களைப்பற்றிப் பொதுவாக எழுதியதற்காகத் தன்னைப் பற்றித்தான் எழுதினேன் என்று நினைத்துக் கொண்டு என் மாமனார் இப்பொழுது என்னை எட்டியே பார்ப்பதில்லை. நான் அவரைத் தேடிப் போனாலும் சரியாகப் பேசுவதில்லை. வீட்டுக் காரர்களைப் பற்றி எழுதியதற்காக என் வீட்டுக்காரர் தன்னைப் பற்றித்தான் எழுதினேனென்று நினைத்துக் கொண்டு

என்னை வீட்டை விட்டுத் துரத்துவதற்காக வீட்டுக்கும், வாடகைக் கட்டுப்பாடு அதிகாரி ஆபீசுக்கும் அலைந்து கொண்டிருக்கிறார். அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் என்று பொதுப் படையாக எழுதியதற்காக என் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்னை ஒரு மாதிரி பார்க்கத் தொடங்கி யிருக்கிறார்கள். படித்த பெண் வேண்டாம் என்று படித்த பெண்களைப் பற்றிப் பழித்து எழுதியதற்காக, படித்த பெண்கள் என்னைக் கண்டாலே கழியை எடுத்துக் கொண்டு ஓடி வருகிறார்கள்.

முன்பு ஒரு காரியாலயத்தில் நான் வேலையிலிருந்த பொழுது உண்மையாக வேலை செய்தால் முன்னுக்கு வர முடியாது, காக்கா பிடிப்பது, வேலை செய்வதுபோல் பாவனை செய்வது முதலிய வழிகளில்தான் முன்னுக்கு வர முடியும் என்று ஒரு கட்டுரை எழுதினேன்.

பொது ஜனங்கள் அந்தக் கட்டுரையை வெகுவாகப் பாராட்டினார்கள். ஆனால் என் சகபாடி ஒருவர் தம்மைப்பற்றித் தான் எழுதினேன் என்று நினைத்துக் கொண்டு என்னுடன் சண்டைக்கு வந்து விட்டார்.

தாயார், மாமனார், அடுத்த வீட்டுக்காரர், மனைவி இவர்கள் கோபத்தை யெல்லாம் பொருட் படுத்தாத நான் இந்த நண்பர் கோபத்துக்கு ஆளாகி விட்டோமே என்று மிகவும் வருத்தப் பட்டேன். ஏனெனில் இவர் நான் கேட்ட போதெல்லாம், ஐந்து பத்து கடன் கொடுத்து உதவி வந்தார். போயும் போயும் அவரைப் பகைத்துக் கொண்டு விட்டோமே என்று மிகவும் வருத்தப் பட்டேன்.

ஆனால் என்ன பண்ணுவது! நான் ஹாஸ்யத்துக்கு அடிமையாகி விட்டபடியால் அது இழுத்த இடம் எல்லாம் செல்ல வேண்டியிருக்கிறது. இப்படி எழுதினால் இன்னார் விரோதம் ஏற்படும் என்று தெரிந்தும், அப்படி எழுதினால் ஹாஸ்யம் இருக்கிறது என்பதற்காக அப்படி எழுதி அநேகர் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறேன்.

என்னுடைய ஹாஸ்யக் கட்டுரைகளினால் நான் ஜனங்களைச் சிரிக்க வைத்ததைத்தவிர வேறுசில நன்மைகளும் செய்திருக்கிறேன்.

எத்தனையோ நண்பர்கள் தங்கள் காரியாலயத்தில் நடக்கும் அக்கிரமங்களைத் தாங்கள் கண்டிக்கப் பயந்துகொண்டு என்னை விட்டு ஹாஸ்யமாக எழுதச் சொல்லியிருக்கிறார்கள். நானும் எழுதியிருக்கிறேன். அதனால் அவர்களுக்குப் பலனும் ஏற்பட்டிருக்கிறது. ஒரு சமயம் நான் வேலை பார்த்த காரியாலயத்திலேயே என் கட்டுரை ஒன்றால் எல்லாருக்கும் கைமேல் பலன் கிடைத்தது.

நான் வேலை பார்த்த காரியாலயத்தில் அப்பொழுதுதான் எல்லாருக்கும் ஒரு மாத சம்பள போனஸ் கொடுத்திருந்தார்கள். இருந்தும் ஒருவருக்கும் திருப்தி ஏற்படவில்லை. நான் உடனேயே கடன் வாங்கியும் பட்டினி என்று ஒரு கட்டுரை எழுதினேன். அதன் பலன் எல்லோருக்கும் இன்னொரு மாத போனஸ் கிடைத்தது. என் கட்டுரையைப் பார்த்து விட்டுத்தான் எல்லாருக்கும் அதிகப்படி போனஸ் கொடுத்ததாக அக்காரியாலயத்தின் முதலாளியே ஒப்புக் கொண்டார்.

இன்னொரு சமயம் எங்கள் பக்கத்து வீட்டுக்கு ஊரிலிருந்து ஒரு சொந்தக்காரர் பட்டணம் பார்ப்பதற்காக வந்து சேர்ந்தார். அவர் ஒரு மாதமாகப் பட்டணம் பார்க்கிறார், இன்னும் பட்டணம் பார்த்து முடிந்த பாடில்லை.

அவரை வீட்டை விட்டுத் துரத்துவதற்கு என்ன செய்வது என்று அவர்கள் என்னை யோசனை கேட்டார்கள்.

அந்த சமயத்தில்தான் பட்டணத்தில் ரேஷன் ஆரம்பிக்கும் சமயம். அதற்காக ரேஷன் விசாரணை நமூனா என்று எல்லாருக்கும் கொடுத்து பூர்த்தி செய்யச் சொல்லியிருந்தார்கள்.

நான் ரேஷன் விசாரணை நமூனா என்று ஒரு கட்டுரை ஒரு பத்திரிகையில் எழுதி வைத்தேன். "இரண்டு வாரங்களுக்குப் பிறகு குடும்பத்தில் நிரந்தரமாக வசிக்காதவரை குடும்பத்தினரில் ஒருவராகச் சேர்க்கக் கூடாது" என்று அந்த நமூனாவில் கண்டிருந்ததால் எங்கள் வீட்டுக்கு ஒரு மாதத்துக்கு முன்பு வந்து இன்னும் போகாமல் இருந்த அத்தானை குடும்பத்தினரில் ஒருவராகச் சேர்ப்பதா, கூடாதா என்று நாங்கள் விவாதிப்பது போல் அந்த

கட்டுரையில் எழுதியிருந்தேன். அவ்வளவுதான். அடுதத வீட்டுக்கு ஊரிலிருந்து வந்திருந்த சொந்தக்காரர் பட்டணம் பார்த்தது போதும் என்று கட்டுரை வெளியான தினமே புறப்பட்டு விட்டார்.

சிலர் என் கட்டுரைகளைப் படித்து விட்டுச் சிரிக்கிறார்கள், ஆனால் மறு கணமே தெரியாமல் சிரித்து விட்டோமே என்று மிகவும் சிரமப்பட்டு வாயை மூடிக்கொள்கிறார்கள். ஏனெனில் அவர்கள் எதிர்பார்க்கும் உத்தாரண அம்சம் அதில் இல்லை.

ஜனங்களை சிரிக்க வைத்தால் மட்டும் போதாது, அவர்களை உத்தாரணமும் பண்ண வேண்டும் என்பது இவர்கள் எண்ணம். கொல்லாமை, புலால் உண்ணாமை, பிறன் மனை விழையாமை, ஊக்கமுடைமை முதலிய இது போன்ற விஷயங்களைப் பற்றி நான் எழுதினால் தான் இவர்களுக்குத் திருப்தி. ஆனால் இந்த விஷயங்களைப் பற்றித்தான் நம்மை விட எவ்வளவோ அறிந்தவர்கள் எவ்வளவோ நன்றாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார்களே என்று நான் இந்த விஷயங்கள் பக்கமே போவதில்லை.

நான் என் ஹாஸ்ய எழுத்துக்கள் மூலம் ஜனங்களை உத்தாரணம் பண்ணுவதாகச் சில பத்திரிகைகள் என் புத்தகங்களுக்கு விமர்சனம் எழுதுகின்றன.

ஆனால் உண்மையில் யாரை உத்தாரணம் பண்ணும் நோக்கமும் எனக்குக் கிடையாது. என்னை உத்தாரணம் பண்ணிக்கொள்ளவே என்னால் முடியவில்லை. உங்களை எங்கே உத்தாரணம் பண்ணப் போகிறேன்?

என் கடன் உங்களுக்குக் களிப்பூட்டுவது. உங்களை கவலைகளை மறந்து சிரிக்கச் செய்வது. அவ்வளவுதான்.

முகஸ்துதி செய்தல்

ஒரு நாள் சில நண்பர்களுடன் தெருவில் நின்று பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு புது கார் வெகு வேகமாக எங்கள் எல்லார் கண்ணிலும் தெரு மண்ணை அள்ளி போட்டு விட்டுச் சென்றது. காரைப் பார்த்துவிட்டு ஒரு நண்பர், "நம்ப ராமு போகிறான் பார்த்தாயா?" என்றார்.

"எதற்காக நம் கண்ணில் மண்ணை அள்ளிப் போட்டு விட்டுப் போகிறான்?" என்று கேட்டார் இன்னொரு நண்பர்.

"அதுதானே அப்பா அவனுக்குத் தொழில்? ஊரான் கண்ணில் மண்ணை அள்ளிப் போட்டால் தானே அவன் பிழைக்கலாம்" என்று பதில் அளித்தார் முதல் நண்பர். "என்ன இருந்தாலும் நம்ப ராமு பலே கெட்டிக்காரன். பத்து வருஷத்துக்கு முன்பு பதினைந்து ரூபாய் சம்பளத்துக்கு அடெண்டராக வந்தவன், இன்று அந்தக் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் ஆகி விட்டானே? அவன் சாமர்த்தியமே சாமர்த்தியம்!" என்று சிலாகிக்க ஆரம்பித்தார் இன்னொரு நண்பர்.

இது என் பக்கத்தில் நின்று கொண்டிருந்த நண்பருக்குப் பிடிக்கவில்லை. மற்ற எல்லார் கண்ணிலும் விட அவர் கண்ணில் அதிகமாக மண்ணை அள்ளிப் போட்டுவிட்டது ராமுவின் கார் என்று நினைக்கிறேன். அந்த ஆத்திரந்தானோ, அல்லது வேறு என்ன காரணமோ, ராமுவின் சாமர்த்தியத்தைக் குறை கூற ஆரம்பித்தார்.

"என்ன பெரிய சாமர்த்தியத்தைக் கண்டு விட்டீர்கள்? தன் கையெழுத்தைக் கூடச் சரியாக எழுதத் தெரியாது. சாமர்த்திய

மாம் சாமர்த்தியம்! காக்கா பிடித்தும், முகஸ்துதி செய்தும் அல்லவா முன்னுக்கு வந்தான்?" என்று இளப்பமாகக் கூறினர்.

அந்த நண்பருக்கு மாத்திரமல்ல, எல்லாருக்குமே முகஸ்துதி செய்கிறவர்களைக் கண்டால் ஒரு வித இளப்பம் தான்.

இவ்வித இளப்பம் நமக்கு மாத்திரம் அல்ல, பழைய காலத்து பெரியவர்களுக்கும் இருந்திருக்கிறது. பழைய காலத்துப் பெரிய வர்கள் முகஸ்துதி செய்கிறவர்களை எவ்வளவு இளப்பமாகப் பேசு கிருர்கள், பாருங்கள்.

"ஓநாய்கள் எப்படி நாய்களைப் போலவே தோற்ற மளிக் கின்றவோ அதைப் போலவே முகஸ்துதிக்காரர்கள் சிநேகிதர்களைப் போலத் தோற்ற மளிக்கின்றனர்" என்கிருர் ஒருவர்.

"காட்டு மிருகங்களுக்குள்ளே கொடுங்கோலனிட மிருந்து என்னைக் காப்பாற்று. நாட்டு மிருகங்களுக் குள்ளே முகஸ்துதி செய்கிறவனிடமிருந்து என்னைக் காப்பாற்று" என்று அபயம் கேட்கிருர் இன்னெருவர்.

"முகஸ்துதி செய்கிறவர்களிடம் அகப்பட்டுக் கொள்வதை விட காக்கைகளிடம் அகப்பட்டுக் கொள்வது நல்லது. காக்கைகள் செத்தவர்களைத்தான் கொத்தித் தின்னும். முகஸ்துதிக் காரர் களோ உயிரோடு இருக்கிறவர்களையே கொத்தித் தின்றுவிடு வார்கள்" என்று பயமுறுத்துகிருர் இன்னெருவர்.

"முகஸ்துதிக் காரர்கள், பூனைகளைப்போல், முதலில் நக்கு வார்கள், பிறகு பிராண்டி விடுவார்கள்" என்கிறது ஒரு ஜெர் மானியப் பழமொழி.

முகஸ்துதி செய்கிறவர்களை, இழித்துக் கூறியுள்ள இவர்களை நினைக்கும் போதெல்லாம் எனக்கு அந்த நரிக் கதை தான் ஞாபகம் வருகிறது.

"சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும். இதைத் தின்பவர் பல் எல்லாம் கூசும்" என்று வெகு விரக்தியாக திராட்சைப் பழங்

களைப் பார்த்துக் கூறியதே ஒரு நரி, அந்த நரியின் கதைதான் எனக்கு ஞாபகம் வருகிறது.

முகஸ்துதியைப் பற்றியும், முகஸ்துதிக் காரர்களைப் பற்றியும் இவர்கள் இத்தனை இளப்பமாகக் கூறியிருப்பதற்கே காரணம், இவர்களை யாரும் முகஸ்துதி செய்ய முன் வராமல் இருந்திருக்க வேண்டும், அந்தக் கோபத்தில் தான் இவர்கள் இப்படியெல்லாம் சொல்லியிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

ஏனெனில் மனிதனுக்கு மூச்சுக் காற்று எத்தனை அவசியமோ அத்தனை அவசியம் முகஸ்துதியும். மூச்சுக்காற்று இல்லாமல் மனிதன் வாழ்ந்தாலும் வாழலாம், முகஸ்துதி இல்லாமல் மனிதன் வாழமுடியாது. இதற்குக் காரணம், குழந்தை பிறந்ததும் பிறக்காததும், அதற்குப் பாலூட்டப் படுவதற்கு முன்னுல் அதற்கு முகஸ்துதி ஊட்டப் படுவதுதான்.

என்ன கோரமான குழந்தையாகத்தான் இருக்கட்டும், என்ன கறுப்பாகத் தானிருக்கட்டும், எல்லாரும் இத்தனை அழகான குழந்தையைத் தாங்கள் கண்டதே யில்லை என்று சத்தியம் செய்யத் தொடங்கி விடுகிருர்கள். தாயாருக்கோ கேட்க வேண்டியதில்லை. அன்பு கண்ணை மறைக்கிறது. “காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு” என்னும் பழமொழியை நிரூபிப்பதேபோல் தன் குழந்தையைப்பற்றி பிரமாதமாக எண்ணத் தொடங்கி விடுகிருள். ஆனுல் சுற்றி யிருப்பவர்களாவது உண்மையைச் சொல்லக் கூடாதா? குழந்தை கறுப்பாக இருந்தால் கறுப்பென்றே, அல்லது அவலட்சணமாக இருந்தால் அவலட்சணமென்றே சொல்லக் கூடாதா? ஆனுல் அவர்கள் அப்படிச் சொல்வதில்லை. தாயாருக்குப் பயந்து கொண்டுதான் அப்படிச் சொல்லாமல் விடுகிருர்களோ, அல்லது தங்கள் நிறத்திற்கும், லட்சணத்திற்கும் குழந்தையின் நிறமும் லட்சணமும் ஒன்றும் குறைந்து போய் விடவில்லை என்பதை நினைத்துத்தான் வாளா இருக்கிருர்களோ, குழந்தை பிறந்தது முதற்கொண்டே முகஸ்துதியில் நாட்டம் கொள்ள ஆரம்பித்துவிடுகிறது.

அதற்குப்பிறகு அதற்குப் பாலூட்டும்போது, தொட்டிலி லிட்டு ஆட்டும்போது, மருந்து, விளக்கெண்ணெய் முதலியவை

புகட்டும்போது, "என் கண்ணே, முத்தே, பவளமே, கற்கண்டே ராஜாவே, ராணியே, என் தெய்வமே" என்றெல்லாம் தாயார் முகஸ்துதி செய்துகொண்டே இருக்கிறாள். முகஸ்துதியில் ஆசையும் குழந்தைக்கு அதிகரித்துக்கொண்டே போகிறது.

ஆனால் தாயார் வெகுகாலம் குழந்தைகளை முகஸ்துதி செய்ய இடம் இருப்பதில்லை. நம் நாடு இப்பொழுது உள்ள நிலையில் இந்தக் குழந்தைக்கு இரண்டு வயது ஆவதற்குள் அவளுக்கு இன்னொரு குழந்தை பிறந்து விடுவதால் இந்தக் குழந்தையை முகஸ்துதி செய்வதை விட்டு விட்டு, பிறந்த குழந்தையை முகஸ்துதி செய்ய ஆரம்பித்து விடுகிறாள்.

இதுவும் நல்லதுக்குத்தான். முகஸ்துதியில் ஆசை கொள்ளும் வழக்கம் குழந்தைக்கு மறந்து விடும் என்று எண்ணுவதற்குள் தாயார் காலி செய்த இடத்தை இட்டு நிரப்பு வதற்குத் தாத்தாவும், பாட்டியும் வந்து விடுகிறார்கள். சரி, தாத்தாவும் பாட்டியும் வயதானவர்கள் தானே (நான் இந்த காலத்துத் தாத்தாக்களையும் பாட்டிகளையும் பற்றிச் சொல்லவில்லை. இந்தக் காலத்தில் தான் 35 வயதுக்குள் இரு விதத்திலும் தாத்தா பாட்டி ஆகி விடுகிறார்களே—பேரன் பேத்திகளைப் பெற்று ஒரு விதத்தில் தாத்தா, பாட்டி ஆகிறார்கள். தலை நரைத்து, நடை தள்ளாடி, பார்வை மங்கி, பல் விழுந்து, இன்னொரு விதத்தில் தாத்தா பாட்டி ஆகிறார்கள். நான் பழைய காலத்துத் தாத்தா, பாட்டி களைப் பற்றிச் சொல்லுகிறேன். இந்தக் காலத்துத் தாத்தா பாட்டிகள் சண்டைக்கு வந்து விடாதீர்கள்.) சரி, தாத்தாவும் பாட்டியும் வயதானவர்கள்தானே, அவர்கள் சீக்கிரம் கண்ணை மூட மாட்டார்களா, அப்பொழுதாவது இந்த பையனுக்கோ, பெண்ணுக்கோ முகஸ்துதியில் உள்ள ஆசை குறையாதா என்று எண்ணிக் கொண்டிருந்தால் நம் ஆசையில் இந்தத் தாத்தாவும் பாட்டியும் மண்ணைவாரிப் போட்டு விடுகிறார்கள். ராமுவின் கார் கண்ணில் மண்ணைவாரிப் போட்டது போல் அல்லாமல் இவர்கள் ஆசையில் தானே மண்ணை வாரிப் போட்டார்கள் என்று சொல்லுகிறீர்களோ, சரி, அப்படியே சந்தோஷப்படுகிறேன். என்னமோ சொல்லிக் கொண்டிருந்தவன் எங்கேயோ போய் விட்டேனே? ஆமாம் என்ன சொல்லிக் கொண்டிருந்தேன்? ஆ!

இந்த தாத்தாவும் பாட்டியும் கண்ணில் மண்ணை வாரிப் போடு வதைப் பற்றிச் சொன்னேனு? இந்த தாத்தாவும் பாட்டியும் நாம் எதிர் பார்ப்பது போல் என்ன வயதானுலும் கண்ணை மூடுவதில்லை. பேரனுக்கும், பேத்திக்கும் ஒரு கால் கட்டை கட்டி விட்டுத்தான் கண்ணை மூடுகிருர்கள். கால் கட்டு கட்டியானதும், புருஷன் மனைவியை முகஸ்துதி செய்வதும், மனைவி புருஷனை முகஸ்துதி செய்வதும் இப்படி இரண்டு வருஷகாலம் நடக்கிறது. இரண்டு வருஷ காலத்துக்குப் பிறகு புருஷனும் மனைவியும் எலியும் பூனையும் போல வாழ்க்கை நடத்த ஆரம்பிப்பதால், அதற்குப் பிறகு இரு வரும் நண்பர்களிடமிருந்தும், தங்கள் கீழ்ப்பட்டவர்களிட மிருந்தும் முகஸ்துதியை எதிர்பார்க்கிருர்கள்.

இப்படி முகஸ்துதியில் நமக்கு மோகம் தொட்டிலிலிருந்தே ஆரம்பித்து, கடைசி வரையில் விடாமல் இருந்து கொண்டே வருகிறது.

ஆனுல் முகஸ்துதி விஷயத்தில் நமக்குப் பிடிக்காத விஷயம் என்னவென்ருல், நமக்குத் தெரிந்தவர்கள் நம்மை முகஸ்துதி செய்வதை விட்டு விட்டு பிறரை முகஸ்துதி செய்து கொண்டிருக் கிருர்களே என்பதுதான்.

தங்கள் நண்பர்கள் தங்களை முகஸ்துதி செய்யாமல் தங்களைவிட மேல் உத்தியோகத்தில் இருக்கிறவர்களை முகஸ்துதி செய்து முன்னுக்கு வந்து விட்டார்களானுல், "என்ன பிரமாத மாகக் கிழித்துவிட்டார்கள்? முகஸ்துதி செய்து முன்னுக்கு வந்து விட்டார்கள்" என்று இளப்பமாகப் பேசுவது வழக்கமாகிவிட்டது.

இம்மாதிரி பேசும் போது முகஸ்துதி செய்வது வெகு சுலப மான காரியம் போலவும், அந்த சுலபமான காரியத்தை அற்பம் என்று நினைத்து இவர்கள் செய்ய வேண்டாம் என்று விட்டு விட்டது போலவும் பேசுகிருர்கள்.

முகஸ்துதி பண்ணுவது என்ன சுலபமா? ஒரு நாளும் இல்லை. முகஸ்துதி பண்ணுவது என்ருல் மேலே இருப்பவனை இந்திரனே என்றும் சந்திரனே என்றும் புகழ்ந்தால் போதும் என்று சிலர் நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். இதைப்போலத் தப்பான அபிப்பிராயம் வேறு கிடையாது.

2

பழைய காலத்தில் எத்தனையோ புலவர்கள் இருந்தார்கள். இவர்களை ராஜாக்களும், ஜமீன்தார்களும் ஆதரித்து வந்தார்களென்றால் இவர்கள் புலமைக்காகவா ஆதரித்தார்கள்? ஒரு நாளும் இல்லை. இவர்கள் தங்கள் கவிப்புலமையை உபயோகித்து ராஜாவையோ, ஜமீன்தாரையோ மிக சாமர்த்தியமாக முகஸ்துதி செய்து கொண்டிருந்ததால் தான் இவர்களுக்கு ஆதரவு கிடைத்தது.

"கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி" என்பது போல் அந்த முகஸ்துதிக் கலையைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் ஒன்றுமில்லாதவனை இந்திரனே, சந்திரனே என்றால் ஒரு பழைய கவிராயருக்குக் கிடைத்த மரியாதைதான் கிடைக்கும். அந்தப் பழைய கவிராயர் தாம் செய்த தப்பிதத்தை எண்ணி உருகி பாடிய பாடலைக் கேளுங்கள்.

கல்லாத வொருவனை கற்று யென்றேன்
காடெறியு மரவனை நாடாள்வா யென்றேன்
பொல்லாத வொருவனை நானல்லா யென்றேன்
போர்முகத்தை யறியானைப் புலியே என்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூப்பற்றோளை
வழங்காத கையானை நான் வள்ளலென்றேன்
இல்லாது சொன்னேன், உனக்கில்லை யென்றான்
யானுமென் குற்றத்தால் ஏகின்றேனே.

ஆகவே பொய் சொன்னால் எப்படிப் பொருந்தச் சொல்ல வேண்டும் என்று சொல்லுகிறார்களோ அதைப் போலவே முகஸ்துதியும் பொருந்தச் செய்யவேண்டும்.

பொய்யாவது பொருந்தச் சொல்லிவிடலாம். ஆனால் முகஸ்துதி பொருந்தச் செய்வது மிகவும் கடினமான விஷயம். இதற்கு எதிராளி தம்மைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார், அவர் அபிலாஷை என்ன, எதைச் சொன்னால் அவர் திருப்திப் படுவார் என்றெல்லாம தெரிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

தம்மை விட அறிவாளி கிடையாது என்று எல்லாரும் தம்மைப் புகழ வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருப்பவரைப் பார்த்து,

"உங்களத்தனை பணம் வேறு யாருக்கு இருக்கிறது?" என்று சொன்னால் அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. அதே மாதிரி தன் பணப் பெருமையைப் பற்றியே எல்லோரும் புகழ வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருப்பவரைப் பார்த்து, அவர் புத்தி சாலித் தனத்தைப் புகழ்ந்தால் அவருக்குப் பிடிக்காது.

இன்னும் இவருக்கு வேண்டியவர் யார், வேண்டாதவர் யார், பிடித்த விஷயங்கள் என்ன, பிடிக்காத விஷயங்கள் என்ன என்றும் தெரியவேண்டியது மிகவும் அவசியம்.

ஏனெனில் தற்காலத்தில் நேரே ஆளையே முகஸ்துதி செய்தால் பலருக்குப் பிடிப்பதில்லை. இதற்காக அவர்களுக்குப் பிடித்தமான நாய்க் குட்டியையோ, குழந்தையையோ புகழ்ந்தால் அவர்களைப் புகழ்ந்தது மாதிரி கொள்கிறார்கள்.

இதெல்லாம் தெரிய வேண்டுமானால் நாம் யாரை முகஸ்துதி செய்ய விரும்புகிறோமோ, அவர்கள் வீட்டுக்குப் போய் அவர்கள் வேலைக்காரர்களை சிநேகம் பிடித்துக் கொண்டு, உளவு அறிய வேண்டியது மிகவும் அவசியம். இதெல்லாம் எவ்வளவு சிரமமான வேலை, எவ்வளவு சிலவு ஆகும் என்பதை இதுமாதிரி அலைந்த வர்களைக் கேட்டால்தான் தெரியும்.

தற்காலத்தில் யாரும் நேரிடை முகஸ்துதியை விரும்புவதில்லை. மறைமுகமாக முகஸ்துதி செய்தால்தான் திருப்திப் படுகிறார்கள்.

இது விஷயத்தை நமது கோர்ட் சேவகர்கள் வெகு நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள். உதாரணமாக, முன்சீப் ஒரு அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். வராந்தாவில் யாராவது இரண்டு கட்சிக் காரர்கள் நின்று பேசிக் கொண்டிருக்கலாம். அவர்கள் பேசுவது முன்சீப் காதிலும் விழுந்திருக்காது, முன்சீப் வேலையையும் கெடுத்திருக்காது. அவர்தான் வெயிலின் உக்கிரம் பொறுக்காமல், பங்காவுக்கடியில் அயர்ந்து நித்திரை போய்க் கொண்டிருக்கிறாரே! இருந்தாலும் சேவகன் அவரை முகஸ்துதி செய்வதற்காக பேசிக் கொண்டிருக்கும் கட்சிக்காரர்களைப் பார்த்து இரைந்து சத்தம் போடுவான். "என்னய்யா? துரை வேலை செய்து கொண்டிருக்

திருர்னு தெரியாமல் இப்படிக் கூச்சல் போடுறீங்களே" என்று கட்டிடமே அதிரும்படி கத்துவான். இந்தக் கத்தலைக் கேட்டு, தூங்கிக் கொண்டிருந்த முன்சீப் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருப்பார். இருந்தாலும் தூக்கத்தைக் கலைத்ததற்காக அவனைக் கோபித்துக் கொள்வார் என்று நினைக்கிறீர்களா? மாட்டார். இப்படி மறைமுகமாக சேவகன் தன்னை முகஸ்துதி செய்ததற்காகச் சந்தோஷப்படுவார். சம்பள உயர்வுக்குச் சிபார்சு செய்யும் தினம் வரும்போது அவனை ஞாபகம் வைத்துக்கொள்ளுவார்.

சிலருக்குத் தங்களையோ, தங்களைச் சுற்றியுள்ளவர்களையோ முகஸ்துதி செய்தால் பிடிக்காது. இவர்களை முகஸ்துதி செய்ய வேண்டுமானல், இவர்களுக்குப் பிடிக்காதவர்கள் யார் என்று தெரிந்து கொண்டு அவர்களை வாய் வலிக்க வைய வேண்டும். அப்பொழுதுதான் இவர்களுக்குத் திருப்தி ஏற்படும். எதிராளியை எவ்வளவுக் கெவ்வளவு மடையன் என்று வைகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு தங்களை புத்திசாலி என்று மெச்சினதாக இவர்கள் கொள்வார்கள்.

எனக்குத் தெரிந்த வரையில் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் தான் என் போன்ற எழுத்தாளர்களும், கலைஞர்களும். என் போன்றவர்களை முகஸ்துதி செய்ய வேண்டுமானல் எங்களைப் புகழ்ந்து பலனில்லை. மற்ற எழுத்தாளர்களையோ, அல்லது கலைஞர்களையோ குறை கூறினல்தான் நாங்கள் திருப்திப்படுவோம்.

இன்னும் முகஸ்துதி எந்த வகையிலும் பிடிக்காது என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். உண்மையிலேயே முகஸ்துதியை வெறுக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனல் இவர்களையும் முகஸ்துதி செய்வதற்கு வழி இல்லாமற் போகவில்லை. அவர்களுடைய காது கேட்க "அவருக்கு முகஸ்துதியே பிடிக்காது" என்று சொல்லி வையுங்கள். அவர் இதையே பெரிய முகஸ்துதியாகக் கொண்டு சந்தோஷப்படுவார்.

ஆக, யானைக்கு அர்ரம் என்றால் குதிரைக்கு குர்ரம் என்னும் எளிய மார்க்கம் முகஸ்துதி கலை சம்பந்தப்பட்டவரையில் இல்லை. ஒவ்வொரு ஆளுக்குத் தகுந்தபடி முகஸ்துதி எப்படிப் பண்ணுவது

என்பது தேர்ந்து தெளிய வேண்டிய விஷயம். அப்படியிருக்கும் பொழுது முகஸ்துதி செய்து முன்னுக்கு வந்தவர்களை இளப்பமாக பேசுகிறீர்களே, அது மட்டும் சுலபமா என்ன கேட்கிறேன்?



அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்ளுதல்

எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை தேறின ஒரு பையனுக்கு வேலை கிடைக்கவில்லை. அதற்காக ஒரு சர்க்கஸ் கம்பெனிக் காரரைப் பார்த்து வேலைகேட்டான். அவர் சொன்னார், "அப்பா என்னிடம் தற்சமயம் ஒரு குமாஸ்தா வேலையும் காலிகிடையாது. ஆனால் வேடிக்கை வேடிக்கையாக வித்தை செய்யும் குரங்கு ஒன்று என்னிடம் இருந்தது. அது சமீபத்தில் இறந்துவிட்டது. அதன் தோலை எடுத்து வைத்திருக்கிறேன். அதன் தோலை வேண்டு மானால் நீ போர்த்திக்கொண்டு குரங்கு மாதிரி ஆடு. சம்மத மிருந்தால் சொல்லு. இதைத் தவிர தற்சமயம் என்னிடம் வேறு ஒரு வேலையும் காலி கிடையாது" என்றார்.

எஸ். எஸ். எல். ஸி. தேறின பையன் வேறு வழியின்றி வேலையை ஒப்புக்கொண்டான். அன்றிலிருந்து குரங்குத்தோலை போர்த்திக்கொண்டு, குரங்குபோல் நடிக்கத் தொடங்கினான்.

ஒரு நாள் உயரத்தில், கம்பியில் தொங்கிக் கொண்டிருந்த போது அகஸ்மாத்தாகக் கீழே இருந்த சிங்கக்கூண்டில் விழுந்து விட்டான். "ஆ" என்று வாயைத் திறந்து கொண்டு நின்று கொண்டிருந்த சிங்கத்தைக் கண்டதும் பையன் நடுங்கி விட்டான்.

அப்போது சிங்கம் அவனைப்பார்த்து,"அப்பா, கவலைப்படாதே. நீ எப்படி நிஜக் குரங்கு அல்லவோ அதைப் போலவே நானும் நிஜச் சிங்கம் அல்ல. நானும் உன்னைப்போல் வேலை கிடைக்காமல் இந்த மாதிரி வேஷம் போட ஆரம்பித்தேன்" என்று சிங்கம் சொல் லிற்று. இதைக் கேட்டு பையன் ஆறுதல் அடைந்தான். ஆனால் சிங்க வேஷத்தில் இருந்தவன் ஆறுதல் அடையவில்லை. "என்னடா நம்

அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளாமல் விட்டு விட்டோமே" என்று பயந்து, அந்த சிங்க வேஷதாரி, குரங்கு வேஷதாரியைப் பார்த்து "நீ எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை கொடுத்திருப்பதால் உனக்கு குரங்கு வேஷம் கிடைத்தது. நான் பீ. ஏ. பாஸ் பண்ணி யிருப்பதால் எனக்கு சிங்க வேஷம் கிடைத்தது" என்று பெருமை யாகச் சொல்லிக்கொண்டான்.

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண் என்பதைப் போல் சர்க்கஸில் சிங்க வேஷம் போட்டாலும் அந்த நபருக்கு தம் அந்தஸ்தில் கண்.

பார்க்கப்போனால் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதில் கண்ணுயில்லாதவர்கள் யார்தான் இருக்கிறார்கள், சொல்லுங்கள்!

பெரிய மனிதர்களைப்பற்றி பேசும் பொழுதெல்லாம் அவர் தமக்கென வாழா பிறர்க்குரியாளர் என்று சிலர் பெருமையாகக் குறிப்பிடுவதுண்டு. இந்த லட்சணம் பெரிய மனிதர்களுக்கு மட்டும்தான் இருப்பது போலவும், நம்மைப் போன்றவர்களுக்குக் கிடையாது என்றும் இவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பார்க்கப் போனால் உலகில் யார்தான் தனக்கென வாழுகிறார்கள்? எல்லாரும் பிறருக்காகத்தான் வாழுகிறோம்? பெரியவர்கள் ஒரு விதத்தில் பிறருக்காக வாழ்ந்தால், நாம் இன்னொரு விதத்தில் பிறருக்காக வாழ்கிறோம். பிறருக்காகப் பால் குடிக்கிறோம். பிறருக் காக நம் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே முனைந் திருக்கிறோம்.

இந்த அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வது இருக்கிறதே, மகா கஷ்டமான காரியம்.

முதலில் இந்த ஆடை விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நம் நாட்டில் அடிக்கும் வெய்யிலுக்கு நமக்கெல்லாம் ஆடை ஒரு வேஷ்டியும், துண்டும் இருந்தால் போதும். காலுக்கு ஒரு மட்டச் செருப்பு இருந்தால் போதும். ஆனால் வேஷ்டியும் துண்டும் மட்டும் போட்டுக் கொண்டிருந்தால் ஜனங்கள் நம் அந்தஸ்தை பற்றி என்ன நினைப்பார்கள்? அதற்காக, எவ்வளவு வேர்த் தாலும், விறு விறுத்தாலும் கவனிக்காமல், உள்ளே ஒரு பனியன்

அதற்கு மேலே ஒரு ஷர்ட், அதற்கு மேலே ஒரு வெயிஸ்ட் கோட், அதற்கு மேலே ஒரு கோட் என்று இப்படி அடுக்கடுக்காகப் போட்டுக் கொள்கிறோம். இது போதாது என்று 'டை' என்னும் துணியைக் கொண்டு கழுத்தில் சுருக்கு வேறு போட்டுக் கொள் கிறோம். காலிலோ மேஜோடு, அதற்கு மேலே காலை இறுகப் பிடிக்கும் ஜோடு. ஜோடு எத்தனைக் கெத்தனை காலை இறுக்கிப் பிடிக்கிறதோ அத்தனைக் கத்தனை நம் அந்தஸ்து உயர்வு என்று நினைத்துக் கொண்டு காலைச் சித்திரவதை செய்கிறோம்.

எனக்குத் தெரிந்த வரை இம்மாதிரி ஜோடு போட்டுக் கொண்டு தவிப்பவர்கள் எல்லாம் எப்படா வீட்டுக்கு வருவோம், ஜோடை கழற்றி எறிந்துவிட்டு ஹாய்யாக இருப்போம் என்று நினைப்பவர்கள் தான். "தாதி மனம் நீர்க்குடத்தே தான்" என்பதே போல் எத்தொழிலைச் செய்தாலும்' ஏதவத்தை பட்டாலும், இவர்கள் மனமெல்லாம் இவர்கள் காலைக் கடித்துக்கொண் டிருக்கும் ஜோட்டின்மீதுதான் இருக்கும்.

அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இம்மாதிரி சட்டையும், ஜோடும் போட்டுக்கொண்டு நாள் முழுதும் அவஸ்தைப் படுவது சுலபமான காரியமா என்ன?

அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, வரவுக்கு மிஞ்சி எவ்வளவு செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்று தெரிந்தால் இந்த அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளும் விஷயம் சுலபம் இல்லை என்று நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்.

என் பக்கத்து வீட்டு நண்பர் இத்தனை நாளும் எத்தனையோ கண்யமாக தம் வரவுக்குள் செலவை நடத்திக்கொண்டு வந்தார். அவர் வீட்டுக்குப் போனால் முதலில் கூடத்தில் போட்டிருக்கும் பிரம்பு நாற்காலியில்தான் நமக்கெல்லாம் உட்காரத் தோன்றும். ஆனால் அவர் நம்மை நாற்காலியில் உட்கார விடமாட்டார். "ஐயையோ அந்த பிரம்பு நாற்காலியில் உட்காராதேயுங்கள் ஸார், ஈஸி சேரிலே உட்காருங்கள் ஸார்" என்பார்.

"என்னய்யா பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்தால் நாற்காலி தேய்ந்து போய்விடும் என்று பயப்படுகிறீரா?" என்று கேட்டால்,

"அதற்குச் சொல்லவில்லை ஸார், அதற்கு நாற்காலி என்று பெயரே யொழிய அதற்கும் நம்மைப்போல் இரண்டு கால்தான் இருக்கிறது. நீங்கள் எல்லாம் மாத்திரம் இரண்டு காலில் நிற்க முடியும், என்னுல் முடியாதா என்று நம்முடன் போட்டி போடப் பார்க்கிறது" என்று வேடிக்கையாகப் பதில் சொல்வார்.

அறையின் ஓரமாகப் போட்டிருக்கும் மேஜையின் மீது நாம் கையில் கொண்டு வந்திருக்கும் சாமான் எதையாவது வைக்கப் போனுல், "ஸார்! ஸார்! அந்த மேஜையிலே வைக்காதீங்கோ ஸார், அந்த மேஜைக்கு மூன்று கால்தான் இருக்கு. சாமான் எதையும் மேலே வைத்தால் மேஜை குட்டிக்கரணம் போட ஆரம் பித்து விடும்" என்று சொல்வார்.

இப்படியெல்லாம் தம் ஒடிந்த நாற்காலிகளைப்பற்றியும், ஒடிந்த மேஜைகளைப்பற்றியும் பெருமையடித்துக் கொண்டு வந்த அடுத்த வீட்டு நண்பர், இப்பொழுது யார் என்ன சொன்னுர் களோ, தெரியவில்லை, தம் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ள ஆரம்பித்துவிட்டார்.

புதிது புதிதாக சோபா செட்டுகள் வாங்கிப் போட்டிருக்கிருர். ஒவ்வொரு ஜன்னலையும் காற்று வராமல் கர்டன் துணி வைத்து அடைத்து விட்டார். வாசலில், அர்த்தமில்லாமல் ஒரு கூர்க்கா சேவகனையும் நிறுத்தி வைத்திருக்கிருர்.

அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, எத்தனையோ சமயங்களில் பட்டினிகூட கிடக்க வேண்டும் தெரியுமா உங்களுக்கு?

யாராவது ஒரு நண்பர் வீட்டில் போய் தங்கியிருக்கிருேம். அல்லது அவர்கள் வீட்டுக்கு கல்யாணம் அல்லது வேறு ஏதோ விசேஷமாகப் போகிருேம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது நாம் எவ்வளவுக் கெவ்வளவு குறைத்துச் சாப்பிடு கிருேமோ, அவ்வளவுக் கவ்வளவு நம் அந்தஸ்தை ஜனங்கள் அதிகமாக மதிப்பிடுவார்கள் என்று நம்மிடை ஒரு எண்ணம் இருக்கிறது. இதற்காக எத்தனை பேர் வயிற்றைக் காயப் போட்டுக் கொண்டு, நண்பர்கள் வீட்டில் என்ன கொடுத்தாலும்

போதும், போதும் என்று சாப்பாட்டையும், டிபனையும் குறைத்துக் கொள்கிறார்கள் என்கிறீர்கள்?

நான்கூட இந்த இனத்தைச் சேர்ந்தவன்தான். எந்தக் கல்யாணத்துக்குப் போனாலும் சரி, அல்லது எந்த நண்பர்கள் வீட்டுக்குப் போனாலும் சரி வயிறாரச் சாப்பிடமாட்டேன். கல்யாணச் சாப்பாடு முடிந்ததும், முடியாததுமாகப் பக்கத்தில் எங்கே ஹோட்டல் இருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு போய் வயிறாரச் சாப்பிட்டுவிட்டு வருவேன்.

ஆனால் எல்லா இடங்களிலுமா ஹோட்டல் இருக்கிறது? எல்லா இடங்களிலுமா கல்யாணச் சாப்பாடு ஆனதும் ஆகாதது மாகப் பக்கத்தில் ஹோட்டல் எங்கே இருக்கிறது என்று தேடிக் கொண்டு ஓட முடிகிறது! அப்பொழுதெல்லாம் நம் அந்தஸ்தின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு இடுப்பு பெல்ட்டை இறுக்கிக் கட்டிக் கொண்டு பட்டினி கிடக்க வேண்டியதுதான். என்ன பண்ணுகிறது? அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வது சுலபமான காரியமா என்ன?

தங்கள் அந்தஸ்தைக் காப்பாற்றுவதில் இந்தப் புருஷர்கள் எத்தனை அக்கரையாய் இருக்கிறார்கள் என்பதை சில மனைவி மார்கள் நன்கு தெரிந்து வைத்துக் கொண்டு அதை தங்களுக்குச் சாதகமாக உபயோகிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். மனைவி உடுத்திக் கொண்டிருக்கும் புடவையைக் கொண்டும், அவள் போட்டுக் கொண்டிருக்கும் நகையைக் கொண்டும்தான் புருஷனுடைய அந்தஸ்தை மதிப்பிடுவது என்று முக்கால் வாசி இடங்களில் வைத்திருக்கிறார்கள் அல்லவா? இதற்காகவே எத்தனையோ இடங்களில் மனைவியின் பிடிவாதம் இல்லாமலே புருஷர்கள் வலுக்கட்டாயப்படுத்தி மனைவிக்கு புதுப் புடவையும், புது நகைகளும் வாங்கிக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

இன்னும் அந்தஸ்தைக் காப்பாற்றுவதற்காகவே எத்தனையோ வீண் செலவுகள் செய்ய வேண்டியிருக்கிறது. முதல் வகுப்பு வண்டியிலோ, இரண்டாம் வகுப்பு வண்டியிலோ பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு சின்னப் பெட்டியானாலும்

நாம் தூக்காமல், போர்ட்டர் தயவை நாடவேண்டி யிருக்கிறது. பிறர் நம் அந்தஸ்தைப் பற்றித் தாழ்வாகக் நினைத்துக் கொள்வார்களோ என்று பயந்து கொண்டு அவன் கேட்ட கூலியை மறு பேச்சின்றி அழுது தொலைக்கவேண்டி யிருக்கிறது. காலால் நடக்க வேண்டும் என்று எவ்வளவோ ஆசையாக இருந் தாலும் அந்தஸ்து குறைந்து விடுமோ என்று பயந்து கொண்டு டாக்ஸியிலோ, டாக்ஸி கிடைக்காவிட்டால் ஜட்கா வண்டியிலோ போகவேண்டி யிருக்கிறது.

நாம் கொஞ்சம் அந்தஸ்தைக் காப்பாற்றுவதில் அக்கரை கொண்டவர் என்று டாக்ஸிக்காரனுக்கோ, ஜட்கா வண்டிக் காரனுக்கோ தெரிந்தால் போதும், அவன் வைத்தது தான் சட்டம், அவன் கேட்டது தான் வாடகை. நாம் கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இப்படியெல்லாம் பண நஷ்டப் படுவது சுலபமான காரியமா என்ன ?

இன்னும், தங்கள் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வதில் அக்கரையுள்ளவர்கள், மற்றவர்களைப் போல தங்கள் பெண்ணுக்கோ, பிள்ளைக்கோ கல்யாணம் பண்ண முடியுமா? ஊரில் உள்ள எல்லாரையும் அழைத்தாக வேண்டும், எல்லாருக்கும் நல்ல விருந்து அளித்தாக வேண்டும், அனுவசியமான தடபுடல் செலவுகள் எல்லாம் செய்தாகவேண்டும், கடைசியில் பெரிய பாடகரையோ, பாடகியையோ கொண்டு கச்சேரி வைக்க வேண்டும். இதெல்லாம் சுலபமான காரியமா என்ன? நீங்களே சொல்லுங்கள்.

இதையெல்லாம் வேண்டுமானுல் பணச் செலவு தானே, கடனே, கிடனே வாங்கித் தொலைத்து செய்துவிடுகிறோம் என்று செய்துவிடலாம். ஆனால் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வ தற்காக, யாருடனும் கல கலப்பாகப் பேசாமல் எப்பொழுது பார்த்தாலும் உம்மணு மூஞ்சி மாதிரி முகத்தை வைத்துச் செல்லு கிறார்களே அதுதான் எனக்கு மிகவும் கஷ்டமாய் இருக்கிறது.

சுபாவத்திலேயே நான் யாருடனும் சௌஜன்யமாகவே பேசும் வழக்கமுடையவன். யாரைக் கண்டாலும் கல கல வென்று பேசுவேன். ஆங்கில மோஸ்தரில், அறிமுகம் செய்து வைத்தால் தான் பேசுவது என்று இருக்கமாட்டேன். ஆனால் இம்மாதிரி கல கலப்பாகப் பேசுவது அந்தஸ்துக் குறைவு என்று யாரோ என் மனைவியிடம் சொல்லிவிட்டார்கள்.

அதுதான் சாக்கென்று என் மனைவி என்னிடம் சண்டைக்கு வந்து விட்டாள். நானும் என் அந்தஸ்தைக் காப்பாற்றுவதற்காகவும், மனைவிக்குப் பயந்து கொண்டும், பஸ்ஸில் போனாலும் சரி, ரயிலில் போனாலும் சரி பக்கத்திலிருப்பவர்களுடன் பேசுவதில்லை என்று வைத்திருக்கிறேன். மற்றவர்கள் வேடிக்கை வேடிக்கையாக பேசும் பொழுது, நாமும் அந்தப் பேச்சில் கலந்து கொள்ள மாட்டோமா என்று தோன்றும். பேசவேண்டுமென்று ஆசையாகவும், வெகு ஆத்திரமாகவும் இருக்கும். ஆனால் நம் அந்தஸ்தைப்பற்றி அவர்கள் குறைவாக நினைத்துக் கொண்டு விட்டால் என்ன பண்ணுகிறது என்று பேசமாட்டேன்.

ஆக இப்படி எத்தனையோ வழிகளில் அந்தஸ்தைக் காப்பாற்றி கொள்வதற்காகக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்வது என்ன, சுலபமா, கேட்கிறேன்.

கடன் கொடுங்கள்

"என்னய்யா! யாரைப் பார்த்துக் கடன் கேட்கிறீர்? என்னையா?......உமக்கா?" என்று நீங்கள் முகத்தைச் சுளித்துக் கொள்வது தெரிகிறது. ஆனால் நான் உங்களைக் கடன் கேட்கவில்லை.

உங்களைத்தான் கடன் கேட்கிறேனோ என்று பயந்து கட்டுரையைக் கூடப் படித்துப் பார்க்காமல் ஓடிவிடாதீர்கள். நான் உங்களைக் கடன் கேட்கவில்லை. பயப்படாமல் தைரியமாகக் கட்டுரையைப் படியுங்கள்.

நான் கொஞ்ச காலமாகவே யாரையும் கடன் கேட்பதில்லையென்று வைத்திருக்கிறேன். நான் கடன் கேட்டால் யாரும் கொடுப்பதில்லை; அதுதான் இதற்குக் காரணம்.

தமிழ் நாட்டில் என்னமோ ஏழை எழுத்தாளர்களை நம்பி யாரும் கடன் கொடுப்பதில்லை. 'குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்படவேண்டும்' என்று ஒரு பழமொழி உண்டே, அதை எழுத்தாளர்கள் விஷயத்தில் எல்லாரும் கையாளுகிறார்கள். பணக்காரர்களிடம் கடன் கொடுத்து ஏமாறினாலும் ஏமாறலாம், ஏழை எழுத்தாளர்களிடம் கொடுத்து ஏமாறக்கூடாது என்பது அவர்கள் எண்ணம். அத்தனைக்கும், முன்பு எப்படியோ, இப்பொழுது தமிழ் எழுத்தாளர்களிடமிருந்து பண வசூல் பண்ணக் கட்டாயம் வழி இருக்கிறது.

தமிழ் எழுத்தாளன் மட்டும் அறுபது வயது வரை, பட்டினி கிடந்தாலும் சாகாமல், எப்படியோ உயிர் உடலைவிட்டுப்

போகாமல், பார்த்துக்கொண்டு விட்டானுனல், அந்த அதிசய மான சாதனையைப் பாராட்டுவதற்காகத் தமிழர்கள் மணி விழாக் கொண்டாடுவது என்று வைத்திருக்கிருர்கள். அப்பொழுது கொஞ்சம் பணம் திரட்டி அந்த எழுத்தாளனுக்குக் கொடுப் பார்கள்.

இந்தப் பணத்தை நம்பி எழுத்தாளர் களுக்குக் கடன் கொடுக் கலாம். ஆனல் அப்படியும் யாரும் அவர்களை நம்பிக் கடன் கொடுப்பதில்லை.

"வாங்கின கடன்களை அப்போதைக் கப்போது அடைக்கா விட்டாலும், மணி விழாக் காலத்திலாவது கட்டாயம் அடைத்து விடுவோம் என்ற நம்பிக்கை எழுத்தாளர்களாகிய எங்கள் விஷயத்தில் இருக்கிறதே, அப்படி இருக்க ஏன் யாரும் எங் களுக்குக் கடன் கொடுக்கமாட்டேன் என்கிருர்கள்?" என்று அநேக எழுத்தாளர்கள் குறைப்படுகிருர்கள்.

ஆனல் உண்மை என்னவென்ருல், கடன் கொடுப்பவர் களுக்கு எழுத்தாளர்கள் விஷயத்தில் இந்த நம்பிக்கையும் கிடை யாது. எல்லா எழுத்தாளர்களுக்கும் மணி விழா நடக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்குக் கிடையாது. இதனல் மிகவும் உயர்ந்த எழுத்தாளர்கள், அல்லது சாமர்த்தியம் வாய்ந்த எழுத்தாளர் களுக்குத்தான் மணி விழா நடக்கும் என்று இவர்கள் கொள்வதாக நீங்கள் நினைக்கக் கூடாது. மணி விழா நடக்கும்வரை, அதாவது அறுபது வயதுவரை, உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருக்க வேண்டுமே, அது எல்லா எழுத்தாளர்களாலும் முடியுமா என்பது தான் இவர்கள் கொள்ளும் சந்தேகம். தமிழ் எழுத்தாளர்கள் எல்லாம் தங்கள் வயதை ஒரு 20 வருஷமாவது உயர்த்திச் சொல்லி மணி விழா நடத்திக்கொண்டால்தான் நடத்திக்கொண்டது, இல்லாவிடில் முடியாது என்பது இவர்கள் எண்ணம்.

ஆகவேதான் எழுத்தாளனுகிய நான் உங்களைக் கடன் கேட்க வில்லை என்றேன். ஆனல் நான் கடன் கொடுங்கள் என்று சொல்வது எனக்கல்ல. பிறர் யார் வந்து கேட்டாலும் இல்லை யென்று சொல்லாமல் கொடுங்கள் என்றுதான் சொல்ல வந்தேன்.

யார் வந்து என்ன கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் தர்மம் கொடுத்தால் மோட்சம் கிடைக்கும் என்று முன்னோர்கள் சொல்லியுள்ளார்கள். அதையொட்டி யார் வந்து என்ன கேட்டாலும் நீங்கள் தர்மமாகக் கொடுக்கா விட்டாலும் இரவலாகக் கொடுத்தால் நமக்கென்றே தனி மோட்சம் கிடைக்காவிட்டாலும் இரவல் மோட்சமாவது கிடைக்கும் என்று நாம் கொள்ளலாம். ஆனால் நான் கொடுக்கச் சொல்வது இதற்காக அல்ல.

மோட்சத்தை ஆசையாகக் காட்டி வேலை வாங்கினதெல்லாம் பழைய காலம். இப்பொழுதெல்லாம் யாரும் மோட்சத்துக்குப் போக ஆசைப்படுவதில்லை. தங்களுக்கு வேண்டியவர்கள் எல்லாம் இன்னொரு இடத்திற்குப் போயிருக்கும்போது தாங்கள் மாத்திரம் தனியாக மோட்சத்தில் இருப்பானேன் என்று இவர்கள் கருது கிறார்கள் போலும்!

ஆகவே, இந்த உலகத்திலே உங்களுக்கு விளையக்கூடிய நன்மைகளைக் கருதித்தான் நான் கடன் கொடுங்கள் என்றேன்.

நமக்கு வேண்டாதவர்களை நம்மிடம் வர வொட்டாமல் விரட்டி யடிப்பதற்கும், நம்மிடம் ஏதாவது பெரிய காரியம் சாதித்துக் கொள்வதற்காக நம்மைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பவர்கள் நம்மை அணுகவொட்டாமல் அடிப்பதற்கும்தான் நான் உங்களை எல்லாருக்கும் கடன் கொடுக்கச் சொன்னேன்.

தங்களுக்குப் பிடிக்காத அத்தானோ, அம்மாஞ்சியோ ஊரிலிருந்து வந்து அளவுக்கு மேல் வீட்டில் தங்க ஆரம்பித்து விட்டால், தங்கள் அதிருப்தியைக் காட்டுவதற்கு தங்கள் மனைவியைக் கொண்டு வீட்டுப் பாத்திரங்களை உடைக்கச் சொல்வது அல்லது குழந்தைகளை அடிக்கச் செய்வது என்று சிலர் வைத்திருக்கிறார்கள்.

பாத்திரங்கள் விலை தூக்கி விற்கும் இந்தக் காலத்தில் பாத்திரங்களை உடைப்பதைப் போன்ற பயித்தியக்காரத்தனமோ, அல்லது குழந்தைகளை அருமையாக வளர்க்க வேண்டிய பெற்றோர்கள் அவற்றை அடிப்பது போன்ற அசட்டுத்தனமோ வேறு கிடையாது.

நீங்கள் மாத்திரம் ஒரு ஐந்தோ, பத்தோ அந்த அத்தானுக்கோ, அம்மாஞ்சிக்கோ கடன் கொடுத்து வைத்தீர்களானால், அந்த ஐந்தையோ, பத்தையோ திருப்பிக் கொடுக்க வேண்டுமே என்ற பயத்திற்காக அந்த அத்தானோ, அம்மாஞ்சியோ நம்மைத் திரும்பிப் பார்க்கமாட்டார்கள்.

இதே மாதிரி, நமக்குப் பிடிக்காத வேலைக்காரர்களை, நம் மீது பழி இல்லாமல் வேலையைவிட்டுத் துரத்துவதற்கும், கடன் கொடுப்பதைப் போன்ற நல்ல வழி கிடையாது.

நீங்கள் கொடுத்த பத்தையோ இருபதையோ, உங்களுக்குத் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்பதற்காக வேலையை விட்டே ஓடிப்போகும் வேலைக்காரர்களும் உண்டு.

'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று' என்று சொல்கிறார்களே, அது இந்தக் கடன் கொடுக்கும் விஷயத்தில் மிகவும் பொருந்தும். பின்னால் வரப்போகும் பெரிய செலவை முன்னாலேயே மிகச் சிறிய தொகையைக் கொண்டு தடுப்பதுதான் இக் கடன் கொடுக்கும் தந்திரம்.

இது தெரியாமல் சிலர் யாருக்கும் கடன் கொடுப்பதில்லை யென்று வைத்திருக்கிறார்கள். அதற்குப் பதில் மற்றவர்கள் தலையைச் சுரண்டி எவ்வளவு கடன் வாங்க முடியுமோ அவ்வளவு வாங்குவது, பிறகு திருப்பிக் கொடுக்காமல் நாமம் போடுவது என்று வைத்திருக்கிறார்கள். கடன் கொடுத்தவர்கள் திருப்பிக் கேட்காவிட்டால் இவர்கள் கொள்ளும் குதூகலிப்பு சொல்லத் தரமன்று.

ஆனால் கொடுத்ததை யெல்லாம் பின்னால் வட்டியும் முதலு மாகத் திருப்பி வாங்குவதற்காக அவர்கள் செய்த சூட்சி இது என்று இவர்களுக்குத் தெரியாது. நடந்து போய் கடன் கொடுத்து விட்டு, அதை நாலாயிரம் ரூபாயாகத் திரும்பி வாங்குவதற்காகத் தான் அவர்கள் இந்த சூட்சி செய்கிறார்கள்.

இது தெரியாமல் நான் கலாசாலையில் வாசித்துக் கொண் டிருந்த காலையில் என் நண்பன் பாலுவுடன் அவன் கூப்பிட்ட

ஹோட்டலுக் கெல்லாம் சென்று அவன் செலவில் சாப்பிட்டேன்; அவன் அழைத்துக் கொண்டுபோன சினிமாவுக் கெல்லாம் போய் அவன் செலவில் பார்த்தேன்.

அப்பா ஊரிலிருந்து அனுப்பிய பணத்தை யெல்லாம் லாபம் பண்ணுகிறோம் என்று நினைத்துக் கொண்டுதான் அப்படிச் செய்தேன். அவன் எனக்குப் பின்னுல் செய்த சதியை நினைத்துப் பார்க்கும்போது அவனுக்கு அப்பொழுதே ஒரு ஐந்தோ, பத்தோ கடன் கொடுத்திருக்கலாம் என்று தோன்றுகிறது. கடனைத் திருப்பிக் கொடுக்கப் பயந்து கொண்டு அவன் என்னைத் திரும்பிப் பார்த்திருக்க மாட்டான். ஆனல் அப்படிச் செய்யாமற் போனதால் இப்பொழுது விபரீதம் விளைந்து விட்டது.

நண்பன் பாலு, இப்பொழுது மச்சினன் பாலுவாக மாறி விட்டான். தான் செலவு செய்த ஹோட்டல் செலவையும், சினிமாச் செலவையும் ஒன்றுக்கு ஆயிரம் பங்காக என்னிடமிருந்து வசூலித்துக் கொண்டிருக்கிருன்.

ஆகவே உங்களை முன்கூட்டியே எச்சரிக்கை செய்கிறேன். யாரைக் கண்டாலும் கடன் கொடுங்கள். அப்பொழுது பின்னுல் அவர்களால் உங்களுக்கு ஒரு தொந்தரவும் ஏற்படாது.

புருஷர்களுக்கு ஆபத்து !

புருஷ குலத்துக்கு ஒரு பெரிய ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் புருஷர்கள் இதை உணராமல் இருக்கிறார்கள். இதைக் குறித்து முன் கூட்டியே எச்சரிக்கை செய்ய வேண்டியது புருஷ குலத்துக்கு நான் செய்ய வேண்டிய கடமை என்று உணர்ந்து இக்கட்டுரை எழுதுகிறேன்.

சரசுவை நான் கல்யாணம் பண்ணிக்கொண்ட சமயம், எல்லாரும் தங்கள் மனைவிகளைப்பற்றி நினைப்பது போல் தான் நானும் நினைத்தேன். ஏதோ வேளா வேளைக்குச் சமைத்துப் போடுவாள், வீட்டைக் கவனித்துக் கொள்வாள், பிறகு குழந்தை குட்டிகளையும் கவனித்துக் கொள்வாள் என்றுதான் நினைத்தேன்.

அனு பிறக்கும் வரை சரசு அப்படித்தான் இருந்தாள். படித்த பெண்ணா இத்தனை அடக்க ஒடுக்கமாக வீட்டு வேலையை யெல்லாம் கவனித்துக் கொள்வதுடன் அனுவுக்குப் புட்டிப்பால் கரைத்துக் கொடுக்கும் வேலையைக் கூடத்தானே ஏற்றுக்கொண்டு செய்கிறாள் என்று ஒரு சமயம் நான் சந்தோஷம் தாங்காமல் துள்ளிக் குதித்ததும் உண்டு.

ஆனால் சீக்கிரமே ஒரு பெரிய இடி என் தலையில் விழக் காத்திருக்கிறது என்று அப்போது நான் உணரவில்லை.

திடீரென்று ஒரு நாள் சரசு என்னைப்பார்த்து, “நான் பள்ளிக்கூடம் போகப் போகிறேன்” என்றாள்.

„பள்ளிக்கூடமா? எதற்குப் பள்ளிக்கூடம்? அதுதான் நீ எம். ஏ. பாஸ் பண்ணியிருக்கிறாயே?” என்று கேட்டேன்.

இதைக்கேட்டு சரசு கல கல வென்று சிரித்தாள்.

"நான் சேரப்போவது அந்தப் பள்ளிக்கூடம் அல்ல. ஹிந்திப் பள்ளிக்கூடம். இந்தத் தெருக்கோடியிலேயே ஒரு ஹிந்தி வகுப்பு ஆரம்பித்திருக்கிறார்கள். அதில் சேரப் போகிறேன்" என்று சொன்னாள்.

"சேரலாமா?" என்று என் உத்தரவைக் கேட்காமல், "சேரப்போகிறேன்" என்று சரசு தீர்மானமாகக் கூறிவிட்ட பிறகு அதை எதிர்த்துப் பேசினால் எனக்குத்தான் கெட்ட பெயர் கிடைக்கும் என்பது எனக்குத் தெரியும். நாம் சொன்னபடி பெண்டாட்டி கேட்காமற்போனால் அடங்காப் பிடாரியின் புருஷன் என்று நமக்குத்தான் கெட்ட பெயர் ஏற்படுமே யொழிய, அவளை யாரும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள் என்பது நீங்கள் அறிந்ததே.

ஆகவே, "நீ கிளாசுக்குப் போகும் நேரம் எனக்கு இடைஞ்சல் இல்லாமல் இருந்தால் பரவாயில்லை" என்று சொன்னேன்.

"அப்படி ஒன்றும் பிரமாத இடைஞ்சல் இல்லை. காலை ஏழு மணியிலிருந்து ஒன்பது மணிவரை, ஆக இரண்டு மணி நேரம் தான் வகுப்பு......"

"என்ன, காலை ஏழு மணியிலிருந்து ஒன்பது மணி வரையிலா? அப்படியானால் அந்தப் பள்ளிக்கூடத்தில் கல்யாணமாகாத பெண்கள் மட்டும்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களா?"

"ஏன்! எதற்காக இப்படிக் கேட்கிறீர்கள்?"

"இல்லை, கல்யாணமான பெண்களுக்குக் காலையில் சமையல் வேலை என்று ஒன்று இருக்கிறதே......"

"சரியாய்ப் போச்சு! இதற்குத்தானா இப்படி கல்யாணமான பெண்கள், கல்யாணமாகாத பெண்கள் என்று கேட்டீர்கள்? நான் என்னவோ, ஏதோ என்று பயந்து விட்டேன். சமையல் வேலை இருந்தால் என்ன? நான் குமுட்டியைப் பற்றவைத்து உலை

நீர் போட்டுவிட்டு போகிறேன். அதைக் கொஞ்சம் நீங்கள் கவனித்துக் கொள்ளக்கூடாதா?"

"ஆமாம், குழம்பு, கறி முதலியன?"

"அது இனி ராத்திரி ராத்திரி பண்ணிக்கொண்டால் போகிறது. நீங்கள் தான் தினம் என் சமையலினால் ஆபீசுக்கு நாழியாகிவிடுகிறது என்று கோபித்துக் கொள்கிறீர்களே? காலையில் மோர் சாதம் மட்டும் சாப்பிட்டால் நாழியாகா தோன்னே?"

"சரி, தூளியில் தூங்குகிற அனு விழித்துக்கொண்டால் என்ன பண்ணுகிறது?"

"இதுகூட உங்களுக்குத் தெரியாதா? கொஞ்சம் புட்டிப் பாலைக் கரைத்துக் கொடுங்களேன்!"

இதற்கு மேலும் நாம் ஆட்சேபணை சொன்னால் தாம்பத்ய கலகம் ஆரம்பித்து விடுமென்று பயந்து சரியென்று தலையை ஆட்டிவைத்தேன்.

அன்றிலிருந்து சரசு ஒழுங்காக ஹிந்தி வகுப்புக்குப் போக ஆரம்பித்தாள். நானும் அனுவும் ஒழுங்காகப் பட்டினி கிடக்க ஆரம்பித்தோம்.

ஏனெனில் எனக்குக் கல்லூரியில் எத்தனையோ வேண்டாத விஷயங்களை யெல்லாம் கற்றுக்கொடுத்த பள்ளிக்கூட அதிகாரிகள் சாதம் சமைப்பது எப்படியென்றோ, அல்லது குழந்தைக்குப் புட்டிப்பால் கரைத்துக் கொடுப்பது எப்படியென்றோ சொல்லித் தரவில்லை.

என்னை 25 வயது வரை வளர்த்து சரசுவிடம் ஒப்படைத்த என் தாயாராவது இந்த இரண்டு விஷயங்களை எனக்குச் சொல்லிக் கொடுத்திருக்கலாம். ஆனால் இம்மாதிரி ஒரு நெருக்கடி எனக்கு ஏற்படும் என்று என் தாயார் எதிர்பார்க்கவே யில்லையாதலால், தாயாரும் ஒன்றும் சொல்லிக் கொடுக்கவில்லை. ஆகவே நானும் அனுவும் காலையில் பட்டினி கிடக்கப் பழகிக் கொள்வதைத் தவிர

வேறு வழியில்லையென்று அப்படிப் பழகிக் கொள்ள ஆரம்பித்தோம்.

பெண்களுக்கென்று தனி ஹிந்தி வகுப்புகள் நடத்துகிறவர்களுக்கு, ஹிந்தி வகுப்புக்கு வரும் ஒவ்வொரு பெண்ணும் தன் வீட்டில் எத்தனை பேரைப் பட்டினி போட்டுவிட்டு வருகிறாள் என்பது தெரியுமா என்பது சந்தேகம்தான். தெரிந் திருந்தால் அவர்கள் அப்படி காலை வகுப்புகள் வைத்துக் கொள்ள மாட்டார்கள். இல்லை, தெரிந்துதான் உணவு நெருக்கடி இப்படியாவது கொஞ்சம் தீரட்டுமே என்றுதான் செய்கிறார்களோ, என்னமோ!

ஆனால் புருஷர்களைவிட அதிகமாகப் பெண்கள் போட்டி போட்டுக் கொண்டு ஹிந்தி படிப்பதைப் பார்க்கும்போது தமிழ் நாட்டுப் புருஷர்களின் எதிர்கால நிலைமையைப் பற்றி எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது.

எதிர்கால இந்தியாவில் தேச பாஷையாகிய ஹிந்தி தெரிந்தவர்கள்தான் மத்திய சட்ட சபையில் இருக்க முடியும். தமிழ் நாட்டில் ஆண்களைவிடப் பெண்கள் தான் அதிகம் ஹிந்தி கற்றுக் கொண்டு வருகிறார்களாதலால், தமிழ் நாட்டிலிருந்து மத்திய சட்ட சபைக்குச் செல்லும் எல்லாப் பிரதிநிதிகளும் ஸ்திரீகளாகவே இருப்பார்கள். அப்பொழுது அவர்கள் போடும் சட்டம் எல்லாம் நம்மைப் பாதிக்கக் கூடியதாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இது நிற்க.

காலையில்தான் பட்டினி கிடக்கிறோம், ராத்திரிச் சமையலாவது சரசு நன்கு சமைத்துப் போடுவாள் என்று ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஆசையும் நிராசையாக மாறுவதற்கு மேலண்டைத் தெருவுக்கு ஒரு அம்மாள் வந்து சேர்ந்தாள்.

ஸ்திரீகளுக்கென்று வீணை வகுப்பை இந்த அம்மாள் நடத்துகிறாள் என்று தெரிந்ததும், கல்யாண தினத்திலிருந்து மேல் பரணையில் தூங்கும் தன் வீணையின் ஞாபகம் சரசுவுக்கு வந்தது. இரண்டு வருஷமாகக் கவனிக்காமல் கிடந்த வீணைக்கு மெட்டுக் கட்டி, புதுத் தந்தி முதலியன போட்டு, சரசு வீணை வகுப்பில்

சேர்ந்து விட்டாள். வீணை வகுப்பு மாலை 5 மணியிலிருந்து 7 மணி வரை யாதலால், இரவு சாப்பாடும் திண்டாட்டத்தில் வந்து முடிந்தது. மாலை ஐந்து மணிக்கு முன்னால் சமைத்தால் ஆறிப் போய்விடும் என்று மாலை 7 மணிக்கு மேல் தான் சமைக்க ஆரம்பிப்பாள். 7 மணிக்கு சமைக்க ஆரம்பித்தால் சமையல் 9-மணிக்குத் தான் முடியும்.

அத்தனை நாழி கழித்து ஒன்பது மணிக்குச் சாப்பிடுவது எனக்கு ஒத்துக் கொள்ளாததுடன் பாதி நாள் சரசு சமையல் மீந்து வீணாகிவிடுமோ என்ற நிலைமையும் ஏற்பட்டு விட்டது. மாலை ஐந்து மணிக்கெல்லாம், வீணை வகுப்புக்காக சரசு வீட்டைப் பூட்டிக் கொண்டு, சாவியை ஒரு இடுப்பிலும், அனுவை இன்னொரு இடுப்பிலும், தூக்கிக் கொண்டு போய்விடுவாளாதலால், நான் 7 மணிக்கு முன்னால் வீட்டுக்குத் திரும்பினால் தெருவில் தான் நிற்கவேண்டும். (புருஷர்களுக்கு ஏற்படும் இத்தகைய நெருக் கடிகளை உத்தேசித்துத்தான் பழைய காலத்தில் வீடு கட்டினவர்கள் வீட்டுக்கு வீடு திண்ணை அமைத்தார்கள் போலும்!) இதை உத்தேசித்து ஏழு மணி வரையில் காரியாலயத்திலேயே ஏதாவது வேலையைப் பார்ப்பேன். இந்த வேலை அலுப்பாலும், காலை யிலிருந்து பட்டினி கிடந்ததாலும், வீடு திரும்பியதும் அசந்து போய்த் தூங்கி விடுவேன்.

இதற்காக சரசு, ஆறிப்போனாலும் பரவாயில்லை யென்று 5 மணிக்கு முன்னால் சமைத்து முடித்து விடுவது என்று ஆரம் பித்தாள். ஆனால் இரண்டு நாளில் இதற்கும் இடைஞ்சல் வந்து நேர்ந்தது. கீழண்டைத் தெருவில் ஒரு அம்மாள் தையல் வகுப்பு ஆரம்பித்து வைத்துவிடவே, சரசு அந்த வகுப்பிலும் சேர்ந்து விட்டாள். இந்த வகுப்புக்கு நேரம், மாலை 3 மணியிலிருந்து 5 மணி. ஆக இந்த மூன்று வகுப்புகளுக்கிடையில் என் சாப்பாட்டுப் பிரச்னை பெரிய பிரச்னையாகிவிட்டது. இந்த வகுப்புகளில் எல்லாம் சரசுவைத் தவிர இன்னும் எத்தனையோ கல்யாணமான பெண்கள் இருக்கிறார்களாதலால், அவர்களின் புருஷர்களும் இப்படித்தான் திண்டாடிக் கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே புருஷர்களாகிய நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து, மகாநாடு கூட்டி இந்த ஆபத்தைத் தவிர்க்க உடனே ஒரு வழி செய்துதான் ஆகவேண்டும். இம்மாதிரி வகுப்பு நடத்துகிறவர்களை நாம் சும்மா விட்டு வைக்கக்கூடாது. உடனே அங்கங்கே, கூட்டங்கள் கூட்டி, இம்மாதிரி ஸ்திரீகளுக்கென்று தனி வகுப்பு நடத்தும் ஒவ்வொருவரும், புருஷர்களுக்கு என்று தனி வகுப்பு பக்கத்திலேயே நடத்தும்படி வற்புறுத்த வேண்டும். அந்த வகுப்புகளில் அவர்கள் நமக்கு ஹிந்தியும் சொல்லிக் கொடுக்க வேண்டாம், வீணையும் சொல்லிக் கொடுக்க வேண்டாம், தையலும் சொல்லிக் கொடுக்க வேண்டாம்; எல்லாருக்கும் சமையல் வேலை சொல்லிக் கொடுக்கட்டும், போதும்.

இப்படி ஏதாவது ஒரு வழி பண்ணினால்தான் நாம் தப்பினோம். இல்லையோ, புருஷர்களுக்கு ஆபத்துத்தான்!

நல்லதுக்குக் காலமில்லை

நாம் வாசிக்கும் இந்த நிகழ் காலம் இருக்கிறதே, மிகவும் மோசமான காலம். இது நல்லதுக்கே காலம் இல்லை. நாம் யாருக்கு என்ன நன்மை செய்யப் புகுந்தாலும் அதைத் தப்பர்த்தம் பண்ணிக் கொள்கிறார்களே யொழிய, "என்னடா, இவன் நமக்கு இத்தனை பெரிய நன்மையைச் செய்யப் புகுந்தானே, இவனுக்கு வந்தனை கூறி, மனதிலிருத்தி வாயுற வாழ்த்த வேண்டும்" என்பது கிடையாது.

உதாரணமாக என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு மிகவும் பணக்காரப் பாட்டி ஒருத்தி இருந்தாள். அவளுடைய அத்தனை சொத்தும் எனக்குத்தான் வருவதாக இருந்தது. பாட்டி என்மீது மிகவும் அன்பு கொண்டிருந்தாளாதலால், நானும் பாட்டிமீது மிகவும் அன்பு கொண்டிருந்தேன். (பாட்டியின் சொத்துக்காக பாட்டியின்மீது அன்பு காட்டியதாக என்னைப் பற்றிச் சிலர் கூறும் கூற்று வீண் அபாண்டம் என்று இந்த சமயத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.)

சாகும் முன்னர் பாட்டி வியாதியால் மிகவும் அவஸ்தைப் பட்டாள். நான் பாட்டிமீது கொண்டிருந்த அன்பு என்னைச் சும்மா விட்டுவைக்கவில்லை. "என்னப்பா! பாட்டி இத்தனை அவஸ்தைப்படுகிறாளே, நீ பார்த்துக்கொண்டு சும்மா இருக்கிறாயே, ஏதாவது செய்யக்கூடாதா?" என்று என்னை அது கழுத்தைப்பிடித்து உந்திற்று. நான் அதற்காக, பகவானிடம், பயபக்தியாக "பகவானே! உனக்கு இரக்கம் இல்லையா? என் பாட்டி அவஸ்தைப்படுவதைப் பார்த்தும் பேசாமல் இருக்கிறாயே!

அவள் அவஸ்தையைப் போக்குவதற்கு ஒரு வழி பண்ண மாட்டாயா? பின்னால் வரப்போகும் சாவு, இப்பொழுதே வந்து விட்டால் அவள் அவஸ்தைப்பட வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?" என்று வேண்டிக் கொண்டேன்.

நான் பகவானை வேண்டிக்கொண்டது பகவான் காதில் விழுகிறதோ, இல்லையோ, பாட்டி காதிலாவது விழட்டும், அவள் நம் அன்பைக் கண்டு சந்தோஷப்படட்டும் என்று நினைத்து, என் பிரார்த்தனையைப் பாட்டி காதில் விழும்படியாகச் சற்று இரைந்தே சொன்னேன். ஆனால் நல்லதுக்குக் காலமில்லையாகை யால் பாட்டி என் செய்கையைத் தப்பர்த்தம் பண்ணிக்கொண்டு தன் உயிலை மாற்றி எழுதிவிட்டாள்!

இன்னொரு உதாரணம் பாருங்கள். என் நண்பன் ஒருவனுக்கு மாதம் ரூ. 500 சம்பளம். ஆனால் மிகுந்த செலவாளி. சம்பளம் வந்த இரண்டு நாளைக்குள் அத்தனை பணத்தையும் ஐசா, பைசா இல்லாமல் செலவழித்து விடுவான். இப்படியே பணத்தை டாம், டூம் என்று செலவழித்துக் கொண்டிருந்தால் பின்னால் ஆபத்து சம்பத்துக்கு என்ன பண்ணுவான் என்று எனக்குக் கவலை ஏற்பட்டது. ஆகவே, ஒவ்வொரு மாதமும் முதல் தேதி பிறந்ததும் அவனிடம் கைமாத்தாக ரூ. 100 கடன் கேட்பது என்று ஒரு வழக்கம் ஏற்படுத்தப் பார்த்தேன். இரண்டு மாதம் சிரித்த முகத் துடன் கொடுத்தவன் மூன்றாம் மாதம் சீறி விழ ஆரம்பித்தான். "என்னடா! வீணாகச் செலவழியும் பணத்தை நண்பனுக்குக் கடனாகக் கொடுத்து வைத்தால் நாளைக்கு நமக்குத்தானே நல்லது! அந்தப் பணம் பின்னால் நமக்கு உதவினாலும், உதவாவிட்டாலும் நம் சந்ததியாருக்குக் கட்டாயம் உதவுமே" என்று அவன் எண்ணிப் பார்க்கவே யில்லை. என்ன பண்ணலாம், நல்லதுக்குக் காலமில்லை!

ஆனால் என் விஷயத்தில்தான் காலம் இப்படியிருக் கிறதென்றால், நம் மந்திரிகள் விஷயத்திலும் இப்படியா இருக்க வேண்டும்?

இந்தியாவுக்குள்ளேயே மற்ற எல்லா மாகாண மந்திரி களுக்கும் வழிகாட்டிகளாக இருப்பவர்கள் நம் மாகாண மந்திரிகள்

தான். மதுவிலக்கை முதல் முதலாகக் கொண்டுவந்தது எந்த மந்திரிகள்? நம் மந்திரிகள். பாரதியார் வாக்குப்படி எல்லாரும் இந்நாட்டு மன்னராக இருக்க முடியாவிட்டாலும், எல்லாரும் இந்நாட்டு மந்திரிகளாக இருக்க முடியும் என்று நிரூபிப்பதற்காக அடிக்கடி புதுப்புது மந்திரி சபைகள் ஏற்படுத்தியது எந்த மாகாணத்தில்? நம் மாகாணத்தில்தான். பஸ் போக்குவரத்தைத் தங்கள் ஏகபோக உரிமையாக்கிக் கொண்டு, "இஷ்டமிருந்தால் அதிகப்படி கட்டணம் கொடு, இல்லாவிடில் கையை வீசிக் கொண்டு (மேடையில்) நட" என்று தைரியமாகக் கேட்டது எந்த மந்திரிகள்? நம் மந்திரிகள்தான்.

ஆக இதுமாதிரி எத்தனையோ விஷயங்களில் மற்ற எல்லா மாகாணங்களுக்கும், வழிகாட்டிய நம் மாகாண மந்திரிகள், ஜனங்களிடமிருந்து புதுப் புது வரி வசூலிக்கும் விஷயத்திலும் வழிகாட்ட வந்தால், அதற்கு இத்தனை ஆர்ப்பாட்டமா? இத்தனை எதிர்ப்பா? இத்தனை கூச்சலா?

சுயராஜ்யத்தின் அருமை பெருமை தெரியாத மக்கள் யாராவது இருக்கிறார்கள் என்றால், அது தமிழ் மக்கள்தான் என்று கூசாமல் சொல்லாம். பிரிட்டிஷ் சர்க்கார் ஆண்டு வந்தது போலவே நம் மாகாண சர்க்காருக்கும் ஆளத் தெரியாதா, என்ன? ஆனால் அப்படி ஆண்டால் அந்த சர்க்காருக்கும், இந்த சர்க்காருக்கும், வித்தியாசம் இல்லாமலே போய், சுயராஜ்யம் கிடைத்து விட்டது என்கிற விஷயமே யாருக்கும் ஞாபகம் இல்லாமல் போய்விடும்.

இந்த ஒரு விஷயத்தை உத்தேசித்தாவது நம் சர்க்கார் நமக்கு எத்தனை வரி போட்டாலும் தகும் என்றுதான் கூறுவேன். "நம் சுயராஜ்ய சர்க்காரே இப்படி வரி போடுகிறார்களே, நம் சுயராஜ்ய சர்க்காரே இப்படி வரி போடுகிறார்களே" என்று ஜனங்கள் சொல்லச் சொல்ல, நமக்கு நாம் அடைந்துவிட்ட சுதந்திரம் ஞாபகம் வரும். சுதந்திரம் அடைந்த அன்று துள்ளிக் குதித்துப் பாடிய, "ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே" என்கிற பாரதியாரின் பாட்டும் நினைவுக்கு வரும்.

ஆமாம், சர்க்கார் வரி போடுகிறார்கள், சர்க்கார் வரி போடுகிறார்கள் என்று ஜனங்கள் இப்படி அடித்துக் கொள்கிறார்களே, சர்க்கார் என்ன வரிப் பணத்தை வாங்கி, சீமைக்கு அனுப்பி விடுகிறார்களா, அல்லது தாங்கள் சாப்பிட்டு விடுகிறார்களா?

வேதாந்தமும் தெரியாமல், விஞ்ஞானமும் தெரியாமல் இத்தகைய விஷயங்களைப் பற்றி ஜனங்கள் பேசும்போது எனக்கு "நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்" என்று பாரதியாரைப் போல் ஆவேசமாகப் பேசத் தோன்றுகிறது.

வேதாந்த நோக்குடன் பார்த்தால் எல்லாம் மாயை. மந்திரிகள் வரி போடுவதும் இல்லை, நாம் வரி கொடுப்பதும் இல்லை. மந்திரிகளுக்கு நாம் வரி கொடுப்பதுபோல் ஒரு மாயத் தோற்றம் உண்டாகிறது. அதே மாதிரி நம்மிடமிருந்து வரி வாங்குவது போல் அவர்களுக்கு ஒரு மயக்கம் ஏற்படுகிறது. அவ்வளவுதான்.

ஐயா, வேதாந்தம் வேண்டாம், அதெல்லாம் பழங்காலத்துப் பாட்டி கதை, எதையும் விஞ்ஞான ரீதியாகத்தான் பார்க்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் இந்தக் காலத்தில் அநேகர் இருக்கிறார்கள்.

விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால் எந்தப் பொருளையும் அழிக்க முடியாது, எந்தப் பொருளையும் புதிதாக உண்டு பண்ண முடியாது. நாம் கொடுக்கும் வரிப்பணம் எங்கேயோ ஒரு இடத்தில் ஏதோ ஒரு உருவத்துடன் இருக்கிறதே யொழிய அதை மந்திரிகள் சாப்பிட்டுவிட முடியாது.

ஆக இரண்டு ரீதியிலும் நம் மந்திரிகள் எவ்வளவு வரி போட்டாலும் நாம் கவலைப்படத் தேவையில்லை.

சமீபத்தில் சர்க்கார் போட இருக்கும் விளம்பர வரி, சினிமா வரி, ஹோட்டல் வரி இந்த மூன்றும், இந்த மூன்று தொழில்களையும் நசித்துவிட்டால் என்ன பண்ணுவது என்கிற கவலை அநேகருக்கு ஏற்பட்டுவிட்டாற் போல் தோன்றுகிறது.

என்னைப் பொறுத்த வரையில் உலகம் உருப்பட வேண்டுமானால் இந்த மூன்று தொழில்களும் உடனேயே மறைந்துவிட வேண்டும் என்று கூறுவேன்.

காலையில் எழுந்ததும் எழாததுமாகப் புருஷன் பத்திரிகையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுவதால் எத்தனை தாம்பத்யக் கலகங்கள் நேரிடுகிறது என்கிறீர்கள்? மனைவிக்குக் கூட மாட ஒத்தாசையாக, காப்பிப் பொடி அரைத்துக் கொடுப்பதோ, கறிகாய் நறுக்கிக் கொடுப்பதோ, அல்லது குழாயை அடிப்பதோ முதலிய காரியங்களில் ஈடுபடாமல் புருஷன் பத்திரிகையை வைத்துக் கொண்டு உட்கார்ந்தால் எந்த மனைவிக்குத்தான் ஆத்திரமாக இருக்காது?

மாலையில் வீட்டுக்கு வந்தால் மனைவி வீட்டில் இருக்கிறாளா, அல்லது பக்கத்து வீட்டுக்காரியுடன் சினிமாவுக்குப் போய் விட்டாளா என்று சந்தேகப்பட்டுக் கொண்டே புருஷன் வீடு திரும்பவேண்டியிருக்கிறது. இன்னும் குழந்தைகள் பெரியவர்கள் ஆனபிறகு தாங்களாகத் தெரிந்துகொள்ள வேண்டிய அநேக விஷயங்களை சினிமாக்காரர்கள் இப்பொழுதே சொல்லிக் கொடுத்துவிடுகிறேன் என்கிறார்கள். இதையெல்லாம் உத்தேசித்து சினிமா இல்லாமல் இருப்பது நல்லது என்று கூறுவேன்.

கடைசியாக, இந்த ஹோட்டல்களினால் ஏற்படும் கெடுதல்கள் சொல்ல முடியாது. அவனவன் தான் யோக்யனா, அல்லது அயோக்யனா என்று போர்டு மாட்டிக் கொள்ளவேண்டும் என்று சட்டம் வந்தால், நேற்றுவரை யோக்யன் என்று சொல்லிக் கொண்டு வந்தவன், "நான் அயோக்யன்தான், என்னை நம்பாதே" என்று போர்டு மாட்டிக் கொண்டால் நமக்கு எப்படியிருக்கும்? இத்தகைய ரீதியில் கிட்டத்தட்ட எல்லா ஹோட்டல்களும், "இங்கு செய்யப்படும் பட்சணங்கள் நெய்யில் செய்யப்பட்டவை அல்ல" என்று போர்டு மாட்டிக்கொள்ள ஆரம்பித்ததிலிருந்து எனக்கு ஹோட்டல்களைக் கண்டால் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. (டிபன் சாப்பிடும் வேளைகளைத் தவிர).

இன்னும் உறவினர்களிடையில் உறவு விட்டுப் போனதற்கே காரணம் இந்த ஹோட்டல்கள்தான்.

உறவினர் உள்ள எந்த ஊருக்குப் போனாலும், "இவன் ஹோட்டலில் போய்த் தங்கக்கூடாதா, அல்லது ஹோட்டலில் போய்ச் சாப்பிடக் கூடாதா!" என்று உறவினர் நினைத்துக் கொள்ளுகிறார்கள். நாம் ஹோட்டலில் போய்த் தங்கத் தங்க உறவு விட்டுப் போகிறது.

ஆக இந்தக் காரணங்களைக் கொண்டு, இந்த மூன்று தொழிலும் மறைந்து போனாலும் நான் கவலைப்படப் போவதில்லை. ஆனால் அப்படி நசித்துவிடும்படியும் நம் சர்க்கார் விடமாட்டார்கள். பஸ்கள் நடத்துவதுபோல் இம்மூன்று தொழில்களையும் சர்க்காரே எடுத்து நடத்துவார்கள். அப்பொழுது நாம் பத்திரிகை நன்றாயில்லை யென்றோ, படம் நன்றாயில்லை யென்றோ, பலகாரம் நன்றாயில்லை யென்றோ சொன்னால், "இஷ்டமிருந்தால் எங்கள் பத்திரிகையைப் படி, எங்கள் சினிமாவைப் பார், எங்கள் ஹோட்டலில் சாப்பிடு; இல்லாவிடில் வெளியே நட" என்று சொல்வார்கள். அப்பொழுது நாம் வெளியே நடக்கத் தயாராய் இருக்க வேண்டும்—நடைபாதையில்தான், ரஸ்தாவில் அல்ல. ரஸ்தாவில் நடந்தால் போலீஸ்காரர்கள் பிடித்துக் கொள்வார்கள். அதாவது போலீஸ்காரர்கள் வரும் வரை நம்மை மோட்டார்க் காரர்கள் உயிருடன் விட்டுவைத்தால்.

என்
வீட்டுக்காரர்

"பழைய காலத்தில் ஆண ஜன்மம் எடுத்தவர்கள் எல்லாம் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே நடந்துபோவார் களாமே, ஏன்?" என்று கேட்டார் ஒரு நண்பர்.

"ஏனெனில் ஒவ்வொரு ஆணும், தான் ஒரு பெண்ணுக்கு வீட்டுக்காரர் என்ற மமதையினுல்தான்" என்றேன்.

"பின் இந்தக் காலத்து ஆண்கள் அப்படி ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு நடக்காமல், ஏதோ சாமானைத் தவறவிட்டுத் தேடுகிறவர்போல் பூமியைப் பார்த்துக் கொண்டே நடக்கிருர்களே, ஏன்?"

"ஏனெனில் தாங்கள்தான் வீட்டுக் காரர்கள் என்று பெரு மிதம் கொண்டிருந்த இவர்களுக்கும், ஒரு வீட்டுக்காரர் ஏற்பட்டு விட்டபடியினுல்தான்" என்றேன்.

'வீட்டுக்காரர்' என்ற பெயரை வைத்துக் கொண்டு பெண்ணைப் பாடாய்ப் படுத்திப் பம்பரமாய் ஆட்டிவைத்த இந்த ஆண்கள், இப்போது பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போனது மன்றி, அந்தப் பெண்களால் பாடாய்ப்படுத்திப் பம்பரமாய் ஆட்டிவைக்கப் படுவதைப் பார்க்கும் போதெல்லாம், அதைப்பற்றி எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது.

ஆனுல் ஒவ்வொரு ஆணுக்கும் ஒரு வீட்டுக்காரர் ஏற்பட்டு விட்ட பிறகு என்னத்தைச் செய்கிறது? வீட்டுக்காரர் என்ருல் ஜனங்கள் அப்படி நடுங்கும்படி ஆகிவிட்டது.

முதல் முதலில் ஜனங்கள் யமனைக் கண்டுதான் நடுங்க ஆரம்பித்தார்கள். பிறகு பக்தர்கள் சிலர் தோன்றி "நமக்கினி யம பயம் ஏது?" என்று பாட ஆரம்பிக்கவே அந்த பயம் நீங்கி, கடன் கொடுத்தவர்களைக் கண்டு பயப்பட ஆரம்பித்தார்கள். பிறகு இந்த பயம் போய் இன்ஷூரன்ஸ் ஏஜண்டுகளையும், மற்றும் பல வியாபார ஏஜண்டுகளையும் கண்டு பயப்படும்படியான நிலைமை ஏற்பட்டது. இந்த பயம் நீங்கியதும் வீட்டு வேலைக்காரர்களையும், வேலைக்காரிகளையும் கண்டு பயப்படும்படியான நிலைமை ஏற்பட்டது. இப்பொழுது அந்த நிலைமையும் போய் வீட்டுக்காரர்களைக் கண்டு பயப்படும்படியான நிலைமை ஏற்பட்டு விட்டது.

ஆனால் என் வீட்டுக்காரரைக் கண்டு நான் பயப்பட்டதற்கும், மற்றவர்கள் பயப்படுவதற்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு.

என் வீட்டுக்காரர் முதல் முதலில் எனக்கு வீட்டைத் திறந்து காண்பித்த போதே நான் பயப்பட்டேன்.

அவருக்காக, நான் "தேவலையே! வீடு வெகு ஜோராக இருக்கிறதே!" என்றேன்.

"என்ன ஜோர் ஸார்! பேத்தல் வீடு. இதோ பாருங்கள், மேலே ஓட்டில் எத்தனை ஓட்டைகள் இருக்கின்றன என்று. சமையல் அறையில் பாருங்கள். ஒரு பலகை உண்டா, ஒரு அலமாரி உண்டா, ஒன்று கிடையாது. என்னமோ அந்தக் காலத்தில் கட்டிப்போட்டது. அதற்குப் பிறகு பழுது பார்ப்பதற்குச் சமயமும் கிடைக்கவில்லை, பணமும் கிடைக்க வில்லை" என்றார்.

அப்பொழுதே நான் பயந்தேன், அவருக்கு புத்தி சுவாதீனம் இல்லையோ என்று. அது பின்னால் ருஜுவாகி விட்டது. நான் பார்த்த அந்த வீட்டுக்கு அன்றைய ரேட்டில் (பொன்விலை வெள்ளி விலை இவற்றைப்போல் வீடுகளின் வாடகையும் நாளுக்கொரு ரேட்டாக அல்லவா மாறிக்கொண்டிருக்கிறது) நூறு ரூபாய் வாடகை கொடுக்கலாம். ஆனால் அவரை வாடகை என்ன என்று கேட்டதற்கு 'இருபத்தைந்து' என்றார்.

அவர் பதிலைக் கேட்டதும் எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு வேளை வாடகைக் கட்டுப்பாட்டு சட்ட திட்டங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகத்தான் அப்படிச் சொல்கிறாரோ என்று நினைத்தேன்.

“அப்படியானால் முன் பணம் எவ்வளவு கொடுக்கவேண்டும்?” என்று கேட்டேன்.

“என்ன முன் பணம் ஸார்! பிரமாதம்! ஏதோ ஐந்தோ, பத்தோ கொடுங்களேன்!”

வீடுகளுக்கு ஐந்நூறு ஆயிரம் என்று முன்பணம் வாங்கும் இந்தக் காலத்தில் அவரும் அப்படித்தான் கேட்கிறாரோ என்று நினைத்து ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொடுத்தேன்.

“என்ன ஸார், ஐந்து ரூபாய் கேட்டால் ஐந்நூறு ரூபாய் எடுத்துக் கொடுக்கிறீர்கள்?” என்று அவர் பதில் சொல்லவே, சரி, நாம் நினைத்தது சரிதான், ஆளுக்குப் புத்தி சுவாதீனம் இல்லைதான் என்று நினைத்துக் கொண்டேன்.

நான் குடிபோன பதினைந்து நாளைக்கெல்லாம் வீட்டை ரிப்பேர் பண்ணுவதற்கு வந்தார். வீட்டை ரிப்பேர் பண்ணினால் நமக்குத்தானே வாடகை உயரும் என்று நான் பயந்து கொண்டு ரிப்பேர் வேண்டாமென்று சொன்னேன். ஆனால் அவர் கேட்கவில்லை. ஆயிரம் ரூபாய் செலவழித்து வீட்டை ரிப்பேர் செய்தார்.

ஆனால் நான் என்ன சொல்லியும் வாடகையை உயர்த்த மறுத்து விட்டார்.

“நீங்கள் செலவழித்த ஆயிரம் ரூபாயை ஒரு வருஷத்திலாவது எடுக்க வேண்டாமா?” என்றேன்.

ஆனால் என்ன சொல்லியும் அவர் கேட்காததால் அவர் புத்தி சுவாதீனத்தைப் பற்றிய என் சந்தேகம் பலத்துக் கொண்டே வந்தது.

ஒவ்வொரு முதல் தேதியும் மாதம் பிறந்ததும் பிறக்காததுமாய் மற்ற வீட்டுக்காரர்களைப்போல் இவரும் வாடகைக்கு வந்து நிற்பாரோ என்று நினைத்துக்கொண்டு, வாடகையைத் தயாராக எடுத்து வைத்துக்கொண்டு இருப்பேன். ஆனால் ஒரு மாதமாவது முதல் தேதியன்று வரமாட்டார். சில சமயங்கள் இரண்டு மூன்று மாதங்கள் சேர்ந்தாற்போல் கூட வரமாட்டார்.

ஒரு சமயம் நான் இதைக் குறித்து விசாரித்ததற்கு, "நான் என்ன இந்த வாடகையை நம்பித்தான் பிழைத்துக் கொண்டிருக்கிறேனா? நான் இந்த வீட்டுக்குப் போட்ட பணத்துக்கு இரண்டு வட்டி கட்டுகிறது, போதாதா? உங்களுக்கு எப்பொழுது சௌகரியமோ அப்பொழுது அனுப்பிவையுங்களேன்" என்றார்.

வீடு இருந்து அதைக் கொண்டு சம்பாதிக்க துளிகூட மனமில்லாதவராக இருக்கிறாரே என்று எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இன்னும் மற்ற குடித்தனக்காரர்களெல்லாம், தங்கள் வீட்டுக்காரர் வாடகையை இந்த மாதம் இவ்வளவு உயர்த்தினார்கள், அந்த மாதம் அவ்வளவு உயர்த்தினார்கள் என்று உயர்த்திச் சொல்லிக்கொண்டே போகும் போது, நம்மால் அப்படி ஒன்றும் பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியவில்லையே என்று வருத்தமாக இருந்தது. மேலும் எல்லோரும் நூறும், இருநூறும் வாடகை கொடுத்துக் கொண்டிருக்கிற காலத்தில், நான் இருபத்தைந்து ரூபாய் வாடகை கொடுக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளவும் அவமானமாக இருந்தது.

நாம் கொடுக்கும் வீட்டு வாடகையைக் கொண்டு நம் சம்பளத்தை மதிப்பிடும் வழக்கம் இன்னும் மறையவில்லை. பழைய காலத்தில் வீட்டு வாடகையைப் பத்தால் பெருக்கினால் சம்பளத் தொகை கிடைக்கும் என்று கணக்கு வைத்திருந்தார்கள். இப்பொழுதோ வீட்டு வாடகையைப் பத்தால் வகுத்தால் சம்பளத் தொகை கிடைக்கும் என்று கணக்கு இருக்கிறது. இவ்வளவு தான் வித்தியாசமேயொழிய, வீட்டு வாடகையைக் கொண்டு சம்பளத்தை மதிப்பிடும் வழக்கம் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

ஆகவே கட்டாயம் வீட்டு வாடகையை உயர்த்திக்கொண்டு தான் வீடு திரும்புவது என்று தீர்மானம் செய்துகொண்டு, என் வீட்டுக்காரரைத் தேடிக்கொண்டு அவர் வீட்டுக்குப் போனேன். வாழ்க்கைப் புள்ளி விவரங்கள் எவ்வளவு உயர்ந்துவிட்டன என்று நான் எவ்வளவோ எடுத்துக் காட்டியும் அவர் மசியவேயில்லை.

"அதெல்லாம் முடியாது! கண்டிப்பாக வாடகையை ஒரு தம்பிடிகூட உயர்த்த முடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

"உங்களுக்காக இல்லாவிட்டாலும், உங்கள் குழந்தை குட்டி களுக்காகவாவது வாடகையை உயர்த்தக் கூடாதா?" என்று கேட்டேன்.

"குழந்தை குட்டிகளுக்காக உயர்த்த முடியாது" என்றார்.

"நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. உங்கள் குழந்தை குட்டிகளின் முகத்தை உங்கள் மனதில் சற்று உருவகப்படுத்திப் பாருங்கள்" என்றேன்.

அவர் அப்படி உருவகப்படுத்திப் பார்ப்பதற்குக் கூட கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

"உங்கள் குழந்தை குட்டிகளின் மீதே இப்படிக் கருணை இல்லாமல் இருக்கிறீர்களே" என்றேன்.

"எனக்குக் குழந்தை குட்டிகள் இருந்தால் தானே நான் கருணைப்படுவதற்கு?" என்று அவரிடமிருந்து பதில் வந்தது.

"உருளைக்கிழங்கின் விலை உயர்ந்ததற்காக எத்தனை பேர் வாடகையை உயர்த்தினார்கள்? பால் விலை உயர்ந்ததற்காக எத்தனை பேர் வாடகையை உயர்த்தினார்கள்?" என்று நான் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவர் மறுக்கவே, சரி, ஆளுக்குப் பயித்தியம் பூரணமாக முற்றிவிட்டது என்று நினைத்துக் கொண்டு நான் வீடு திரும்பினேன்.

நான் அவரைப்பற்றி நினைத்ததும் சரியாய்ப்போய்விட்டது. இன்று காலைதான் அவருடைய சொந்தக்காரரிடமிருந்து எனக்கு

நோட்டீஸ் வந்தது. என் வீட்டுக்காரர் தன் சொத்துக்கள் அனைத்தையும் தர்மத்துக்கு எழுதி வைக்க விரும்பினதால், இவர் கோர்ட்டில் பிராது கொடுத்து அவர் புத்தி சுவாதீனமில்லாதவர் என்று நிரூபித்து, அவர் சொத்தைத் தாம் அடைந்துவிட்டாராம். இனி நான் வாடகையை அந்தச் சொந்தக்காரரிடம்தான் கொடுக்க வேண்டுமாம்.

இனி நான் மற்ற குடித்தனக்காரர்களைப் போல் நிம்மதியாக வாழலாம். என் சம்பளத்தைப்போல் ஐந்து மடங்கோ, பத்து மடங்கோ வாடகை கொடுக்கலாம். என் மனைவி தன் வீட்டுக் காரராகிய என்னைக் கண்டு பயப்படாவிட்டாலும் நான் என் வீட்டுக்காரரைக் கண்டு பயப்படலாம் என்று சந்தோஷப் பட்டேன்.

ஸ்திரீகள், ஜாக்கிரதை!

"ஏன் ஐயா! எப்பொழுது பார்த்தாலும் உம் மனைவியைப் பற்றியே எழுதிக்கொண்டு போகிறீரே யொழிய, மற்ற ஸ்திரீகளைப் பற்றி ஒன்றுமே எழுத மாட்டேன் என்கிறீரே, ஏன்?" என்று கேட்கிருர் ஒரு நண்பர்.

ஸ்திரீகளைக் கண்டதும், எனக்கு ஏற்படும் நடுக்கந்தான் இதற்குக் காரணம் என்று என்னை நேரில் அறிந்தவர்களுக்குத் தெரியும்.

தெனலிராமன் பூனை, பாலைக் கண்டு பயந்து அப்பால் ஓடினது போல், நான் என் மனைவியைக் கண்டு நடுங்கி, நடுங்கி இப்பொழுது எந்த ஸ்திரீயைக் கண்டாலும் பயந்து, அப்பால் ஓட ஆரம்பித்து விட்டேன். பஸ்ஸில் ஸ்திரீயைக் கண்டதும் நான் சடக்கென்று எழுந்து நின்று இடம் கொடுப்பதற்கும் இதுதான் காரணம். ஐயோ, நாம் இடம் கொடுக்காமற் போனால் அந்த ஸ்திரீ கால் ஒடிய நிற்பாளே, அல்லது மேலே யுள்ள வளையத்தை ஒரு கையால் பிடிக்கப்போய் தன் மானத்தை யெல்லாம் பறிகொடுப்பாளே என்ற இரக்க உணர்ச்சியால் நான் எழுந்து நிற்பதில்லை. ஸ்திரீயைக் கண்டதும் எனக்கு ஏற்படும் பீதியின் காரணமாகத் தான் எழுந்து நின்று அப்பால் ஓடுகிறேன் என்று இப்பொழு தாவது தெரிந்து கொள்ளுங்கள்.

இம்மாதிரி ஸ்திரீகளைக் கண்டதும் நான் பயந்து நடுங்கி அப்பால் ஓடுவதால் அவர்களைப்பற்றி அதிமாக ஒன்றும் தெரிந்து கொள்ள முடிவதில்லை. அதனால் அவர்களைப்பற்றி எழுதுவதும் இல்லை.

இம்மாதிரி ஸ்திரீகளைக் கண்டு நடுங்கி ஓடும்போதெல்லாம் எனக்குப் பழைய காலத்து எழுத்தாளர்களும், அவர்கள் ஸ்திரீகளிடம் காட்டிய துணிச்சலும் நினைவுக்கு வராமல் இருப்பதில்லை.

பழைய காலத்து எழுத்தாளர்கள் ஸ்திரீகளைக்கண்டு நடுங்காமல் தைரியமாக எப்படி இருந்தார்கள் என்பது எனக்கு வெகு காலமாகவே ஆச்சரியம் அளித்துவரும் விஷயம். பழைய காலத்து எழுத்தாளர்கள் தங்கள் இலக்கியங்களில் ஸ்திரீகளை வர்ணித்துள்ள அம்சம் ஒன்று போதும், அவர்களுக்கு இருந்த தைரியத்தையும், துணிச்சலையும் எடுத்துக் காட்டுவதற்கு.

பழைய காலத்து இலக்கிய கர்த்தாக்கள் தற்கால எழுத்தாளர்களைப் போல் ஸ்திரீகளின் ஆடைகளையோ, அல்லது ஆபரணங்களையோ வர்ணிப்பதற்குச் சிரமப்படுவதில்லை.

"உள்ளே பாவாடையில் உள்ள வர்ண நூல் வேலைப்பாடுகளை எல்லாரும் பாருங்கள், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. வெகு சிரமப்பட்டு போடப்பட்ட அந்த பூவேலைகளை மறைக்கும் பாவத்தை நான் கட்டிக் கொள்வானேன்?" என்று களங்கமறச் சொல்வதுபோல் விளங்கும் புடவைகளைப் பற்றியோ, அல்லது காதில் ஊசலாடும் லோலாக்கை எட்டிப் பிடிக்க யத்தனிக்கும் ரவிக்கை கையின் 'புஸ்'ஸைப் பற்றியோ வர்ணிக்க அவர்கள் சிரமப்படுவதில்லை.

அதற்குப் பதில் ஸ்திரீகளின் ஒவ்வொரு அங்கத்தையும், அவயவத்தையும் வர்ணிப்பதைத்தான் அவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இந்த மாதிரி வர்ணிப்பதில், அவர்கள் ஏழையென்றோ, பணக்காரியென்றோ, இந்த ஊர் என்றோ, அந்த ஊர் என்றோ, தோட்டி என்றோ, தொண்டமதி என்றோ பார்க்கவில்லை.

ஸ்திரீக்கு, ஸ்திரீ அவர்கள் எப்படி வித்தியாசம் பாராட்டவில்லையோ, அதைப்போலவே ஸ்திரீகளின் அங்க அவயவங்களுக்கு இடையிலும் அவர்கள் வித்தியாசம் பாராட்டவில்லை. இந்த அங்கத்தைத்தான் வர்ணிக்கலாம், இந்த அங்கத்தை

வர்ணிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடும் அவர்கள் வைத்துக் கொள்ளவில்லே. உச்சந் தலேயில் ஆரம்பித்தார்களானுல் உள்ளங் கால் வரை ஒன்று விடாமல் வர்ணித்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பார்கள்.

தற்கால சினிமாப் பட முதலாளிகள் பாதி மறைத்தும், பாதி மறைக்காமலும் காட்டும் எத்தனேயோ உடல் உறுப்புக்களே அவர்கள் கூச்ச நாச்சமின்றி வர்ணிக்கத் தொடங்கி விடுவார்கள்.

பழைய காலத்து எழுத்தாளர்கள் காட்டிய துணிச்சலேப் பார்க்கும் போதெல்லாம் நான் ஒன்று நினேத்துக்கொள்வதுண்டு. இந்தக் காலத்தைப்போல் பழைய காலத்தில் பஸ்கள் இருந்திருக்கு மானுல், இந்த எழுத்தாளர்களேக் கண்டதும் ஸ்திரீகள்தான், எங்கே தங்களே அவர்கள் வர்ணித்துவிடப் போகிருர்களோ என்று பயந்து ஓடி ஒளிந்து கொள்வார்களே யொழிய, என்னேப் போல் ஸ்திரீகளேக் கண்டு அந்த எழுத்தாளர்கள் ஓடி ஒளிந் திருக்க மாட்டார்கள்.

பழைய காலத்து எழுத்தாளர்கள் ஸ்திரீகள் அணிந்திருக்கும் ஆடை ஆபரணங்களே வர்ணிப்பதை விட்டு விட்டு, எதற்காக அவர்கள் உடல் உறுப்புக்களே வர்ணித்தார்கள் என்று வெகு காலம் எனக்கு விளங்கவில்லே. சமீபத்தில்தான் பாங்கியில் இருக்கும் பணத்தையெல்லாம் என் மனேவி சரசு கரைத்துக் கொண்டு வரும் வேகத்தைப் பார்த்த பிறகுதான் (ஏது பாங்கியில் வேறு பணம் வைத்திருக்கிறேனு என்று ஆச்சரியப்பட்டு கடன் கேட்க வந்து விடாதீர்கள். சும்மா கட்டுரைக்காக எழுது கிறேன்) பழைய எழுத்தாளர்களின் நோக்கம் புரிந்தது.

அவள் படிக்கும் பத்திரிகைகளிலும், நாவல்களிலும் ஏதாவது ஒரு ஸ்திரீயின் புடவை வர்ணனே வரவேண்டியதுதான் தாமதம், உடனே அந்த மாதிரிப் புடவை கிடைக்குமா என்று கடையைப் பார்க்கக் கிளம்பி, கடைசியில் வெறுங் கையுடன் வந்தால் கடைக்காரன் ஏதாவது நினேத்துக் கொள்வானே என்று ஏதாவது ஒரு புடவையுடன் திரும்புவாள்.

ஏதாவது ஒரு நகையின் வர்ணனையைப் பார்த்து விட்டால் போதும், அதைப் போலவே புது நகை பண்ண முயல்வாள். இல்லாவிடில் இருக்கிற நகையை அழித்து, அது மாதிரி பண்ணப் பார்ப்பாள்.

இத்தகைய ஆபத்துக்களிலிருந்து தங்கள் காலத்துப் பொது மக்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் அந்தக் காலத்து எழுத்தாளர்கள் ஆடை வர்ணனையை விடுத்து, அவயவ வர்ணனையில் இறங்கினார்கள் என்று நினைக்கிறேன்.

அவர்கள் இப்படிச் செய்ததற்கு இன்னொரு காரணமும் இருக்கலாம். ஸ்திரீகளின் ஆடையை வர்ணிப்பது மிகவும் சிரமமான விஷயம். ஒவ்வொரு ஸ்திரீயும் விதவிதமான ஆடைகள் அணிவதோடு, அந்த விதத்தையும் வேளைக்கு வேளை மாற்றிக் கொண்டிருப்பதால், மிகவும் அதிக சாமர்த்தியம் இருந்தால் தான் எல்லா ஆடைகளையும் வர்ணிக்க முடியும்.

அவயவ வர்ணனையோ என்றால் அப்படியில்லை. அழகிய ஸ்திரீ இப்படித்தான் இருப்பாள், என்று ஒருவர் செய்த வர்ணனையை வைத்துக்கொண்டு எல்லாரும் அதையே திரும்பத் திரும்பச் சொல்லலாம்; எல்லா ஸ்திரீகளுக்கும் அதே வர்ணனையே கூறலாம்

பழைய காலத்து இலக்கியங்களை எடுத்துப்பார்த்தால், எல்லா ஸ்திரீகளுக்கும் கருமேகத்தைப்போன்ற கூந்தல், சந்திர பிம்பத்தையொத்த முகம், முத்தைப் போன்ற பற்கள், பவளம் போன்ற இதழ்கள், இடை உண்டோ இல்லையோ என்ற சந்தேகம், வாழைத் தண்டை யொத்த தொடைகள் இத்யாதி, இத்யாதி. நல்ல வேளையாக பழைய காலத்தில் இப்பொழுது மேல் நாடுகளில் உள்ளது போல் ஆடையில்லா இயக்கம் பரவாமல் இருந்ததால், ஸ்திரீக்கு ஸ்திரீ அடையாளம் கண்டுபிடிக்க முடிந்தது. இல்லாவிடில் வித்தியாசம் கண்டுபிடிக்க மிகவும் திண்டாடிப் போயிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் வர்ணிப்பதற்கு மிகவும் எளிதாயிற்றே என்று பழைய கால ரீதியில், நாம் ஸ்திரீகளை வர்ணிக்க ஆரம்பித்தால் தடியடி படாமல் தப்ப முடியுமா என்பது சந்தேகந்தான்.

அதனால்தான் இந்த ஸ்திரீகள் வம்புக்கே நான் போவதில்லை. நீங்களும் போகவேண்டாம். ஸ்திரீகள், ஜாக்கிரதை !

மதிப்புக் குறைவு

ஸ்டர்லிங் தன் மதிப்பைக் குறைத்துக் கொண்டு விட்டதால், ரூபாயும் தன் மதிப்பைக் குறைத்துக் கொள்ளவேண்டி வந்து விட்டது என்று நம் சர்க்கார் தெரிவித்திருக்கிறுர்கள்.

இது விஷயம் அநேகருக்குப் புரியவில்லே. யார் தங்கள் மதிப்பைக் குறைத்துக் கொண்டால் என்ன, நாம் எதற்காக நம் மதிப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று அநேகர் கேட்கிறுர்கள். நம் மதிப்பு உயர்ந்தால் தானே கௌரவம், மதிப்பை நாமே குறைத்துக் கொண்டால் கௌரவக் குறைச்சல் தானே என்று அநேகர் அபிப்பிராயப்படுகிறுர்கள்.

நானும் அப்படித்தான் நினைத்துக்கொண்டு வெகுகாலம் என் மதிப்பைக் குறைத்துக் கொள்ளாமல் இருந்தேன்.

உதாரணமாக நண்பர்கள் ஆனுலும் சரி, வேறு யார் உறவினர்கள் ஆனுலும் சரி, என்னே எளிதில் சாப்பிட அழைத்து விட முடியாது. அதுவும் என் மாமனுர் என்னேச் சாப்பிட அழைப்பதானுல் சிம்ம சொப்பனம் கண்டதுபோல் நடுங்குவார்.

ஏதாவது பிரமேயங்களில் என்னே அழைக்காவிட்டால் நன்ருய் இருக்காது என்று தோன்றும் போதெல்லாம், என் மாமியார் என் மாமனுரைக் கட்டாயப் படுத்துவாள். "போன தடவையே நீங்கள் சரியாகக் கூப்பிடவில்லே என்று கோபித்துக் கொண்டு மாப்பிள்ளே வரவில்லே. இந்தத் தடவையாவது நீங்கள் மாப்பிள்ளேயை கட்டாயம் கூப்பிட்டுத்தான் ஆகவேண்டும்" என்று மாமியார் வற்புறுத்துவாள்.

"இதோ பார், நீ என்னை என்ன வேண்டுமானாலும் செய்யச் சொல். சர்க்கார் பஸ்ஸுக்காக, பஸ் ஸ்டாண்டில் பதை பதைக்கும் வெய்யிலில் நின்று தவம் கிடக்கச் சொன்னாலும் சொல், பஸ் வந்து நின்றதும், அடித்துப் பிடித்துக் கொண்டு ஏற முயற்சிக்கும் கூட்டத்தை முண்டியடித்துத் தள்ளிக் கொண்டு பஸ் ஏறும் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொள்ளச் சொன்னாலும் சொல், இன்னும் சென்னை மின்சார ரயில் வண்டியில் காலை ஒன்பதரை மணிக்குப் பிரயாணம் செய்யும் வித்தையைச் செய்யச் சொன்னாலும் சொல், ஆனால் மாப்பிள்ளையை சாப்பிட அழைக்கும் வேலையை மாத்திரம் எனக்குக் கொடுத்து விடாதே" என்று கெஞ்சிக் கேட்பார்.

என்னைச் சாப்பிட அழைப்பதற்கு மாமனார் பயப்படுவதற்கே காரணம் நான் என்னுடைய மதிப்பைக் குறையாமல் வைத்துக் கொண்டிருந்ததுதான். மதிப்புக் குறையக்கூடாது என்பதற்காக மாமனார் என்னைச் சரியாகக் கூப்பிட்டால்தான் நான் போவேன்.

சரியாகக் கூப்பிடுவது என்றால் என்னை என் மாமனார் பத்து நாளைக்கு முன்னிருந்தே, நாளைக்கு நான்கு தடவைக்குக் குறை யாமல் "கட்டாயம் சாப்பிட வரவேண்டும், வராமல் இருந்துவிடக் கூடாது" என்று கூப்பிடவேண்டும். என்னை அழைக்கவரும் போதெல்லாம் என் பெற்றோர்களையும் பார்த்து, "கட்டாயம் பிள்ளையை அனுப்பிவைக்க வேண்டும். பேசாமல் இருந்துவிடக் கூடாது" என்று சொல்ல வேண்டும்.

இது விஷயத்தை மாமனார் மட்டும் சொன்னால் போதாது அதே தடவைகள் மாமியாரும் சொல்லவேண்டும். ஆனால் மாமியார் என்னுடன் பேசுவதில்லையாகையால், என் காது கேட்கும் படியாக, உரத்த குரலில், "கட்டாயம் பிள்ளையை அனுப்பி வையுங்கள்" என்று என் தாயாரிடம் சொல்லவேண்டும்.

ஆனால் என்னைச் சரியாகக் கூப்பிடுவது என்றால் இதுவும் போதாது. மாமனார் வீட்டில் இருக்கும் எல்லாரும் என்னை ஒரு இருபது தடவைக்குக் குறையாமல் அழைக்க வேண்டும். மாமனார் வீட்டு நாயும், என்னைக் கூப்பிடுவதுபோல் என்னைக் கண்டதும் வாலைக் குழைக்கவேண்டும்.

ஆனால் இதுவும் போதாது. சாப்பிடவேண்டிய தினத்தன்று மாமனாரே நேரிடையாக வந்து என்னைக் கையைப் பிடித்துக் கரகர என்று இழுத்துக் கொண்டு போகவேண்டும்.

அப்படி இழுத்துக்கொண்டு போனாலும் நான் சாப்பிடும் அறைக்குப் போவேனா? மாட்டேன். முன்னடி அறையில் போட்டிருக்கும் சோபாக்கள் ஒன்றில் சாய்ந்து விடுவேன். உடனே மச்சினன்களும், குட்டி மச்சினிகளும் ஓடி வந்து என்னைக் கைலாகு கொடுத்து அழைத்துக்கொண்டு போகவேண்டும்.

தங்கள் வீட்டில் ஒருவேளைச் சாப்பாடு என்னைச் சாப்பிட வைப்பதற்காக, இத்தனை திண்டாட்டம் படவேண்டுமென்றால் யார்தான் படுவார்கள்? ஆகவே மாமியாருடன் என்ன சண்டை வந்தாலும் சரி, என்னை மட்டும் அழைப்பதில்லை என்று மாமனார் வைத்து விட்டார். இதனால் நான் உள்ளூரிலேயே இருக்கும் என் மாமனார் வீட்டில் இரண்டு வருஷத்திற்கு ஒருவேளை சாப்பிட்டிருப்பேன் என்றால் மிகவும் அதிகம் என்று சொல்லவேண்டும்.

மாமனாரிடம் காட்டிய அதே மதிப்பைத் தான் நண்பர்களிடமும் காட்டி வந்தேன். எவ்வளவு நெருங்கிய நண்பர்கள் ஆனாலும் சரி, கல்யாணம் என்று ஒரு பத்திரிகை அனுப்பினால் உடனே ஓடிப்போய் விடமாட்டேன். பத்திரிகையும் அனுப்பவேண்டும். கைப்பட கடிதமும் எழுதி அனுப்பவேண்டும். பிறகு என்னைக் கூப்பிட புருஷர்கள் யாராவது வரவேண்டும். என் மனைவியைக் கூப்பிட ஸ்திரீகள் யாராவது வரவேண்டும். பிறகு எங்கள் இருவரையும் கல்யாணத்தன்று, "வந்துதான் ஆக வேண்டும்" என்று யாராவது வந்து கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போகவேண்டும்.

ஆக இந்த ரீதியில் நான் என் மதிப்பைக் காப்பாற்றி வந்தேன். அதே ரீதியில் என் நண்பர்களும் தங்கள் மதிப்பைக் காப்பாற்றி வந்தார்கள். இதனால் எவ்வளவு நெருங்கிய நண்பர்களானாலும் சரி, ஒருவர் வீட்டு விசேஷத்துக்கு இன்னொருவர் போகமாட்டோம். "நான் அழைத்தேனே, நீங்கள் வந்தீர்களா?" என்று நான் நண்பர்களைக் குற்றம் சொல்வேன். "நாங்கள்

அழைத்தோமே, நீ வந்தாயா?" என்று நண்பர்கள் என்னைக் குற்றம் சொல்வார்கள் அவ்வளவுதான். ஒருவரை யொருவர் குற்றம் சொல்வதற்காகச் செலவழியும் தொண்டைத் தண்ணீர் தான் எங்களுக்குச் செலவே யொழிய, வேறு செலவு கிடையாது. அவர்களுக்கும் பணம் மீதமாகும். எனக்கும் பணம் மீதமாகும்.

வெகு நாள் நானும், என் நண்பர்களும் இந்த ரீதியில் தான் எங்கள் மதிப்பைக் காப்பாற்றிக் கொண்டு வந்தோம். ஆனால் திடீரென்று ஒரு நாள் என்னைக் கேட்காமலே என் நண்பர்கள் தங்கள் மதிப்பைக் குறைத்துக் கொண்டு விட்டார்கள். இது வரையில் பதினைந்து தடவை கூப்பிட்டால் தான் சாப்பிட வருகிறவர்கள் என்று வைத்துக் கொண்டிருந்த நண்பர்கள் ஐந்து தடவை கூப்பிட்டதுமே அலறிப் புடைத்துக் கொண்டு வருவது என்று வைத்து விட்டார்கள். இருபது தடவை வற்புறுத்தினால் தான் நாம் கொடுக்கும் சாமானைப் பெற்றுக்கொள்வது என்று வைத்திருந்த நண்பர்கள் இருதடவை சொன்னாலே போதும், நம் கையிலிருந்து இழுத்துப் பிடுங்கிக் கொள்வது என்று வைத்து விட்டார்கள்.

இதனால் என் பொருளாதார நிலைமையில் ஒரு திடீர் மாறுதல் ஏற்படத் தொடங்கி விட்டது. இதுவரை வாரம் நான்கு நாள் கண்டு வந்த ரேஷன் அரிசி, இரண்டு நாளைக்குள் மறையத் தொடங்கி விட்டது. காப்பிக்கொட்டையும், சர்க்கரையும் வழக்கத்தைவிடப் பத்து மடங்கு அதிகமாக வீட்டிற்கு இறக்கு மதி செய்ய வேண்டி வந்துவிட்டது.

முன்னெல்லாம் மாதம் நூறு ரூபாய்க் கடனோடு கன்னிய மாகக் குடித்தனம் நடந்தது போய், இப்பொழுது மாதம் நானூறு ரூபாய் கடன் வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

ஆனால், கடனுக்குப் பயந்து மதிப்பைக் குறைத்துக் கொள்ளும் ஆசாமி நானல்லவாகையால் ஆன கடன் ஆகட்டு மென்று பேசாமல் இருந்தேன்.

இப்படி நான் பேசாமல் இருந்ததற்கு இன்னொரு காரணமும் உண்டு. கடன் விஷயமாக நான் கொண்டிருந்த அபிப்பிராயத்

துக்கும், மற்றவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயத்துக்கும் பெருத்த வித்தியாசம் இருந்ததுதான். முக்கால் வாசிப்பேர்கள் மாதம் பத்து ரூபாய் கடன் வாங்கினால் கவலைப்படமாட்டார்கள். சிரித்துக் கொண்டே வங்குவார்கள். ஆனால் மாதம் பதினைந்து ரூபாய் கடன் வாங்குவது என்றால் ஏதோ அடாமிக் குண்டு தலையில் விழப்போவதுபோல் நடுங்குவார்கள். மாதம் பத்து ரூபாய் கடன் வாங்குவது தங்கள் சக்திக்கு உட்பட்டது, அடைத்து விடலாம், அதற்கு மேல் வாங்குவது தங்கள் சக்திக்கு மீறியது, அடைக்க முடியாது என்பது அவர்கள் எண்ணம்.

நான் கடன் வாங்குவது அப்படி அல்ல. நான் கடன் வாங்கும் தொகைக்கும், என் சக்திக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. கடன் கொடுக்கிறவன் சக்தியைப் பொறுத்தது நான் கடன் வாங்கும் தொகை. அவனுக்கு நூறு ரூபாய் கடன் கொடுக்கச் சக்தியிருந்தால் நான் நூறு ரூபாய் கடன் வாங்குவேன். அவனுக்கு இரு நூறு ரூபாய் கடன் கொடுக்கச் சக்தியிருந்தால் நான் இருநூறு ரூபாய் கடன் வாங்குவேன். கடன் விஷயத்தில் கொடுக்கிறவன் சக்தியைப் பற்றித்தான் நான் கவலைப்படுவேனே யொழிய, திருப்பிக் கொடுக்க நமக்குச் சக்தி இருக்கிறதா என்று கவலைப்படமாட்டேன். கடனும், வெள்ளமும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்பது என் அபிப்பிராயம். தலைக்குமேல் போன பிறகு, ஜாண் போனால் என்ன, முழம் போனால் என்ன?

ஆனால் எனக்குக் கடன் கொடுத்தவர்களுக்கும் நாளடைவில் கொடுப்பதற்குச் சக்தி குறைந்துபோய் விடவே, எனக்கு என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. கடைசியில் நானும், சரசுவும் ஒரு மகாநாடு கூட்டினோம். கூட்டி, பின்கண்ட தீர்மானத்துக்கு வந்தோம். நண்பர்கள் தங்கள் மதிப்பைக் குறைத்துக்கொண்டு, அடிக்கடி வந்து நஷ்டம் ஏற்படுத்திக் கொண்டிருந்ததால், அந்த நஷ்டத்தை சமாளிக்க நானும் என் மதிப்பைக் குறைத்துக் கொண்டு நண்பர்கள் யார் கூப்பிட்டாலும், முழு வாயால் கூப்பிட்டாலும், அல்லது கால் வாயால் கூப்பிட்டாலும் உடனே போய்விட வேண்டியது என்று தீர்மானம் நிறைவேற்றினோம்.

அந்தத் தீர்மானத்தைத்தான் நான் இப்பொழுது வெகு தீவிரமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு சமயம், "ஐயோ! நாம் இப்படி மதிப்பைக் குறைத்துக் கொண்டு விட்டோமே!" என்று இருக்கிறது. ஆனால் பிறர் தங்கள் மதிப்பை குறைத்துக்கொண்டு விட்ட போது, நாம் நம் மதிப்பைக் குறைத்துக் கொள்ளாமல் இருப்பதற்கில்லை.

ரூபாயும், ஸ்டர்லிங் தன் மதிப்பைக் குறைத்துக்கொண்டு விட்டது என்றுதான் தன் மதிப்பைக் குறைத்துக் கொண்டு விட்டது போலும்.

கதவைத்
தட்டுதல்

பழைய காலத்தில் கதவைத் தட்டுவது என்றால், என்ன என்பதே ஜனங்களுக்குத் தெரியுமா என்பது சந்தேகந்தான். ஏனெனில் பழைய காலத்தில் கதவைத் தட்ட வேண்டிய வேலை யாருக்கும் கிடையாது. பகல் வேளைகளில் கதவு எப்பொழுதும் திறந்திருக்குமாதலால், கதவைத் தட்ட வேண்டிய வேலை கிடையாது. இரா வேலைகளில் கதவு மூடியிருந்தாலும் வாசல் திண்ணையில் அல்லது வாசலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் புருஷர்கள் எழுந்திருக்கு முன்பே உள்ளே படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் ஸ்திரீகள் எழுந்து கதவைத்திறந்து விடுவார்களாதலால் அப்பொழுதும் கதவைத் தட்ட வேண்டிய வேலை யாருக்கும் கிடையாது.

கதவைத் தட்டுவது என்றால் என்ன என்றே தெரியாத அந்தக் காலத்தில் கதவைத் தட்டினதால் தான் பொற்கைப் பாண்டியன் தன் கையை இழந்து, பொற்கை வைத்துக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டதோ என்றுகூட நான் சந்தேகிக்கிறேன்.

ஆனால் இந்தக் காலத்திலோ கதவு எப்பொழுதும் மூடியிருக்கிறது. திருடர்களுக்குப் பயந்தோ, அல்லது கடன் கேட்க வரும் நண்பர்களுக்குப் பயந்தோ, அல்லது அடுத்த வீட்டுக் குழந்தைகளின் தொந்தரவுக்குப் பயந்தோ அல்லது பிச்சைக்காரர்களின் நச்சரிப்புக்குப் பயந்தோ எப்பொழுது பார்த்தாலும் கதவை மூடித் தாழ்ப்பாள்போட்டு வைக்கவேண்டியிருக்கிறது. அதனால் கதவைத் தட்ட வேண்டிய பிரமேயமும் நமக்கு ஏற்படுகிறது.

தற்காலத்தில் இரா வேளைகளில் சினிமாக் கொட்டகைகளி லிருந்து திரும்புவது, அல்லது ரயில் மார்க்கமாக வெளியூர்களி லிருந்து வரும் ஜனங்கள் கண்ட வேளைகளில் வந்து இறங்குவது போன்ற எக்கச்சக்கங்கள் ஏற்பட்டுவிட்ட படியால் கதவைத் தட்டுவது இன்னும் பலமாகிவிட்டது.

ஆங்கில நாகரிகம் பரவியதன் காரணமாக வீட்டுக் குள்ளேயே ஆளுக்கொரு அறையில் உட்கார்ந்துகொண்டு கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டுக் கொள்ளும் வழக்கம் ஏற்பட்டு விட்டது. இதனால் வாசல் கதவைத் தட்டும் பழக்கம் போதாது என்று வீட்டுக்குள்ளேயே அறைக் கதவுகளைத் தட்டும் பழக்கம் வேறு ஏற்பட்டு வருகிறது. இன்னும் இந்த அறைக் கதவுகள் தாழ்ப்பாள் இடப்படாமல் வெறுமனே மூடியிருந்தாலும் தட்டி விட்டுத்தான் உள்ளே நுழையவேண்டும் என்ற சம்பிரதாயம் வேறு ஏற்பட்டு விட்டது.

நாம் வேலை செய்யும் காரியாலயங்களிலும், மேலதிகாரிகள் தனி அறையில் உட்கார்ந்து கதவை மூடிக்கொள்வது என்று வழக்கம் ஏற்படுத்திவிட்டார்கள். இதனால் வேறு நாம் கதவைத் தட்டும் பழக்கம் அதிகரித்து வருகிறது.

ஆக, இந்தக் காலத்தில், ஒவ்வொரு மனிதனும் தன் வாழ் நாளைக்குள் எத்தனை லட்சம் தடவை கதவைத் தட்ட வேண்டி யிருக்கிறது என்று கணக்குப் போட்டுப் பார்த்தால் தலை சுற்றத்தான் செய்யும்.

தற்கால மனிதர்கள் தங்கள் வாழ்நாளில் எவ்வளவு பகுதி கதவைத் தட்டுவதில் செலவழிக்க வேண்டியிருக்கிறது என்று யாரும் கணக்குப்போட்டுக் கண்டு பிடித்ததாகத் தெரியவில்லை. அப்படிக் கண்டுபிடித்தார்களானால், "ஐயோ! நம் வாழ்நாளில் இத்தனை காலமா கதவைத் தட்டுவதில் கழிந்து போகிறது!" என்று கவலைப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஒவ்வொரு விநாடியும், உலகத்தின் பல்வேறு பாகங்களில் சிதறுண்டு கிடக்கும் ஜனங்களில், குறைந்தது ஒரு கோடிப்

பேராவது கதவைத் தட்டிக் கொண்டு நிற்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்தக் காட்சியை மனதில் உருவகப்படுத்திப் பார்த்தால் நமக்கு ஆச்சரியமாக இருக்கும்.

அமெரிக்கன் தன் ஆபீஸ் கதவைத் தட்டிக்கொண்டிருக்கும் அதே சமயம் இந்தியன் சினிமாவிலிருந்து திரும்பி வந்து வீட்டுக் கதவைத் தட்டிக்கொண்டிருப்பான். சீனாவில் மணியார்டரை வைத்துக்கொண்டு தபால்காரன் கதவைத் தட்டிக்கொண்டிருக்கும் அதே சமயம், ஜப்பானில் தனக்கு வரவேண்டிய பணத்தைத் தண்டல் செய்வதற்காக, கடன் கொடுத்தவன் கடன் வாங்கினவன் வீட்டுக் கதவைத் தட்டிக் கொண்டிருப்பான். கடன்காரன் என்கிற பதம் கடன் கொடுத்தவனைக் குறிக்கிறதா அல்லது கடன் வாங்கினவனைக் குறிக்கிறதா என்ற சந்தேகம் ஏற்பட்டு விட்டதால், கடன் கொடுத்தவன், கடன் வாங்கினவன் என்று தனித்தனியாகக் குறிப்பிடவேண்டியிருக்கிறது.

ஆனால் மற்ற எல்லா வேலைகளையும் விட்டு விட்டு, ஒரே சமயத்தில் கதவைத் தட்டும் வேலையில் ஈடுபட்டிருக்கும் இந்த கோடி ஜனங்களும் கதவைத் தட்டும் விஷயத்தில் மாத்திரம்தான் ஒன்று பட்டவர்களேயொழிய கதவைத்தட்டும் முறையில் ஒன்று பட்டவர்கள் அல்ல.

ஏனெனில், தற்காலத்தில் கதவைத் தட்டுவதற்கு எத்தனையோ முறைகள் உள்ளன. ஒவ்வொருவரும் ஒரு தனிப் பட்ட முறையைக் கையாளுகிறார்கள். அந்த முறைகளாவன :—

குத்துதல் :—அதாவது நாம் உள்ளே நுழைவதற்கு இந்தக் கதவு தடையாய் இருக்கிறதே என்ற கோபத்தை வைத்துக் கொண்டு, நம் கைவிரல்களை மடக்கி வைத்துக் கொண்டு கதவைக் குத்து குத்து என்று குத்துவது. இதனால் நம் கை கொஞ்சம் வலிக்கும் என்றாலும் கதவு குத்தப்பட்ட சப்தம் உள்ளே தொலைவில் சமையல் அறையில் வேலை செய்துகொண்டிருக்கும் மனைவிக்குக் காதுகேட்டு, அவள் உடனே ஓடிவந்து கதவைத் திறக்க ஏதுவாகும். "நான் கோபத்தில் இருக்கிறேன். இந்த சமயம் பார்த்துச் செலவுக்குப் பணம் கேட்காதே" என்று மனைவியிடம் சொல்லாமற் சொல்லுவதற்கும் இது உதவும்.

அறைதல் :— அதாவது கைவிரல்கள் ஐந்தையும் நீட்டி வைத்துக் கொண்டு, கதவைப் பார்த்து அறைதல். குத்தினால் கை அதிகம் வலிக்காதிருக்குமா, அறைந்தால் அதிகம் வலிக்கா திருக்குமா என்ற சர்ச்சை கதவைத் தட்டுகிறவர்களிடையில் இன்னும் நடந்து வருகிறது. எது அதிக சப்தம் எழுப்பி சமைய லறையில் இருக்கும் மனைவியை உடனே எழுந்து ஓடிவரச் செய்யும் என்பதைப்பற்றியும் அபிப்பிராய பேதம் இருந்துவருகிறது.

உடைத்தல் :— அதாவது கதவையும் நம் கையையும் மோதச் செய்து, அதனால் ஏற்படும் சப்தம் உள்ளே இருக்கிறவர்களுக்குக் கேட்குமோ, கேட்காதோ என்ற சந்தேகத்தினால், நம் தேக வலுவைக்கொண்டு கதவை நிலையிலிருந்து உடைத்துத் தள்ளி, பிறகு உள்ளே நுழைய எண்ணுவது. ஆனால் சினிமாக்களில் தவிர, வாழ்க்கையில் யாரும் கதவை உடைத்துத் தள்ளியதாக இதுவரை கேள்விப்பட்டதில்லை. ஏனெனில் எந்த சந்தேகத்தைக் கொண்டு இவர்கள் கதவை உடைக்க ஆரம்பித்தார்களோ அந்த சந்தேகம் இவர்கள் பாதி உடைப்பதற்குள் பொய்த்துவிடும். உடைப்பதற்காக இவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியின் போது ஏற்படும் சப்தம் உள்ளே இருப்பவர்களுக்கு எட்டி அவர்கள் வந்து கதவைத் திறந்துவிடுவார்கள்.

பெயர்த்தல் :— இந்த முறையைக் கையாளுகிறவர்கள் முன்னே கூறிய இடித்தல் இனத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால் இவர்கள் முன்னையவர்களைப்போல் தச்சன் வெகு சிரமப்பட்டு செய்த கதவை உடைக்க விரும்புகிறவர்கள் அல்ல. கதவு உடையக் கூடாது என்ற கவலை இவர்களுக்கு அதிகம் உண்டு. அதற்காகக் கதவையும் நிலையையும் ஒரே சமயத்தில் கட்டிடத் திலிருந்தே இவர்கள் பெயர்க்க விரும்புவார்கள். ஆனால் இவர்கள் எண்ணமும் இதுவரை நிறைவேறியதாகத் தெரியவில்லை. இவர்கள் முயற்சி நூறில் ஒரு பங்கு வெற்றியடையு முன்னரே அந்த சப்தம் கேட்டுக் கதவு திறக்கப்பட்டு விடும்.

உதைத்தல் :— கதவுக்கும், கைக்கும் ஒரு சம்பந்தமும் ஏற்படக் கூடாது என்று நினைக்கிறவர்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் இந்தக் கட்சியில் சேர விரும்புகிறவர்கள் எப்போது பார்த்

தாளும் பூட்சும் காலுமாக விளங்க வேண்டும். செருப்பு இருந்தாலும் போதாது. அப்பொழுது தான் இந்த முறையில் கதவைத் தட்ட முடியும். இல்லையானால், கதவு நம் காலைத் தட்டி விட்டுவிடும்.

நடவுதல் :—பலமாகத் தட்டினால் கதவுக்கும் கெடுதல், உள்ளே யிருப்பவர்களின் காதுக்கும் கெடுதல், ஆகவே கதவைத் தட்டக்கூடாது, தடவத்தான் வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட ஜீவ காருண்ய புருஷர்கள் இவர்கள்.

பிராண்டுதல் :—நீண்ட நகங்கள் உள்ளவர்களை இந்த கோஷ்டியில் காணலாம். ஆனால் இந்த சப்தம் கேட்டு உள்ளே யிருக்கிறவர்கள் வந்து கதவைத் திறப்பார்களா என்பது சந்தேகந் தான். ஏனெனில் உள்ளே யிருப்பவர்கள், யாரோ மனிதர்கள் தான் தங்களுக்குரித்தான தனி முறையில் கதவைத் தட்டுகிறார்கள் என்று நினைக்கமாட்டார்கள். ஏதோ பூனையோ நாயோ பிராண்டு கிறது என்று நினைத்துக்கொண்டு பேசாமல் இருந்துவிடுவார்கள்.

தாளம் போடுதல் :—இதுதான் தற்காலத்தில் கதவைத் தட்டு வதற்கு நாகரீக வழியாகக் கருதப்படுகிறது. கை விரல்களால் கதவின் மீது லேசாகத் தாளம் போடுவதுதான் இந்த வழி. ஆனால் இதனால் உள்ளேயிருப்பவர்களுக்குக் காது கேட்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதனால் இந்த நாகரீக வழியைக் கையாளும் நாசூக்குக்காரர்கள் தாளம் போடுவதுடன் நில்லாது, இடையில், இடையில் சப்தம் போட்டுக் கூப்பிடவும் செய்வார்கள்.

ஆக, கதவைத் தட்டுவதற்கு இம்மாதிரி எத்தனையோ வழிகள் உள்ளன. எல்லாரும் ஒரே வழியைக் கையாளாமல் ஆளுக்கொரு வழி கையாளுவதால் கதவு தட்டப்படும் விதத்தைக் கொண்டே நாம் யார் தட்டுகிறார்கள் என்று தெரிந்து கொண்டுவிடலாம். இஷ்டமிருந்தால் கதவைத் திறக்கலாம். இஷ்டமில்லாவிடில், கதவைத் திறக்காமல் பேசாமல் இருந்துவிடலாம். அல்லது நாம் வீட்டில் இல்லையென்று சொல்லச் சொல்லிவிடலாம்.

ஐயையோ! யார் இப்படிக் கதவைப் பெயர்க்கப் பார்க்கிறது? வேறு யாராக இருக்க முடியும்? பழைய கடனைத் தண்டல் பண்ண

செட்டியார்தான் வந்திருக்க வேண்டும். இந்தா சரசு உன்னைத் தானே! கதவைத் திறக்காமலே நான் இல்லையென்று சொல்லி அனுப்பி விடு.

டாக்டர் பெண்ணுக்குக் கல்யாணம்

யார் யாரோ தங்கள் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணினதைப் பற்றிப் பிரமாத ராங்கி அடித்துக் கொள்கிறார்கள். ஆனால் எங்கள் ஊர் டாக்டர் தம் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணினதைப் போல் யாரும் இதுவரை பண்ணியிருக்க மாட்டார்கள், இனிமேல் பண்ணப் போவதும் இல்லை என்று நிச்சயமாகக் கூறுவேன்.

ஒரு நாள் டாக்டர் வீட்டுக் கார் வாசலில் வந்து நின்றதும் எங்கள் எல்லாருக்கும் ஆச்சரியமாகப் போய்விட்டது. எங்கள் யாருக்கும் உடம்பு நோயில்லை, டாக்டருக்குச் சொல்லி யனுப்பவும் இல்லை. அப்படி யிருக்கும்பொழுது டாக்டர் வீட்டுக் கார் நம் வீட்டுக்கு எதிரில் ஏன் நிற்கிறது? ஒருவேளை எதிர்த்த வீட்டுக்காக இருக்குமோ என்று நினைத்துக்கொண்டிருக்கையில் அந்தக் காரிலிருந்து டாக்டர் இறங்கினார்.

நேராக உள்ளே வந்தார். என்னைப் பார்த்து, "உங்கள் கையை நீட்டுங்கள்" என்றார். என்னடா, நமக்கு உடம்பு ஒன்றும் இல்லாமல் இருக்கையிலேயே ஊசி, கீசி குத்தி வைக்கப் போகிறாரா என்ன என்று நினைத்துக் கொண்டிருக்கையில் தம் மருந்துப் பையைத் திறந்து ஒரு பெரிய கவர் ஒன்றை எடுத்தார். அதை என் கையில் வைத்தார்.

கவரைப் பிரித்துப் பார்த்தால் கல்யாணக் கடிதாசு! டாக்டர் பெண்ணுக்குக் கல்யாணம்! "கட்டாயம் வரவேண்டும்" என்றார். 'கட்டாயம் வருகிறேன்' என்றேன்.

இதற்குள் டாக்டர் தானாகத் தேடிவந்த சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடுவானேன் என்று என் தாயார் தீர்மானித்து டாக்டரிடம் தன் கையை நீட்டினாள். காலையில் எழுந்து பத்துமணிக்குச் சாப்பிடுகிறதற்குள் ஒரே கோரப் பசியாய் இருக்கிறது, இதற்கு ஏதாவது மருந்து கொடுங்கள் என்று என் தாயார் கேட்டாள்.

இந்த வியாதி யாருக்குத்தான் இல்லை! எல்லாருக்கும்தான் இருக்கிறது. நாம் என்றால் காலையில் எழுந்ததும் வீட்டில் ஒரு டம்ளர் காப்பி குடித்து விட்டு, பக்கத்து ஹோட்டலுக்குப் போய் அங்கு இரண்டு இட்லி சாம்பார், மெதுவடை சட்னி, ஒரு கப் காப்பி ஸ்ட்ராங்க் போட்டு வைக்கிறோம். இதனால் பத்துமணி சமயத்துக்கு நமக்குப் பசிப்பதில்லை. ஆனால் தாயாரோ என்றால் ஆசாரமாக இருப்பதால் பத்து மணிவரையில் ஒன்றும் சாப்பிடுவதில்லை. இதனால்தான் அவளுக்குப் பசிக்கிறது.

ஆனால் டாக்டர் இதையெல்லாம் சொல்வாரா? சொன்னால் அவர் பிழைப்பு நடக்குமா? ஆகவே தாயாரின் கையைப் பார்த்து ஏதோ மருந்து எழுதிக் கொடுத்து விட்டுப் போய் விட்டார்.

அடுத்த நாள் காலை கல்யாணம். காலையில் போக ஒழியவில்லையாதலால் மாலை நடந்த 'வரவேற்பு'க்குப் போகலாம் என்று டாக்டர் வீட்டை அடைந்தேன்.

டாக்டர் வீட்டை அடைந்தால் அன்றுதான் கல்யாணமா, அல்லது இன்னொரு நாளா என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. பந்தலையும் காணோம், தோரணத்தையும் காணோம். சந்தேகத்தோடேயே டாக்டர் வீட்டை நெருங்கினேன். நெருங்கினால் என்னை அப்படியே தூக்கிவாரிப் போட்டது. டாக்டர் வீட்டைச் சுற்றி பெரிய கொசுவலையால் பந்தல் போடப்பட்டிருந்தது.

பந்தலுக்கு முன்னால் ஒருவர் பன்னீர்ச் செம்புடன் நின்று கொண்டு எல்லார் மீதும் பன்னீர் தெளித்துக் கொண்டிருந்தார். அவர் தெளித்ததுதான் தாமதம், அச்செம்பிலிருந்து துளிகளாக வந்து விழுந்த திராவகத்தின் நாற்றம் சகிக்காமல் மூக்கை மூடிக் கொண்டேன்.

"இது என்ன பன்னீரா இது? எந்தக் கடையில் வாங்கின பன்னீர் ஸார் இது?" என்று பன்னீர்ச் செம்பு வைத்துக் கொண்டிருந்தவரைப் பார்த்து ஆத்திரமாகக் கேட்டேன்.

"இது பன்னீர் என்று யார் சொன்னார்கள்?" என்று பதில் வந்தது.

"என்ன பன்னீர் அல்லவா! பின் என்ன அது?"

"பினைல் ஐயா பினைல்" என்று அவர் சொன்னதும் எனக்கு அப்படியே மயக்கம் போட்டுக் கீழே விழ வேண்டும் போல் பட்டது. ஆனால் மயக்கத்தைத் தெளிவிப்பதற்கு தண்ணீரைத் தெளிப்பதற்குப் பதில் பினைலைத் தெளித்து விட்டால் என்ன பண்ணுவது என்று பயந்து நான் மயக்கம் போட்டுக் கீழே விழாமல் அப்பால் சென்றேன்.

இரண்டு அடிக்கு அப்பால் சந்தனப் பேலா வைத்துக் கொண்டு ஒருவர் நின்று கொண்டிருந்தார். சந்தனத்தைத் தொட்டு வாசனை பார்ப்பதற்காக வலது கை விரல்களால் தொட்டு, இரண்டு கைகளாலும் தேய்த்துக்கொண்டு முகர்ந்து பார்த்தால் கார்பாலிக் சோப் வாசனை! சந்தனப் பேலாவில் சந்தனத்துக்குப் பதில் கார்பாலிக் சோப் கரைத்து வைக்கப்பட்டிருந்தது!

இதற்கு அப்பால் ஒரு தட்டில் கற்கண்டு வைத்துக்கொண்டு ஒருவர் நின்று கொண்டிருந்தார். கற்கண்டை எடுத்து வாயில் போட்டால் ஒரே கசப்பு! கற்கண்டுக்குப் பதில் ஏதோ கசப்பு மருந்து உப்பை டாக்டரின் சிப்பந்திகள் வெகு தாராளமாக விநியோகம் செய்து கொண்டிருந்தார்கள்.

இதற்கு அப்பால் வந்த விருந்தினர்களை வரவேற்பதற்காக டாக்டர் நின்று கொண்டிருந்தார். பெண்ணுக்குக் கல்யாணம் ஆச்சே, புது சரிகை வேஷ்டி கட்டிக்கொண்டு மாப்பிள்ளை மாதிரி விளங்குவார் என்று எதிர் பார்த்தால் ஏதோ ஆபரேஷனுக்குத் தயாராக இருப்பதுபோல் டாக்டர் நீண்ட வெள்ளைச் சட்டை போட்டுக் கொண்டு ஒரு வெள்ளைத் துணியால் வாய்ப் பாகத்தை மூடிக் கட்டிக் கொண்டு கையில் ரப்பர் கவசங்கள் அணிந்

திருந்தார். விருந்தினர்களிடமிருந்து விஷக் கிருமிகள் தமக்குப் பரவிவிடக் கூடாது என்று அத்தனை ஜாக்கிரதையாக இருந்தார் போலும்!

டாக்டருக்குப் பின்னுல் இரண்டு நர்ஸுகள் வெள்ளை உடையில் காணப்பட்டனர். அவர்களும் ஏதோ ஆபரேஷனுக்குத் தயாராக இருப்பதுபோல் தங்கள் வாயை ஒரு வெள்ளைத் துணியால் மூடிக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு நர்ஸுகளில் ஒருவள் என்னை அழைத்துக்கொண்டு போய் நான் உட்காரவேண்டிய இடத்தைக் காண்பித்தாள்.

பந்தலில் உட்காருவதற்கு நாற்காலிகளைக் காணவில்லை. அதற்குப் பதில் ஒரே ஸ்டூல்களாகக் காணப்பட்டன. நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தால் 'முதுகு கூன் விழுந்துவிடும், முதுகு எலும்புக்கு உள்ள பலம் போய்விடும்' என்று டாக்டர் அப்படிச் செய்துவிட்டார் போலிருக்கிறது!

எதிரே நாடகமேடை போல் அலங்காரம் செய்யப்பட்டு, திரைவிடப்பட்டிருந்தது. திரைக்குப் பின்னுல் கச்சேரிக்கோ, அல்லது நடனத்துக்கோ ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள் என்று நினைத்தேன். மேடைக்குப் பக்கத்தில் கீழே மாப்பிள்ளை, பெண்ணுக்காக இரண்டு ஆசனங்கள்—அவையும் ஸ்டூல்கள்தான்—போடப்பட்டிருந்தன. அந்த ஸ்டூல்களின் மீது கிருமிகள் இல்லாமல் சுத்தி செய்யப்பட்ட பஞ்சு விரிக்கப்பட்டிருந்தது.

டாக்டர் கல்யாணம் நடத்தும் புது விதத்தைப் பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருக்கையில் ஒரு நர்ஸ் என்னிடம் வந்து ஏதோ கேட்டாள். அவள் வாயை ஒரு வெள்ளைத் துணி மூடிக்கொண்டிருந்ததால் அவள் என்ன சொன்னுள் என்று முதலில் புரியவில்லை. அவள் தன் கேள்வியை இரண்டு, மூன்று தடவை திருப்பித் திருப்பிக் கேட்ட பிறகு, குடிப்பதற்கு சூடான பானம் வேண்டுமா அல்லது குளிர்ந்த பானம் வேண்டுமா என்று கேட்கிருள் என்று புரிந்தது.

குளிர்ந்த பானம் கொடுங்கள் என்றேன்.

கம்பௌண்டர் போல் உடை தரித்துப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒரு ஆளுக்கு அவள் ஏதோ சமிக்கை செய்தாள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்த ஆள் வெள்ளி டம்ளரில் சர்பத் கொண்டுவந்து கொடுத்தான். ஐயோ சர்பத் என்ரு சொன்னேன்? சர்பத்போல் நிறம் கொடுக்கப்பட்டிருந்த அந்தக் கொயினு மருந்தை இன்று நினைத்துக் கொண்டாலும் எனக்குத் திகிலாக இருக்கிறது.

ஒரு வேளை சூடான பானம் கேட்டிருந்தால் காப்பி அல்லது டீ கொடுத்திருப்பார்களோ என்று பக்கத்தில் சூடான பானம் சாப்பிட்டுக் கொண்டிருந்தவரின் முகத்தைப் பார்த்தேன். அவர் முகத்தை வைத்துக்கொண்ட அஷ்டகோணல்களிலிருந்து அவர் குடித்த சூடான கஷாயத்துக்கு நான் குடித்த கொயினு மருந்தே தேவலை என்று பட்டது.

அந்த சமயம் மாப்பிள்ளையும், பெண்ணும் உள்ளே நுழைந் தார்கள். இதுவரை உலகத்தில் எந்த மாப்பிள்ளையும் பெண்ணும் அணியாத புதுமாதிரி ஆடை அவர்கள் அணிந்திருந்தார்கள். இரண்டு பேரும் ஸ்நான உடை அணிந்திருந்தார்கள். வெளிச்சமும், காற்றும் எவ்வளவுக் கெவ்வளவு உடம்பில் அதிகம் படுகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு நல்லது என்பதற்காக டாக்டர் அவர்களுக்கு அந்த உடையைக் கல்யாணப் பரிசாக அளித்தார் என்று சொல்லிக் கொண்டார்கள்.

தம்பதிகள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்ததும் மேடையில் இருந்த திரை விலகிற்று. மேடையில் டாக்டர் ஒரு ஒலி பெருக் கியின் பின்னல் நின்று கொண்டிருந்தார்.

"அன்பர்களே! தங்களை இப்பொழுது செம்மங்குடி ஸ்ரீனி வாசன், கும்பகோணம் ராஜமாணிக்கம், பாலக்காட்டு மணி மூவரும் மகிழ்விப்பார்கள்" என்ருர்.

'அப்பாடா! மற்ற விஷயங்களில் கூத்து அடித்த டாக்டர் இந்த ஒரு விஷயத்திலாவது தாம் தலையிடாமல் விட்டு வைத்தாரே' என்று நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கையில்

டாக்டர் செம்மங்குடி ஸீனிவாசன் மேடைக்கு வந்து வைடமின் ஏயைப் பற்றிப் பிரசங்கம் பண்ண ஆரம்பித்தார்.

வைடமின் பி யைப் பற்றி டாக்டர் கும்பகோணம் ராஜ மாணிக்கமும் வைடமின் ஸியைப்பற்றி டாக்டர் பாலக்காட்டு மணியும் தனக்குப் பின்னுல் விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று அவர் சொன்னதுதான் தாமதம், நான் தலைவலிக்குப் பயந்து கொண்டு அங்கிருந்து ஓட்டம் பிடித்தேன். நர்ஸ் ஒருத்தி வெற்றிலைப்பாக்கு பை வாங்கிக்கொண்டுபோங்கள் என்று சொன்னதற்குக் கூட நிற்காமல் ஓடிவந்து வீடு சேர்ந்தேன்.

அடுத்த நாளே டாக்டரிடமிருந்து ஒரு கடிதம் வந்து சேர்ந்தது. கல்யாணக் கடிதாசு கொடுப்பதற்காக அவர் பண்ணின விஸிட்டுக்கும், கல்யாணத்தன்று கொடுத்த மருந்துக்கும் சேர்த்து அவர் பில் அனுப்பியிருந்தார்!

எஜமான் தேவை

குமாஸ்தா வேலைக்காகக் காரியாலயம் காரியாலயமாக நுழைந்து புறப்பட்டுக்கொண்டிருந்த குமாஸ்தா குமாரசாமிக்கு அலுத்து, அலுத்து வந்தது. இது வரையில் சென்னையில் அவர் மனுப்போடாத ஆபீஸ் கிடையாது; ஏறி இறங்காத ஆபீஸ் மாடிப்படிகள் கிடையாது. இருந்தும் அவருக்கு வேலை என்னமோ கிடைத்த பாடில்லை.

எல்லா காரியாலயங்களிலும் குமாரசாமியை ஒரே விதக் கேள்விகள் தான் கேட்டார்கள்.

"உம் பெயர் என்ன?"

"உம் வயது என்ன?"

"நீர் என்ன ஜாதி?"

"நீர் என்ன பாஸ் பண்ணி யிருக்கிறீர்?"

"நீர் இதற்கு முன் எந்தக் காரியாலயத்தில் வேலை பார்த்தீர்?"

"அதை ஏன் விட்டீர்? அல்லது அது ஏன் உம்மை விட்டது?"

"அதற்கும் முன் எந்தக் காரியாலயத்தில் வேலை பார்த்தீர்? அதை ஏன் விட்டீர், அல்லது அது ஏன் உம்மை விட்டது?"

"அதற்கும் முன் எந்தக் காரியாலயத்தில் வேலை பார்த்தீர்? அதை ஏன் விட்டீர், அல்லது அது ஏன் உம்மை விட்டது?"

" இதற்கு முன் வேலை பார்த்த காரியாலயத்திலிருந்து ஏதாவது நற்சாட்சி பத்திரம் கொண்டு வந்திருக்கிறீரா !"

என்று இப்படியெல்லாம் கேள்விகள் கேட்கப்படும். இதற்கெல்லாம் குமாஸ்தா குமாரசாமி டக், டக் என்று பதில் சொல்லி விடுவார்.

ஆனால், "ஷார்ட் ஹாண்ட் டைப்பிங் பாஸ் பண்ணியிருக்கிறீரே ? காரியாலயத்தில் கணக்குகள் வைத்துக் கொள்வதற்குத் தெரிய வேண்டிய புக்கீப்பிங் பாஸ் பண்ணியிருக்கிறீரா ?" என்று கேள்விகள் கேட்கப்படும் பொழுது குமாஸ்தா குமாரசாமியின் பாடு திண்டாட்ட மாகி விடும்.

"புக்கீப்பிங் பாஸ் பண்ணவில்லை. ஆனால்—" என்று குமாரசாமி இழுத்தாற் போல் பதில் சொல்வார்.

"பரீட்சை கொடுக்காவிட்டால் உம்மை யார் குமாஸ்தாவாக எடுத்துக் கொள்வார்கள் என்று நினைத்தீர் ?" என்று முதலாளி கடுமையாகக் கேட்பார்.

"இல்லை, பரீட்சை கொடுக்காவிட்டாலும் அனுபவ ஞானத்தினால் கணக்குகள் வைத்துக் கொள்வது எப்படி என்று தெரிந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் வேண்டுமானால் பரீட்சித்துப் பார்த்துக் கொள்ளலாம்."

"என்ன ஐயா! உமக்குக் கணக்கு எழுதத்தெரியுமா, தெரியாதா என்று பரீட்சை பார்ப்பது தானா எனக்கு வேலை? உம் ஒருவரை நான் பரீட்சித்துக் கொண்டிருந்தால் பாக்கி அபேட்சகர்களுக்கு எப்பொழுது பேட்டி அளிப்பது? எனக்குப் பிடித்தமான குமாஸ்தாவை எப்பொழுது தேர்ந்தெடுப்பது ?" என்று முதலாளி மிகக் கடுமையாகப் பதில் சொல்வார்.

இம்மாதிரி முதலாளிகளிடம் வசவு கேட்டு, வசவு கேட்டுக் குமாரசாமிக்கு அலுத்து விட்டது.

ஒரு நாள் மாலை. குமாரசாமி மிகவும் மனது இடிந்துபோய் வீடு திரும்பினார். வழக்கத்தைவிட அன்று அதிகமாகக் காரி

யாலயங்கள் ஏறி இறங்கி விட்டபடியால் மிகவும் களைத்துப் போயிருந்தார். களைப்பின் மிகுதியால் சாய்வு நாற்காலியில் சாய்ந்ததும், குமாரசாமியின் கண்கள் தாமாகவே மூடிக் கொண்டன.

குமாரசாமி கண்ணை விழித்துப் பார்த்தபோது காலை எட்டு மணியிருக்கும். அவர் இருந்த சிறு வீட்டுக்கு முன்னால் ஏகத்தாராகக் கார்கள் நின்று கொண்டிருந்தன. சென்னையில் இருந்த பெரிய, பெரிய கம்பெனிகளின் முதலாளிகள் எல்லாம் குமாரசாமியைப் பேட்டி காண்பதற்காகக் காரில் வந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள். குமாஸ்தா குமாரசாமி தன்னைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்ளவேண்டுமே என்பதற்காக ஒவ்வொரு முதலாளியும் தன்னை எவ்வளவு நன்கு அலங்கரித்துக்கொள்ள முடியுமோ, அவ்வளவு நன்கு அலங்கரித்துக்கொண்டு வந்திருந்தார். "எஜமான் தேவை. பழைய குமாஸ்தாக்கள் கொடுத்த நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பம் செய்துகொள்ளவும்" என்று குமாரசாமி பத்திரிகையில் விளம்பரம் போட்டிருந்ததைப் பார்த்துவிட்டுத்தான் இத்தனை பேரும் வந்திருந்தார்கள் என்றால்?

முதல் அபேட்சகர் உள்ளே நுழைந்தார். குமாஸ்தா குமாரசாமி அவரைப் பின்கண்ட கேள்விகள் கேட்கத் தொடங்கினார்.

"உம் பெயர் என்ன?"

"உம் வயது என்ன?"

"நீர் என்ன ஜாதி?"

"நீர் என்ன பாஸ் பண்ணியிருக்கிறீர்?"

"இதற்கெல்லாம் அந்த முதலாளி அபேட்சகர் டக், டக் கென்று பதில் சொல்லிக்கொண்டு வந்தார். ஆனால், அதற்கு அடுத்து வந்த கேள்விகளுக்குத்தான் அவரால் திருப்திகரமான பதில் அளிக்க முடியவில்லை.

"குமாஸ்தாக்களை நடத்தும் முறை என்று ஒரு விஷயம் இருக்கிறதே, அதில் பரீட்சை கொடுத்திருக்கிறீர்களா?"

"பரீட்சை கொடுக்கவில்லை. ஆனால்—"

"பரீட்சை கொடுக்காவிட்டால் உம்மை யார் எஜமானனாக எடுத்துக் கொள்வார்கள் என்று நினைத்தீர்? இந்தக்காலத்தில் பரீட்சை கொடுத்தவர்களே எஜமானன் வேலைக்குத் திண்டாடும் பொழுது பரீட்சை கொடுக்காத உம்மை யார் வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள் என்று நினைத்தீர்!"

"இல்லை, பரீட்சை கொடுக்காவிட்டாலும் அனுபவ ஞானத்தினால் குமாஸ்தாக்களை எப்படி நடத்துவது என்று தெரிந்து கொண்டிருக்கிறேன். நீங்கள் வேண்டுமானால் பரீட்சித்துப் பார்த்துக்கொள்ளலாம்."

"என்ன ஐயா! உமக்கு குமாஸ்தாக்களை நடத்தும் விதம் தெரியுமா, தெரியாதா என்று பரீட்சை பார்ப்பது தானா எனக்கு வேலை? உம் ஒருவரை நான் பரீட்சித்துக்கொண்டிருந்தால் பாக்கி அபேட்சகர்களுக்கு எப்பொழுது பேட்டி அளிப்பது? எனக்குப் பிடித்தமான எஜமானனை எப்பொழுது தேர்ந்தெடுப்பது? சரி, அது இருக்கட்டும். நீர் ஏன் பரீட்டை கொடுக்கவில்லை? பரீட்சையில் தேறமாட்டோம் என்ற பயத்தினாலா?"

"இல்லை. நான் எஜமானனாக வந்த காலத்தில் இந்தப் பரீட்சைகள் இருக்க வில்லை. அதனால் கொடுக்கவில்லை."

"அப்பொழுது பரீட்சைகள் இல்லா விட்டால் என்ன? அதற்குப் பிறகு தான் பரீட்சைகள் ஏற்பட்டனவே, உடனே படித்துப் பாஸ் பண்ணக் கூடாது? சரி, அது இருக்கட்டும். இது விஷயத்தை அனுப ஞானத்தினால் தெரிந்துகொண்டிருப்பதாகச் சொன்னீரே, குமாஸ்தாவிடம் முதலாளி எப்படி நடந்துகொள்ள வேண்டும், சொல்லும் பார்க்கலாம்."

"குமாஸ்தாவிடம் முதலாளி நடந்து கொள்ளவேண்டிய விதங்களாவன :—

1. குமாஸ்தா காரியாலயத்துக்கு எவ்வளவு நாழி கழித்து வந்தாலும், முதலாளி முகத்தைக் கடுத்துக்கொள்ளக் கூடாது, அல்லது குமாஸ்தாவைக் கோபித்துக்கொள்ளக்கூடாது.

2. குமாஸ்தா சாக்குச் சொல்லாமல் எவ்வளவு லீவ் எடுத்து கொண்டாலும் முதலாளி பார்த்துக்கொண்டே சிரித்துக் கொண்டிருக்க வேண்டும்.

3. முதலாளி லீவ் எடுத்துக்கொள்வதாய் இருந்தால் குமாஸ்தாவிடம் முன் கூட்டியே எழுத்து மூலமாகத் தெரிவித்து, குமாஸ்தாவின் அனுமதி பெற்றுத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. குமாஸ்தா அவசரத்தில் ஏதாவது தவறு செய்ய நேரிடு மாகையால் அவற்றையெல்லாம் சரி பார்த்து, குமாஸ்தாக்களுக்குக் கெட்ட பெயர் வராமல் பார்த்துக் கொள்வது முதலாளியின் முக்கிய கடமைகளில் ஒன்ருகும். இன்னும்—''

'' சரி அது இருக்கட்டும். இதற்கு முன் இருந்த குமாஸ்தாவை விட்டு விலகினீரே, நீராக விலகினீரா, அவர் விலகச் சொன்னரா ?''

'' நானுகத்தான் விலகினேன்.''

'' ஏன் விலகினீர் ? ''

'' இன்னும் நல்ல குமாஸ்தாவுக்கு எஜமானுக வேலை பார்க்க வேண்டும் என்றுதான் விலகினேன்.''

'' இதற்கு முன்னல் இருந்த குமாஸ்தாவிடம் ஏதாவது நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறீரா ?''

'' பெற்றிருக்கிறேன். இதோ கொண்டும் வந்திருக்கிறேன் '' என்று சொல்லி அந்த முதலாளி அபேட்சகர் ஒரு கடிதத்தை நீட்டினர். அதில் பின் வருமாறு எழுதியிருந்தது.

'' ஸ்ரீ ....அவர்கள் இரண்டு வருஷ காலம் என்னுடைய எஜமானுக இருந்தார். குமாஸ்தாக்களை நடத்தும் முறையைப்

பற்றி அவர் பரீட்சை கொடுத்திருக்கா விட்டாலும், அனுபவத்தில் அதை நன்கு அறிந்திருக்கிறார். இந்த இரண்டு வருஷ காலமும் அவர் என் மனதுக்கு மிகவும் திருப்தியாக நடந்து கொண்டார். இரண்டு வருஷ காலத்தில் நான் இரண்டாயிரம் தடவைக்குமேல் காரியாலயத்துக்கு நாழி கழித்துப் போயிருக்கிறேன். இருந்தும் அவர் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் தான் என்னை வரவேற்பார். நான் கடிதங்களில் எவ்வளவு தவறு இழைத்தாலும், அவற்றையெல்லாம் சரியாகத் திருத்தி என் தவறுதல்கள் வெளிக்குத் தெரியாதபடி காப்பாற்றி யிருக்கிறார். நல்ல எஜமானன் வேண்டும் என்று கோரும் எந்தக் குமாஸ்தாவும் இவரை வேலைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று நான் பலமாகச் சிபாரிசு செய்கிறேன்.

—குமாஸ்தா குணசீலன் ''

இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, குமாஸ்தா குமாரசாமி அவரைப் பார்த்து, '' சரி, நீர் போகலாம். உம்முடைய மனுவையும், நற்சாட்சிப் பத்திரங்களையும் மேஜையில் வைத்து விட்டுப் போம் '' என்று சொல்லி அவரை அனுப்பினார்.

அன்று முழுவதும் குமாஸ்தா குமாரசாமிக்கு முதலாளி அபேட்சகர்களுக்குப் பேட்டி அளிப்பதும், அவர்களைக் கேள்விகள் கேட்பதுமாகவே போய்விட்டது.

கடைசியாக ஒரு அபேட்சகர் வந்து சேர்ந்தார். அவரைப் பார்க்கவே குமாஸ்தா குமாரசாமிக்குப் பிடிக்கவில்லை.

அவரைப் பார்த்தால் பழைய வாசனையை இன்னும் மறவாத பழைய காலத்து முதலாளிபோல் பட்டது.

'' குமாஸ்தாக்களை நடத்தும் விதத்தைப் பற்றி பரீட்சை கொடுத்திருக்கிறீரா? '' என்று குமாரசாமி கேட்ட கேள்விக்கு அவர் '' காரியாலயத்தில் நடந்து கொள்ள வேண்டியது எப்படி என்பதைப் பற்றி நீர் பரீட்சை கொடுத்திருக்கிறீரா? '' என்று கேட்டுவிட்டார்.

அவ்வளவுதான், இரண்டு பேருக்கும் சண்டை ஆரம்பித்தது. சண்டை வலுத்துக்கொண்டே போய் ஒருவர் குடுமியை ஒருவர்

பிடித்துக்கொள்ள வேண்டிய கட்டம் வந்தது. ஆனால் இருவருக்கும் குடுமி கிடையாததால், என்ன பண்ணுவது என்று இருவரும் திகைத்துக் கொண்டிருக்கையில், ஏதோ இடி முழக்கம் கேட்கவே குமாரசாமி கண்ணை விழித்துப் பார்த்தார்.

எதிரே மனைவி காப்பியும், கையுமாக நின்று கொண்டிருந்தாள்.

"எதற்காக இப்படிச் சாயந்திர வேளையில் படுத்துத் தூங்கறீங்க? இந்தாங்க; இந்தக் காப்பியைக் குடிங்க" என்று காப்பி டம்ளரைக் கணவனிடம் நீட்டினாள்.

"அட ஈஸ்வரா! இத்தனை நேரம் நாம் கண்டது பகல் கனவுதானா?" என்று குமாஸ்தா குமாரசாமி முண முணத்துக் கொண்டார்.

சண்டைக்காரனும்
சாட்சிக்காரனும்

சண்டைக்காரன் காலில் விழுவதை விட சாட்சிக்காரன் காலில் விழுவது நல்லது என்றோ, அல்லது சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுவது நல்லது என்றோ ஒரு பழமொழி இருக்கிறது. யார் காலில் விழுவது நல்லது, அல்லது யார் காலில் விழுவது கெடுதல் என்று எனக்குச் சரியாக ஞாபகமில்லை. அனுபவ பூர்வமாகவும் யார் காலில் விழுவது நல்லது அல்லது யார் காலில் விழுவது நல்லது அல்லவென்றும் தெரிந்து கொள்ளவில்லை.

ஏனெனில் இதுவரை எனக்குச் சண்டைக்காரனும் ஏற்பட்டதில்லை; அந்தச் சண்டையைத் தீர்ப்பதற்காக சாட்சிக்காரனைத் தேடிப் போனதும் இல்லை.

ஆனால் எல்லோருமே என்னைப்போல் சண்டையையோ, அல்லது சண்டைக்காரர்களையோ கண்டால் பயந்து ஓடி ஒளிந்து கொள்கிறார்களா? வலுச் சண்டைக்குப் போகாவிட்டாலும் வந்த சண்டையை விடக்கூடாது என்று எத்தனை பேர் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறார்கள்!

ஆகவேதான் உலகில் சண்டைக்காரர்கள் மலிந்து விட்டார்கள். ஆனால் சண்டைக்காரன் என்று ஒருவன் இருந்தால் உடனே சாட்சிக்காரன் என்று ஒருவன் இருக்க வேண்டுமா என்று நீங்கள் கேட்கலாம். நானும் போன வாரம் வரை அப்படித்தான் கேட்டுக் கொண்டிருந்தேன். போன வாரம் மலைக்கோட்டை மாணிக்கத்திடம் அடிபட்ட என் பக்கத்து வீட்டுக்காரர் நடந்து

கொண்ட விதத்தைப் பார்த்த பிறகுதான் சண்டைக்காரன் என்று ஒருவன் இருந்தால், சாட்சிக்காரன் யார் என்று தெரிந்தால் மட்டும் போதாது, இன்னும் எத்தனையோ விஷயங்கள் தெரிந்திருக்க வேண்டும் என்று அறிந்து கொண்டேன்.

மலைக் கோட்டை மாணிக்கம் என்றாலே வாயை மூடிக் கொண்டிருக்கும் சிறு பிள்ளைகூட பயத்தினால் வாயைத் திறந்து அழத் தொடங்கும்; அவனைக் கண்டால் எல்லாருக்கும் அத்தனை பயம்; அத்தனை பெரிய ரௌடி அவன்.

போன வாரம் ஒரு நாள் ஜனச் சந்தடியற்ற தெரு வழியாகப் போய்க் கொண்டிருக்கையில் மலைக்கோட்டை மாணிக்கம் பக்கத்து வீட்டுக்காரரை அடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். சண்டையில் தலையிட்டு, அதை விலக்குவதா, வேண்டாமா என்றெல்லாம் நான் யோசிக்கவில்லை. ஏனெனில் மலைக்கோட்டை மாணிக்கம் சம்பந்தப்பட்டவரையில் சண்டையை விலக்குவது, அதுவும் என்னால் விலக்குவது என்பது முடியாத காரியம். அதற்குப் பதில் எதிரியின் தாக்குதல்களை பக்கத்து வீட்டுக்காரருக்குப் பதில் நாம் தாங்கிக் கொள்வதா, வேண்டாமா என்று யோசிக்க ஆரம்பித்தேன். ஆனால், அந்த யோசனைக்கும் அதிகம் இடம் கொடுத்து என்னை தர்ம சங்கடத்தில் மாட்டி வைக்காமல் மலைக் கோட்டை மாணிக்கம் பக்கத்து வீட்டுக்காரரை அடிப்பதை நிறுத்தினான்.

அடிப்பதை நிறுத்தின மாணிக்கம் அப்பால் போக நகர்ந்தான். அவனைப் பார்த்து பக்கத்து வீட்டுக்காரர் வெகு தைரியமாக, "ஏ மாணிக்கம், இங்கே வா" என்று கூப்பிட்டார்.

ஐய்யையோ, திரும்பவும் அவரை அவன் அடிக்கத் தொடங்கி, சண்டையில் தலையிடுவதா வேண்டாமா என்ற தர்ம சங்கடமான நிலையில் நம்மை மாட்டி வைக்கப்போகிறானே என்று நான் கவலைப் பட்டுக் கொண்டிருக்கையில், மலைக்கோட்டை மாணிக்கம் திரும்பி வந்து "என்னய்யா திரும்பவும் ஏதாவது கேட்கிறதா?" என்று கேட்டான்.

"அதுதான் உன் ஆசை தீர அடித்து விட்டாயே, இன்னும் என்ன பாக்கி வைத்திருக்கிறாய்?" என்று பக்கத்து வீட்டுக்காரர் கேட்டார்.

"பின் எதற்காகக் கூப்பிட்டீங்க!" என்று கேட்டான் மலைக் கோட்டை மாணிக்கம்.

"இல்லை, உன்னைச் சில கேள்விகள் கேட்கவேண்டும். அதற் காகத்தான் கூப்பிட்டேன்" என்று பக்கத்து வீட்டுக்காரர் பதில் அளித்தார்.

இத்தனை சம்தியாக அடி வாங்கிய பிறகும் ஏதோ கேள்விகள் கேட்க விரும்புகிறாரே, இவருக்கு மூளையில் உள்ள திருகு ஆணிகள் சரியாகத் திருகப்படவில்லைபோலிருக்கு என்று மலைக்கோட்டை மாணிக்கம் மனதிற்குள் நினைத்துக்கொண்டு வெளிப்படையாகச் சற்று சிரித்தான்.

"சரி, கேளுங்கள்" என்றான்.

"ஆமாம், உன் ஐயா பெயர் என்ன?"

"எங்க ஐயா பெயரா? முருகேச முதலியாரு."

"உன் தாத்தா பெயர் என்ன?"

"எதற்காக என் குலம், கோத்திரம், எல்லாம் விசாரிக்கிறீங்க? ஏதாவது பொண்ணு கிண்ணு நமக்குக் கட்டி வைக்கப் போறீங் களா?"

"அது இருக்கட்டும் அப்பா, உன் தாத்தா பெயர் என்ன சொல்லு அப்பா."

"எந்தப் பாட்டனைக் கேட்கறீங்க? என் அப்பனைப் பெற்ற பாட்டனையா, என் ஆத்தாவைப் பெற்ற பாட்டனையா?"

"இரண்டு பேர் பெயரையும்தான் சொல்லேன்."

"எங்க அப்பனைப் பெற்ற பாட்டனின் பெயர் தேவராச முதலியாரு. என் ஆத்தாவைப் பெற்ற பாட்டனின் பெயர் நடராச முதலியாரு."

"சரி, உன் உயரம் என்ன?"

இந்தக் கேள்வியைக் கேட்டதும் மலைக்கோட்டை மாணிக்கத்துக்கு ஏற்பட்ட அதே சந்தேகம் எனக்கும் ஏற்பட்டது. மலைக்கோட்டை மாணிக்கம் பக்கத்து வீட்டுக்காரர் தலையில் பலமாக அடித்தது அவருக்கு ஏதாவது மூளைக் குழப்பம் ஏற்பட்டு விட்டதோ என்று நாங்கள் இருவரும் நினைத்தோம்.

"என்னங்க, என்னென்னமோ கேள்வி கேட்கறீங்களே?" என்றான் மலைக்கோட்டை மாணிக்கம்.

"நான் என்ன கேள்வி கேட்டால் என்னப்பா? கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லேன்."

"என் உயரம் எனக்கு எப்படித் தெரியும்?"

"அப்படியானால் இதோ கண்டுபிடித்துச் சொல்லுகிறேன்

பார்" என்று தன் சட்டைப் பையிலிருந்து ஒரு அங்குல நாடாவை எடுத்து மலைக்கோட்டை மாணிக்கத்தின் உயரத்தை அளந்தார்.

"நீ என்னை அடித்தாயே, அந்தக் கழியின் நீளம் என்ன?"

"நீங்களேதான் அளந்து பாருங்களேன்."

பக்கத்து வீட்டுக்காரர் அளந்து பார்த்து ஐந்து அடி ஏழு அங்குலம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டார்.

"சரி உன் தலையில் கட்டியிருக்கிறாயே, அந்த உருமாலை கொள்ளே காலம் உருமாலை தானே?"

"ஆமாங்க."

"ஆமாம், நீ என்னை இருபது அடிதானே அடித்தாய்?"

"என்னுங்க, இருபத்தைந்து அடி அடித்திருக்கிறேன், இருபது அடி என்கிறீங்களே!"

"என்னப்பா, எண்ணி இருபது அடி அடித்துவிட்டு இருபத்தைந்து என்கிறாயே?"

"இல்லீங்க, இருபத்தைந்து அடிதான்"

"என்னப்பா, எனக்கு கணக்குத் தெரியாது என்கிறாயா? நீ என்னைப்போல் கணக்கு எம். ஏ. பரீட்சை கொடுக்கவில்லை. ஒவ்வொரு அடிக்கும் ஒரு தழும்பு என்று கணக்கு வைத்துக்கொண்டு எத்தனை தழும்புகள் என்று எண்ணிப்பாரேன்......என்ன இருபது தழும்பு இருக்கிறதா? இருபது அடி. அவ்வளவுதானே? இந்தச் சின்னக் கணக்கு உனக்குப் போடத் தெரியவில்லையா?"

"சரிங்க, நான் போகலாமா?"

"கடைசியாக ஒரே ஒரு கேள்வி. நீ என்னை முதலில் அடித்தாயே, அப்பொழுது அந்த லாந்தர் கம்பத்துக்கு மேற்கே ஒரு குப்பைத் தொட்டி தெரிகிறதே, அங்கு நின்றுகொண்டு தானே அடித்தாய்?"

"ஆமாங்க."

"சரி, நீ போகலாம்" என்று சொல்லிவிட்டு லாந்தருக்கும், குப்பைத் தொட்டிக்கும் இடையில் உள்ள தூரத்தைப் பக்கத்து வீட்டுக்காரர் அங்குல நாடாவினால் அளந்து பார்த்தார்.

பக்கத்து வீட்டுக்காரரின் சித்த சுவாதீனத்தைப் பற்றி எனக்கு அப்பொழுது ஏற்பட்டிருந்த சந்தேகம் பலத்தது.

"ஏன் ஸார், உங்களுக்கு உடம்பு சரியில்லை போலிருக்கிறதே. ஒரு வண்டி கொண்டுவந்து டாக்டர் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போகட்டுமா?" என்று கேட்டேன்.

"போய்யா, நீரும் வேண்டாம். உம் வண்டியும் வேண்டாம்" என்று சொல்லிவிட்டு விர்ரென்று அவர் நடையைக் கட்டினார்.

இது நடந்த ஒரு வாரத்துக்கெல்லாம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலிருந்து எனக்கு ஒரு சம்மன் வந்தது. மலைக் கோட்டை மாணிக்கம் மீது தொடுத்துள்ள வழக்கில் பக்கத்து வீட்டுக்காரர் என்னை சாட்சியாகப் போட்டிருந்தார்.

நான் சாட்சி சொல்வதற்காகக் கோர்ட்டுக்குப் போனேன். மலைக் கோட்டை மாணிக்கம் தனக்கு மேல் ரௌடி என்று பெயர் வாங்கியிருந்த ஒரு வக்கீலைத் தனக்காக ஆஜராகும்படி ஏற்பாடு செய்திருந்தான்.

பக்கத்து வீட்டுக்காரரை வக்கீல் கேட்ட கேள்விகளும், அதற்குப் பக்கத்து வீட்டுக்காரர் அளித்த பதில்களும் என்னைத் திடுக்கிட வைத்தன.

வக்கில் : ஏன் ஐயா, குற்றவாளிதான் அடித்ததாக அத்தனை நிச்சயமாகச் சொல்கிறீரே, குற்றவாளியை உமக்குத் தெரிமா?

ப. வீட்டுக் : தெரியும்.

வக்கில் : உம்மை அடித்தவரின் பெயர் தெரியுமா?

ப. வீட்டுக் : தெரியும். மலைக்கோட்டை மாணிக்கம்.

வக்கீல் : மலைக்கோட்டை மாணிக்கம் என்றால் இந்த ஆள் தான் என்பது என்ன நிச்சயம். இந்த ஆளுடைய ஐயா பெயர் உங்களுக்குத் தெரியுமா!

ப. வீட்டுக் : ஐயா பெயர் என்ன? இவனுடைய பாட்டனு டைய பெயர் கேட்டாலும் தெரியும். அப்பனைப் பெற்ற பாட்டன் பெயரும் தெரியும். ஆத்தாளைப் பெற்ற பாட்டனின் பெயரும் தெரியும்.

இந்த எல்லாப் பெயர்களையும் பக்கத்து வீட்டுக்காரர் சரி யாகச் சொன்னபோது கோர்ட்டில் இருந்த எல்லோரும் நகைத் தார்கள். ஆனால் மலைக்கோட்டை மாணிக்கத்தின் முகமும், அவனுடைய வக்கீலின் முகமும் சிறுத்தது.

வக்கீல் : குற்றவாளி உங்களை அடித்ததாகச் சொல்லுகிறீரே, கையினால் அடித்தானா, கழியினால் அடித்தானா?

ப. வீட்டுக் : கழியினால்.

வக்கீல் : கழியின் நீளம் எத்தனை அடி இருக்கும்? சுமாராகச் சொன்னால் போதும்.

ப. வீட்டுக் : சுமார் என்ன? கணக்காகவே சொல்ல முடியும்; இரண்டு அடி, ஏழு அங்குலம்.

வக்கீல் : குற்றவாளி உம்மை அடித்ததாகச் சொல்கிறீரே, அப்பொழுது என்ன உடை உடுத்திக் கொண்டிருந்தான்?

ப. வீட்டுக் : இடையில் ஒரு அழுக்கு வேஷ்டியும், தலையில் கொள்ளேகாலம் உருமாலை முண்டாசும்.

வக்கீல் : குற்றவாளி உம்மை அடித்தபோது எங்கிருந்தான்?

ப. வீட்டுக் : அந்தத் தெருவில் உள்ள லாந்தர் கம்பத்துக்கு மேற்கே நாலு அடி ஐந்து அங்குலத்துக்கு அப்பால் ஒரு குப்பைத் தொட்டி இருக்கிறதே, அதற்குப் பக்கத்தில் நின்றுகொண்டு.

வக்கீல் : ஆமாம், உம்மை எத்தனை அடி அடித்தார்?

ப. வீட்டுக் : இருபது.

வக்கீல் : அதற்கு சாட்சி இருக்கிறதா?

"இருக்கிறது. இதோ என் முதுகில் ஏற்பட்ட இருபது தழும்புக் காயங்களுக்கும் போடப்பட்ட இருபது பிளாஸ்திரிகளும் இவரும் தான்" என்று சொல்லி விட்டுப் பக்கத்து வீட்டுக்காரர் என்னைச் சுட்டிக் காட்டினார்.

மாஜிஸ்டிரேட் என்னைப் பார்த்து, "என்ன ஸார், நீங்கள் பக்கத்தில் இருந்துமா அவர் இருபது அடி வாங்கும் வரை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தீர்கள்!" என்று கேட்டார்.

“நான் என்ன பண்ணலாம் யுவர் ஆனர்? நான் வேடிக்கை பார்த்திருக்காவிட்டால் நான் அடி படுவதை அவர் வேடிக்கை பார்க்க நேர்ந்திருக்கும்” என்றேன்.

அத்துடன் சாட்சியமும், விசாரணையும் முடிந்தது.

மலைக்கோட்டை மாணிக்கத்துக்கு ஆறுமாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

கோர்ட்டு முடிந்ததும், பக்கத்து வீட்டுக்காரர் என்னைப் பார்த்துச் சொன்னார். “அன்றைக்கு என் புத்தி ஸ்வாதீனத்தைப் பற்றிச் சந்தேகப்பட்டீரே, இப்பொழுது புரிந்ததா? இதற்கு முன்னர் அடிபட்ட போதெல்லாம் இந்த வக்கீல் இந்த மாதிரிதான் என்னைக் கேள்விகள் கேட்டு, என் வழக்கைத் தோற்கடித்திருக்கிறார். அதற்காகத்தான் இந்தத் தடவை அடிபட்டாலும் சாட்சியத்துடனும், புள்ளி விவரங்களுடனும் அடிபடுவது என்று தீர்மானித்தேன். சாட்சி இல்லாமல் அடிபட்டுக் கொண்டிருக்கிறேனே என்று கவலைப் பட்டுக்கொண்டிருக்கையில் நல்ல வேளையாகத் தாங்கள் வந்து காப்பாற்றினீர்கள்.”

சண்டைக்காரன் இருந்தால், கட்டாயம் சாட்சிக்காரன் வேண்டும், அத்துடன் புள்ளி விவரக் கணக்குகளும் வேண்டும் என்று தெரிந்ததா?

மாப்பிள்ளையாசுரன்

முன்னொரு காலத்தில் அதாவது அசுரர்கள் ஜனங்களை துன்புறுத்தி வந்த காலத்தில் மாப்பிள்ளையாசுரன் என்று ஒரு அசுரன் இருந்தான். இந்த அசுரனுக்கும், மற்ற அசுரர்களுக்கும் எத்தனையோ விஷயங்களில் பெருத்த வித்தியாசம் காணப்பட்டது. மாப்பிள்ளையாசுரன் மற்ற அசுரர்களைப் போல் பார்ப்பதற்கு அவலட்சணமாக இருக்கமாட்டான். கோரைப் பற்களோ, மொன்னை மூக்கோ, பரட்டை மயிரோ, பருத்த தொந்தியோ, சிவந்த கண்களோ, நீண்டு வளைந்த நகங்களோ அவனுக்குக் கிடையாது. இன்னும் மற்ற அசுரர்களைப் போல் பெருத்த உருவத்துடனும் அவன் இருக்க மாட்டான்.

அசப்பில் பார்த்தால் நம்மைப் போல் தான் சாதாரண மனிதனாகக் காணப்படுவான். ஆனால் அவன் செய்கைகளைப் பார்த்தால்தான் அவன் மானிட உருக்கொண்டு மக்களை ஏமாற்ற வந்த அசுரன் என்பது தென்படும்.

எப்படி மாப்பிள்ளையாசுரன் உருவத்தில் மற்ற அசுரர்களுடன் வேறு பட்டிருந்தானோ, அதே மாதிரி செய்கையிலும் மாறுபட்டிருந்தான். மற்ற அசுரர்கள் என்றால் அவர்கள் என்னென்ன தீங்குகள் இழைப்பார்கள் என்று நமக்குத் தெரியும். அதைக் கொண்டு நாம் அவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள முயலலாம்.

உதாரணமாக மற்ற அசுரர்கள் என்றால் வீட்டைக் கொளுத்துவார்கள், ஆடு, மாடுகளைக் கொல்லுவார்கள், மனிதர்களை வதைத்துத் தின்பார்கள், அவ்வளவு தான்.

ஆனால் மாப்பிள்ளையாசுரன் இழைக்கும் தீங்குகளிடமிருந்து யாராலும் தப்பித்துக்கொள்ள முடியாது. மற்ற அசுரர்களைப் போல் அவன் மனிதர்களை ஒரே அடியில் கொன்று தீர்த்துவிட மாட்டான். அதற்குப் பதில் உயிரை வாங்காமல், அங்குலம், அங்குலமாக, அங்கம், அங்கமாக கொல்லாமல் கொல்லுவான்.

மனிதர்களை ஹிம்சிப்பதற்கு மாப்பிள்ளையாசுரன் ஒரு தந்திர மான வழி வைத்திருந்தான். யாரை ஹிம்சிக்க வேண்டும் என்று தோன்றுகிறதோ, அவர்கள் பெண்ணை முதலில் கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு இவன் திட்டம் போடுவான்.

மாப்பிள்ளையாசுரன் பார்ப்பதற்கு அழகாக இருந்ததுடன் அவ்வப்பொழுது அழகிய வாலிபர்களைப் போல் உருமாற்றிக் கொள்ளும் சக்தியையும் பெற்றிருந்தான். இவன் வேஷத்தைக் கண்டு மயங்கி எத்தனையோ பெற்றோர்கள் தங்கள் பெண்ணை இவனுக்கு விவாகம் செய்து கொடுப்பார்கள். செய்து கொடுத்த பிறகு, "ஐயோ, அருமையாக வளர்த்த பெண்ணை அறியாமல் அசுரன் கையில் கொடுத்துவிட்டோமே" என்று வருத்தப் படுவார்கள்.

ஏனெனில் மாப்பிள்ளை யாசுரன் தன் ஹிம்சை வேலையை இனிதான் ஆரம்பிப்பான். பெண்ணின் பெற்றோர்களின் செல் வத்தை யெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் வசம் திருப்புவதில் மாப்பிள்ளையாசுரன் பலே கைகாரன். அதற்காகத் தான் கல்யாணம் செய்துகொண்ட பெண்ணை ஹிம்சிப்பான். அவளைப் பிறந்த வீட்டுக்குத் துரத்தி விடுகிறேன் என்று தகப்பனாருக்குப் பயமுறுத்தல் செய்தி அனுப்புவான். சில சமயங்களில் துரத்தியும் விடுவான்.

இன்னும், "என் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருவாய், உன் வீட்டுக்கு வந்தால் என்ன தருவாய்?" என்று கேட்கும் கொள்கையைச் சேர்ந்தவன் மாப்பிள்ளையாசுரன். ஆகையால் பெண்ணைக் கொடுத்தவர்களுக்கு இவன் அவர்கள் வீட்டுக்கு வந்தாலும் செலவு, அவர்கள் பெண்ணைப் பார்ப்பதற்காக இவன் வீட்டுக்குப் போனாலும் செலவு.

மாப்பிள்ளையாசுரன் வீட்டுக்கு வருகிறான் என்றாலே எல்லாரும் நடுங்குவார்கள். போகும் பொழுது தங்களிடமிருந்து பணமோ, பொருளோ பிடுங்கிக் கொண்டு போய் விடுவானோ என்ற கவலையினால் ஏற்பட்ட நடுக்கமல்ல இது. அதற்குப் பதில் அவன் இருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாகக் கழியுமே, என்ன பண்ணுவது என்ற கவலையினால் ஏற்படும் நடுக்கந்தான் இது.

பெண்ணைக் கொடுத்தவர்கள் என்ன செய்தாலும் மாப்பிள்ளையாசுரனுக்குக் குற்றமாகப்படுவதுதான் இதற்குக் காரணம். அவர்கள் என்னதான் விழுந்து விழுந்து உபசாரம் செய்தாலும் பெண்ணைக் கொடுத்தவர்கள் தன்னைக் கவனிக்கவில்லையென்று மாப்பிள்ளையாசுரன் குறை கூறிக்கொண்டே இருப்பான். சாதம் அதிகமாகப் போட்டால் "நான் என்ன பகாசுரனா இப்படிச் சாதத்தைக் கொட்டுகிறீர்களே" என்பான். குறைவாகப் போட்டால், "வயிறு அறிந்து சாதம் போடத் தெரியாதா? இப்படிப் பட்டினி போடுகிறீர்களே" என்பான். பெண்ணைக் கொடுத்தவர்களுக்கு மாப்பிள்ளையாசுரன் எப்படா வீட்டை விட்டுத் தொலைவான் என்று ஆகிவிடும்.

இன்னும் பெண்ணைக் கொடுத்தவர்களை ஒரு கணமேனும் மறந்து இருப்போம் என்று மாப்பிள்ளையாசுரனுக்குக் கிடையாது. அவனுக்கு எப்பொழுதும் பெண்ணைக் கொடுத்தவர்களை ஞாபகம் வைத்துக்கொண்டு கண்ட இடத்தில் எல்லாம் தூற்றுவதுதான் வேலை.

இத்யாதிக் காரணங்களினால் மாப்பிள்ளையாசுரன் என்றாலே ஜனங்கள் வெறுக்கத் தொடங்கினார்கள். இவனுக்கு மற்ற அசுரர்கள் எவ்வளவோ தேவலை என்றும் எண்ணத் தொடங்கினார்கள்.

மற்ற அசுரர்களை என்றால் எதிர்த்து நின்று அவர்களை ஒழித்தாலும் ஒழிக்கலாம். ஆனால் மாப்பிள்ளையாசுரனை என்ன பண்ணுவது என்று ஜனங்களுக்குப் புரியவில்லை. எல்லாரும் தங்கள் தங்கள் பெண்ணை மாப்பிள்ளையாசுரனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்திருந்ததால் அவன் உயிரை வாங்குவதை விடுத்து

வேறு ஏதாவது வழியில்தான் அவனைத் தண்டிக்கவேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தார்கள்.

கடைசியில் அவனையும் அவன்கூடத் தங்கள் பெண்களையும் நாட்டை விட்டே துரத்துவது என்று ஜனங்கள் முடிவு செய்து ஒரு நாள் எல்லோருமாக ஒன்று சேர்ந்து அவனையும் தங்கள் பெண்களாகிய அவன் மனைவிகளையும் துரத்தத் தொடங்கினார்கள்.

இத்தனை நாளாக மாப்பிள்ளையாசுரன் நம்பியிருந்த ஆயுதம் ஜனங்கள் தங்கள் பெண்கள்மீது கொண்டிருந்த பாசம்தான். அந்தப் பாசம் இருக்கும் வரையில்தான் என்ன அட்டகாசம் பண்ணினாலும் ஜனங்கள் பொறுத்துக் கொள்வார்கள் என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனால் இப்பொழுதோ அவர்கள் அந்தப் பாசத்தைத் துறந்து தன்னைத் துரத்த ஆரம்பித்துவிட்டதால், அடிபட்டு ஊரைவிட்டு ஓடுவதற்கு, அடிபடாமலே ஊரைவிட்டு ஓடுவது நல்லது என்ற முடிவுக்கு வந்தான்.

அவன் அத்தனை மனைவிகளையும் அழைத்துக்கொண்டு ஊரை விட்டுப் புறப்பட்ட காட்சியைக் கண்டதும், எல்லா ஜனங்களுக்கும் கண்ணில் ஜலம் வரத் தொடங்கி விட்டது. "ஐயோ! நாம் எல்லோரும் ஆளுக்கு ஒரு மனைவியை வைத்துக்கொண்டே இத்தனை பாடு படுகிறோமே, இவன் இத்தனை மனைவிகளை வைத்துக்கொண்டு என்ன பாடுபடுவான்" என்று நினைத்துப் பார்த்தபோது அவர்களுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. மாப்பிள்ளையாசுரன்மீது பச்சாத்தாபமும் உண்டாயிற்று. ஆனால் அவனை ஊரிலேயே இருக்கச் சொல்லவும் அவர்களுக்குத் தைரியம் ஏற்படவில்லை.

ஆகவே அவர்கள் எல்லோரும் மாப்பிள்ளையாசுரனைப் பார்த்து, "நீ நாட்டைவிட்டுப் போவதற்கு முன்னர் ஏதாவது வரம் வேண்டுமானால் கேள், தருகிறோம்" என்றார்கள்.

அதற்கு மாப்பிள்ளையாசுரன், "இன்றையிலிருந்து உங்கள் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளும் ஒவ்வொரு யுவனுக்கும் என் பெயர் மறையாமலிருக்க மாப்பிள்ளை என்ற பெயர் ஏற்படவேண்டும். நான் நாட்டை விட்டுச் செல்லும் இந்தத்

தேதியை நீங்கள் ஒவ்வொரு வருஷமும் கொண்டாடி அன்று மாப்பிள்ளையை வீட்டுக்கு அழைத்து மங்கள ஸ்நானம் செய்வித்து புது ஆடைகள் உடுத்தி நல்ல பலகாரங்கள் தின்னக் கொடுத்து விருந்துச் சாப்பாடும் போட வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டான். ஜனங்களும் சரியென்று ஒப்புக்கொண்டார்கள்.

மாப்பிள்ளையாசுரன் ஊரை விட்டுச் சென்ற தினத்தைத் தான் நாம் இன்றும் தீபாவளி என்று கொண்டாடுகிறோம். நம் வீட்டு மாப்பிள்ளையை வீட்டுக்கழைத்து புது ஆடைகள் வாங்கிக் கொடுத்து விருந்துச் சாப்பாடு போடுகிறோம்.



அடிப்பதற்குச் சுதந்திரம்!

முன்னொரு சமயம் சீனுவில் ஒரு எழுபத்தைந்து வயதுக் கிழவர் இருந்தார். அவருக்கு நூறு வயதுத் தகப்பனுர் ஒருவர் இருந்தார். ஒரு சமயம் நூறு வயதுத் தகப்பனுர் ஏதோ கோபித்துக்கொண்டு, எழுபத்தைந்து வயதுப் பையனை ஒரு கழியால் வாங்கு வாங்கு என்று வாங்கினுர். சீனுவில், தகப்பனுர்களுக்கு கழியைத் தேடவேண்டிய சிரமம்கூடக் கிடையாது. தகப்பனுர்கள் பிள்ளைகளை அடிப்பதற்கென்றே, ஒரு கழி, தனியாக ஒரு இடத்தில் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கும்.

அடி வாங்கிய எழுபத்தைந்து வயது மகன் உடனே அழ ஆரம்பித்தார். இதைப் பார்த்த தகப்பனுருக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. இந்த எழுபத்தைந்து வருஷ காலத்தில் அவர் தம் மகனை எத்தனையோ நூற்றுக் கணக்கான தடவைகள் அடித்திருக்கிருர். ஒரு சமயமும் அவர் மகன் அழுதது கிடையாது. அப்படியிருக்க இந்த சமயம் மகன் அழுதது அவருக்குத் திகைப்பை விளைவித்தது.

மகனைப் பார்த்து, "இத்தனை நாளாக அழாதவன் இன்று திடீரென்று அழுகிருயே, என்ன காரணம்? நான் என்ன ஒரு வேளை, வழக்கத்தைவிடப் பலமாக அடித்து விட்டேனு?" என்று கேட்டார்.

அதற்கு மகன், "இத்தனை நாளும் தாங்கள் அடித்தால் அடி பலமாக விழும். ஆனுல் இன்ருே, அடி பலமாகவே விழவில்லை. தங்கள் வலு குறைந்து விட்டதே என்று வருத்தப்பட்டுத்தான் அழுதேன்" என்று பதில் சொன்னுன்.

இம்மாதிரி வருத்தப்பட்ட பிள்ளைகள் ஒரு காலத்தில் சீனாவில் இருந்தார்கள், மற்ற நாடுகளிலும் இருந்தார்கள்.

ஆனால் தற்காலத்தில் யாருக்குக்கும் யாரையும் அடிக்கச் சுதந்திரம் கிடையாது. தகப்பனாருக்குப் பிள்ளையை அடிக்கச் சுதந்திரம் கிடையாது. வாத்தியாருக்கு சிஷ்யனை அடிக்கச் சுதந்திரம் கிடையாது. ஏன், நம் சொந்தப் பெண்டாட்டியை அடிப்பதற்குக் கூட நமக்குச் சுதந்திரம் கிடையாது.

வேறு எந்த சுதந்திரம் இருந்தாலும், இல்லாவிட்டாலும், பெண்டாட்டியை அடிக்கும் சுதந்திரம் நமக்குக் கட்டாயம் வேண்டும் என்பது எல்லாப் புருஷர்களுடைய அபிப்பிராயமாகத் தான் இருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

அன்னிய ஆட்சியின்கீழ் நாம் வாழ்ந்து வந்த அடிமை வாழ்வைத் தகர்த்தெறிந்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்க்கவேண்டும் என்பதைக் கூட்டத்தில் உள்ள எல்லாருக்கும் நன்கு பதியும்படி சொல்வதற்காக, பழைய காலத்துப் பிரசங்கி ஒருவர் பின்வருமாறு கூறுவார்.

"ஐயா! இந்த அரசாங்கத்தில் நமக்கு ஒன்றுக்கும் சுதந்திரம் கிடையாது. கூட்டங்கள் கூடுவதற்குச் சுதந்திரம் கிடையாது. பேசுவதற்குச் சுதந்திரம் கிடையாது. தெருவில் நடந்து போவதற்குச் சுதந்திரம் கிடையாது. ஏன், நம் சொந்தப் பெண்டாட்டியை அடிப்பதற்குக்கூட சுதந்திரம் கிடையாது" என்று பிரசங்கியார் கூறுவார்.

சொந்தப் பெண்டாட்டியை அடிப்பதற்குக்கூடச் சுதந்திரம் கிடையாது என்று பிரசங்கியார் சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும், கூட்டத்தில் உள்ள புருஷர்கள் கலீர் என்று சிரிப்பார்கள். பிறகு அடுத்த கணமே, இது எவ்வளவு உண்மையான வார்த்தை என்று நினைத்துப் பார்த்ததும் அவர்கள் கண்கள் சற்றுக் கலங்கும்.

"என்ன வாழ்க்கை இது! சொந்தப் பெண்டாட்டியைக்கூடச் சுதந்திரமாக அடிக்கமுடியாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கை தானா?" என்று நினைத்துப் பார்த்ததும், அவர்களுக்கு அன்னிய ஆட்சியின்

மீது வேறு காரணங்களுக்காக இருந்த ஆத்திரம் இன்னும் அதிக மாகும்.

அந்தக் காலத்தில் புருஷர்கள் அன்னிய ஆட்சியை அகற்று வதற்காக வெகு துடியாய் இருந்தார்கள் என்பதும், எவ்வளவோ தியாகங்கள் செய்தார்கள் என்பதும் எல்லாரும் அறிந்த விஷயம். அவர்கள் அப்படித் தியாகம் செய்ய முக்கிய காரணமாக இருந்தது, அவர்களுக்கு அன்னிய ஆட்சியின்மீது இருந்த வெறுப்பைவிட பெண்டாட்டியை அடிப்பதற்குச் சுதந்திரம் கிடைக்கும் என்ற ஆவல்தான் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த அந்தச் சுதந்திரம் என்னமோ கிடைக்க வில்லை.

முன்காலத்தில் புருஷன் பெண்டாட்டியை அடித்தால் யாரும் ஏன் என்று கேட்கமாட்டார்கள். தெரியாத்தனமாக நாம் இந்தப் புருஷன்–பெண்டாட்டி சண்டையில் குறுக்கிட்டு விட்டால், புருஷனை விடப் பெண்டாட்டிக்குத்தான் கனகோபம் வந்துவிடும். "என்ன ஐயா, என் புருஷன் என்னை அடித்தால் நீ யார் ஐயா கேட்ப தற்கு" என்று பெண்டாட்டி சண்டைக்கு வந்து விடுவாள்.

எனக்குத் தெரிந்து, முன் காலத்தில், ஒரே ஒரு சமயம், ஒரே ஒரு நபரைத் தவிர வேறு யாரும் புருஷன் மனைவியை அடித்த விஷயத்தில் குறுக்கிட்டதில்லை. அத்தனை தைரியமாகக் குறுக் கிட்டது வேறு யாரும் இல்லை. சாக்ஷாத் அந்தப் புருஷனின் தாயார்தான்.

அந்த அம்மாள் இந்த விஷயத்தில் அத்தனை தைரியமாகக் குறுக்கிட்டதைக் கண்டு, மகனுக்கே ஆச்சரியமாகப் போய்விட்டது. "ஏன் அம்மா! என் பெண்டாட்டியை நான் அடித்தால் நீ ஏன் அதில் குறுக்கிடுகிறாய்!" என்று கோபமாகக் கேட்டான்.

அதற்குத் தாயார் பதில் சொன்னாள். "ஏண்டா, மடியாய் இருக்கிற பெண்ணை நீ இப்படிக் கை தொட்டு அடித்து, விழுப்புப் பண்ணுகிறாயே? அவள் எத்தனை தடவைதான் ஸ்நானம் பண்ணு வாள்! இந்தா, இனி கையால் அடித்து அவளை விழுப்புப் பண்

7

ணுதே ! இந்தக் கழியால் அடி '' என்று அந்தத் தாயார் ஒரு கழியை எடுத்துக் கொடுத்தாள்.

ஆனால் இப்பொழுது என்றால் நமக்கு அடிப்பதற்குச் சுதந்திரம் கிடையாது. சுதந்திரம் இல்லாமல் நாம் அடித்தால் பக்கத்தில் உள்ள எல்லாரும் கும்பல் கூடி நம்மை அடிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

இப்படியும் ஒரு சுதந்திரம் அவசியம்தானா என்று பழைய காலத்துப் புருஷர்கள் கேட்கமாட்டார்கள். ஆனால் தற்காலத்துப் புருஷர்கள் கட்டாயம் கேட்பார்களாதலால் அவர்களுக்காக ஒரே ஒரு காரணம் கூற விரும்புகிறேன்.

முன்காலத்தைவிட இந்தக் காலத்தில் செலவு அதிகமாகிக் கொண்டு வருகிறது என்பதை எல்லாரும் அறிவார்கள். இப்படிச் செலவு அதிகமாகிக்கொண்டு வருவதற்கே காரணம் இந்த ஸ்திரீகள்தான்.

இந்த ஜன்மத்தில் கடைக்காரர்களாகப் பிறந்திருக்கிறவர்களிடம் முன் ஜன்மத்தில் கடன் வாங்கியவர்கள்தான், இந்த ஜன்மத்தில் ஸ்திரீகளாகப் பிறந்திருக்கிறார்கள் என்பது என் அபிப்பிராயம். அதனால்தான் அவர்கள் புருஷன் சம்பாதிக்கும் பணம் அத்தனையும் போதாது என்று மேற்கொண்டு கடன் வாங்கியும் கடைக்காரர்களுக்குக் கொடுத்துக்கொண்டேயிருக்கிறார்கள்.

புருஷன் என்னதான் மனைவி மீது அன்பாக இருந்தாலும், இப்படிக் கொடுத்துக்கொண்டேயிருக்கச் சம்மதிக்க மறுக்கிறான். ஆனால் இதைத் தடுப்பதற்குத்தான் அவனுக்கு வழி தெரியவில்லை.

ஏதாவது ஒரு சாமான் வாங்கித்தரமாட்டேன் என்று சொன்னாலோ உடனே மனைவி முகத்தைத் தூக்கிக்கொண்டு விடுகிறாள். புருஷனோடு பேச மறுக்கிறாள். பேசாவிட்டால் மிகவும் நல்லதாகப்போயிற்று, இனி வாயைத் திறந்து சாமான் கேட்க மாட்டாள் என்று புருஷன் சந்தோஷப்படலாம் அல்லவா? அதுதான் இல்லை. அதற்குப் பதில், "ஐயோ! பேசமாட்டேன் என்கிறாளே!" என்று வருத்தப்படுகிறான். அவளைப் பேச வைப்பதற்கு

என்ன பண்ணலாம் என்று யோசனை பண்ணுகிறான். வேறு ஒரு யோசனையும் தோன்றாமற் போகவே அவள் கேட்ட சாமானை வாங்கிக் கொடுத்துச் சமாதான உடன்படிக்கை பண்ணிக் கொள்கிறான்.

இந்த சமயத்தில் மாத்திரம் புருஷன் தளர்ந்து இடங்கொடுக்காமல் நான் வேண்டும் என்று குறிப்பிடும் சுதந்திரத்தை உபயோகப்படுத்தினானே, மனைவி தன்னைப்போல் வழிக்கு வருவாள், செலவும் மட்டுப்படும்.

ஆனால் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்று அந்தப் பாரதியார் சொல்லிவிட்டுப் போய் விட்டாராதலால் இந்த சுதந்திரத்தை ஸ்திரீகளும் நம் மீது கையாள ஆரம்பித்து விட்டால் என்ன பண்ணுவது என்றுதான் பயமாக இருக்கிறது.



தமிழர்களுக்கு ஆபத்து!

தமிழர்களுக்கு, அதிலும் முக்கியமாகப் பிற்காலத்தில் வரப்போகும் தமிழர்களுக்குப் பெருத்த ஆபத்து ஏற்படப் போகிறது என்றே தோன்றுகிறது. கொஞ்ச காலமாகத் தமிழ் நாட்டில் நடக்கும் விபரீத நிகழ்ச்சிகள்தான் பிற்காலத்தில் ஏற்படப் போகும் இந்த ஆபத்துக்கு ஆஸ்பதமாகப் போகின்றன.

சாதாரணமாகத் தமிழர்களுக்கு ஒரு நல்ல பெயர் எப்பொழுதும் உண்டு. இந்தியாவிலேயே, குறுகிய திருஷ்டி எதுவும் இன்றி, தூர திருஷ்டிப் பார்வை வாய்ந்தவர்கள் தமிழர்கள்தான். தமிழர்களுக்குத் தங்களைச் சுற்றியுள்ள மனிதர்களின் மேன்மையோ, அல்லது தங்கள் தாய்ப்பாஷையில் உள்ள நூல்களின் பெருமையோ கண்ணில்படாது. வடக்கத்தித் தலைவர்களின் பெருமையும், வடக்கத்தி நூல்களின் அருமையும்தான் இவர்களுக்குத் தெரியும்.

தூரதிருஷ்டிப் பார்வையில் தங்களை மிஞ்சுவதற்கு யாரும் கிடையாது என்று பெயர் வாங்கி யிருந்த தமிழர்கள், என்ன காரணமோ தெரியவில்லை, கொஞ்ச காலமாகத் தங்கள் தூர திருஷ்டிப் பார்வையை இழந்து குறுகிய நோக்கம் கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

மேல்நாட்டு இலக்கியத்தையோ அல்லது வடக்கத்தி இலக்கியத்தையோ தவிர வேறு எந்த இலக்கியத்தையும் புகழ்ந்து அறியாத தமிழர்கள் தமிழ் இலக்கியத்தையும் தமிழ்க் கவிகளையும் பாராட்டத் தொடங்கி விட்டார்கள்.

அன்று பாரதியார் ஞாபகார்த்த நிதிக்காக ஐயாயிரம் கேட்ட இடத்தில் ஐம்பதினுயிரம் கொடுத்தார்கள். ஞாபகார்த்தக் கட்டிட வேலையும் வெகு துரிதமாக நடந்து வருகிறது. இன்றோ நாமக்கல் கவிஞருக்காகப் பன்னிரண்டாயிரம் ரூபாய் சொச்சம் சேர்த்து அவர் கையிலே கொடுத்து விட்டார்கள்.

இத்தகைய விபரீத நிகழ்ச்சிகளால் எத்தகைய பேராபத்து ஏற்படப் போகிறது என்பதை இவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை என்றே தோன்றுகிறது. எந்தப் பொருளை அதிகமாக ஆதரிக்கிறோமோ அந்தப் பொருள் அதிகமாக உற்பத்தியாகு மென்பதே இயற்கை நியதி. கவிகளை ஆதரித்தால் கவிகள் எதேஷ்டமாகத் தோன்றுவார்கள்.

இதற்குப் போன சனிக்கிழமை சென்னை கோகலே ஹாலில் நடந்த நாமக்கல் கவிஞர் நிதியளிப்பு விழாவிலேயே உதாரணம் கண்டோம். கவிஞரைப் பாராட்டியே எத்தனையோ பேர் கவி எழுதி ராஜாஜிக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். ஒருவர் தமக்கிருந்த உற்சாக மேலீட்டில் ஆங்கிலத்திலேயே ஒரு கவி புனைந்து அனுப்பியிருந்தார்.

இன்னும் அனேகர் கவிஞருக்கு நடந்த உபசாரத்தையும் அவருக்குக் கிடைத்த பணத்தையும் அவர் கழுத்தில் விழுந்த மாலைகளையும் பார்த்துவிட்டு ஒவ்வொருவரும் சீக்கிரமே ஒரு கவியாக மாறிவிடுவது என்று கங்கணங் கட்டிக்கொண்டு சென்றிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை. ஏன், அந்தக் கூட்டத்தில் பேசிய கிராமணியாரே சொல்லவில்லையா, சீக்கிரமே தாமும் ஒரு கவிஞராக மாறப் போவதாக?

சற்றே சிந்தித்துப் பாருங்கள். இந்த மாதிரி நாம் கவிஞர்களை ஆதரிக்கப் போகப் பிற்காலத்தில் ஏகத்தாராகக் கவிஞர்கள் தோன்றினால் பிற்காலத் தமிழர்களுக்கு அவர்கள் அத்தனை பேர் காவியங்களையும் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமா, ஏற்படாதா? அப்பொழுது அவர்கள் இத்தனைக்கும் காரணமான நம்மைச் சபிக்கப் போகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அன்றைய விழாவுக்குத் தலைமை வகித்த ராஜாஜியாவது இந்த ஆபத்தை உணர்ந்தாரா என்றால் அவரும் இல்லை. அன்றைக்கு அவரிடம் காணப்பட்ட குதூகலத்தையும் குஷியையும் பார்த்த போது அவருக்குத்தான் பணமுடிப்பு அளிக்கப் போகிறார்களோ என்று பட்டது. நாமக்கல் கவிஞரைப் பாராட்டுவதற்காக அத்தனைத் திரளாகக் கூடியிருந்த கூட்டம் தம்மைப் பாராட்டு வதற்கே கூடி யிருந்ததுபோல் ராஜாஜிக்கு அத்தனை சந்தோஷம். நாமக்கல் கவிஞர் கழுத்தில் மாலை விழுந்தபோதெல்லாம் இவர் தம் கழுத்தில் மாலை விழுந்து விட்டதுபோலவே ஆனந்தப்பட்டார்.

தாம் பிறந்த சேலம் ஜில்லாவிலிருந்தே நாமக்கல் கவிஞரும் வந்தார் என்று சொல்லிவிட்டுச் சேலம் ஜில்லாப் பெருமைகளை அடுக்கிக் கொண்டே போனபோது சபையில் இருந்த குதூகலம் சொல்லி முடியாது.

சேலம் எத்தனையோ காரியங்களுக்குப் பெயர் போனதாம். நல்ல மாம்பழம் வேண்டுமானால் சேலத்திற்குத்தான் போக வேண்டுமாம். நல்ல வேஷ்டி புடவைகள் வேண்டுமானால் அதுவும் சேலத்தில்தான் கிடைக்குமாம். நல்ல வக்கீல்கள் வேண்டு மானாலும் சேலத்திற்குத்தான் செல்ல வேண்டுமாம்.

பக்கத்து ஜில்லாக்காரர்கள் அநேகர் சேலத்திலிருந்து மாம் பழமும் துணிமணியும் வாங்கிக்கொண்டு போகும்பொழுது கூடவே ஒரு வக்கீலையும் அழைத்துக் கொண்டு போவார்களாம். இன்னும் நல்ல திருடர்களுக்குக்கூட நாமக்கல்தான் பெயர் போனது என்று ராஜாஜி சொன்னபோது சபையில் ஒரே ஆரவாரம்!

அன்று நடந்த விழாவைப்போல் அத்தனை அழகாகவும் விமரிசையாகவும் வேறு எந்த விழாவும் நடந்ததில்லை என்று அங்கு வந்திருந்த எல்லாரும், அதாவது கீழே ஒருவரை ஒருவர் நெக்கி யடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தவர்கள், மேல் காலரியில் ஒருவரை யொருவர் முண்டியடித்துக் கொண்டு அமர்ந் திருந்தவர்கள், இன்னும் மேல்மாடி ஜன்னல் வழியாகக் கொட்டுகிற மழையைக்கூடக் கவனிக்காமல் தலையோடு தலை மோதிக் கொண்டு நின்று கொண்டிருந்தவர்கள், அத்தனை பேரும் ஒரேமுகமாகச் சொன்னார்கள்.

கவிஞரை ஆதரிப்பதில் கட்சி வித்தியாசம் கிடையாது என்பதை நிரூபிப்பதுபோல் அன்று ராஜா சர். அண்ணுமலை செட்டியார், டாக்டர் ராஜன், டாக்டர் வரதராஜுலு நாயுடு, டாக்டர் திருமூர்த்தி, ஸ்ரீ முத்துரங்க முதலியார், ஸ்ரீ காமராஜ நாடார் முதலிய பல பிரமுகர்கள் மேடையில் காணப்பட்டனர்.

ஐந்து மணிக்கு ஆரம்பிக்கவேண்டிய விழாவுக்கு ஜனங்கள் நான்கு மணிக்கே வந்து கூடிவிட்டார்கள். ஆனுல் மணி ஐந்தரை வரையில் கவிஞர் வராமற் போகவே, முடிவுரையில் கல்கி அவர்கள் வெகு ஹாஸ்யமாகக் குறிப்பிட்டதுபோல் எல்லாருடைய மனதும் முதலில் சௌக்க காலத்திலும், பிறகு மத்திம காலத்திலும், பிறகு துரித காலத்திலும் 'திக்திக்'கென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

இதன் காரணத்தைப் பின்னுல் கல்கி அவர்களே வெகு ஹாஸ்யமாகக் குறிப்பிட்டார். "கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லை" என்ற பழமொழி கவிஞர் விஷயத்தில் எத்தனையோ சமயம் நிரூபணமாகியிருக்கிறது. அவருக்கு உதவி செய்வதற்காக எத்தனையோ பேர்முன் வந்தும் கடைசி நிமிஷத்தில் அவ்வுதவி அவருக்குக் கிட்டாமல் போயிருக்கிறது.

இதை யெல்லாம் நினைத்துத்தான் அங்குள்ள எல்லாரும் கவலைப்பட்டார்கள். கவிஞர் நிதிக்கு மூலகாரணமான தமிழ்ப் பண்ணை ஸ்ரீ அண்ணுமலை கூட்டத்தின் ஆரம்பத்தில், "கேட்குது சங்கநாதம் கேட்குது" என்னும் நாமக்கல் கவிஞர் பாட்டைக் கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு பாடியபோது எனக்கு "சங்கநாதம் கேட்பது இருக்கட்டும், கவிஞர் வரும் மோட்டார் கார் சப்தம் கேட்கவில்லையே" என்று இருந்தது. கடைசியில் ஐந்தரை மணிக்குக் கவிஞர் வந்து சேர்ந்தார்.

கவிஞரின் கூட வருவது யார்?...........ஓ! அவருடைய மனைவியாரா? அதுதான் அத்தனை நாழியாகி விட்டது. ஸ்திரீகளை அழைத்துக்கொண்டு ஒரு இடம் போய்ச் சேர்வதென்ருல் நாழி கழித்துத்தான் போய்ச் சேர முடியு மென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம் தானே?

கவிஞர் வந்ததும் மேயர் வந்திருந்த ஜனங்களை வரவேற்று ராஜாஜியைத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டார். பலத்த கரகோஷத்தினிடையே ராஜாஜியும் தலைமை வகித்தார்.

"கவிஞரைப் பாராட்டுவதற்காகக் கூட்டப்பட்டுள்ள கூட்டத்துக்குத் தலைமை வகிக்க என்னை விட அதிக அருகதையுள்ளவர்கள் இக் கூட்டத்தில் அநேகர் இருக்கிறார்கள். இருந்தாலும் கவிஞர் எங்களூர்க்காரர் என்ற அபிமானத்தினால் கூட்டத்துக்குத் தலைமை வகிக்க ஒப்புக் கொண்டேன். இருந்தாலும் இந்தப் பணத்தைத் தொட்டு எடுத்துக் கொடுப்பதற்கு எனக்கு உரிமையில்லை, அந்த உரிமை தமிழுக் கவிதைக்காகவே பிறந்து, வளர்ந்து, தொண்டு செய்து வரும் ஸ்ரீ டி. கே. சி. ஒருவருக்குத்தான் உண்டு. இந்தப் பணத்தை வேறு யாரும் தொடக்கூடாது" என்று ராஜாஜி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். பக்கத்தில் இருந்த ஸ்ரீ டி. கே. சி. யும் இதை ஆமோதித்தவர் போல் தம் மீசையை முறுக்கி விட்டுக் கொண்டார்.

கவிஞர் நிதிக்காகச் சேர்ந்திருந்த தொகையான ரூ. 12,052-14-0-யை ஒரு அழகிய வெள்ளித் தாம்பாளத்தில், நடுவில் புது நூறு ரூபாய் நோட்டுகளாகவும் அதைச் சுற்றிப் புது வெள்ளி ரூபாய் நாணயங்களாகவும், நிதிக் கமிட்டியார் அழகாக அடுக்கி வைத்திருந்தார்கள்.

அத்தனை அழகிய தட்டையும் ரூபாயையும் பார்க்கும்போது, யாருக்கும் அதை இன்னொருவருக்குக் கொடுக்க மனம் வராது.

கவி வெள்ளத்திலேயே நீந்தி, விளையாடித் திளைத்து வரும் அறிஞர் டி. கே. சி. அவர்கள்தான் பணத் தட்டை எடுத்துக் கவிஞருக்கு அளிக்கப் போகிறார் என்று ராஜாஜி அறிவித்ததும், எனக்கு ஒரு கணம் சந்தேகமாகவே போய்விட்டது.

அறிஞர் டி. கே. சி. நல்ல ரஸிகர். நல்ல பொருள் எதைக் கண்டாலும் ரஸித்து அனுபவிக்கக் கூடியவர். ஆகவே அத்தனை அழகிய தட்டையும், ரூபாயையும் பார்த்துவிட்டு, அதைக் கவிஞருக்குக் கொடுக்காமல் தமக்கென்று வைத்துக்கொண்டு விட்டால் என்ன பண்ணுவது என்று நினைத்தேன்.

நான் நினைத்தது போலவே அவர் அதைக் கவிஞருக்குக் கொடுக்கவில்லை! பக்கத்தில் வீற்றிருந்த தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ நாடார் அவர்களிடம் கொடுத்து விட்டார்!

நாமக்கல் கவிஞர் காங்கிரசிலேயே அதிகமாக ஈடுபட்டு, தேசத்துக்காகச் சிறையும் சென்றிருப்பதால், இப்பணத் தட்டை எடுத்துக் கொடுக்க, தம்மைவிட அதிக அருகதை தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவரான ஸ்ரீ காமராஜ நாடார் அவர்களுக்குத்தான் என்பது ஸ்ரீ டி. கே. சி. யின் கருத்து!

எங்கே தம்மைவிட அதிக அருகதை யுள்ளவர் யார் என்று காமராஜ நாடாரும் தேடிக்கொண்டு நிற்கப் போகிறாரோ என்று பயந்தேன். நல்ல வேளையாக அத்தகைய விபரீதம் எதுவும் நிகழவில்லை. ஸ்ரீ காமராஜ நாடார் தம் அருகதையை ஒப்புக் கொண்டவர்போல் பணத்தட்டை எடுத்து கவிஞர் கையில் கொடுத்தார். அந்தச் சமயம் மேடையின்மீது அமர்ந்திருந்த எல்லாரும் கவிஞர்மீது பூமாரி பொழிந்தனர்.

ஆனால் இத்தனை சிரமப்பட்டுச் சேர்த்துக் கொடுத்தோமே அதைக் கவிஞர் வைத்துக்கொள்ளக் கூடாதா? உடனே கவிஞர் அதை அப்படியே தூக்கித் தம் மனைவி கையில் கொடுத்து விட்டார். அப்பொழுது ராஜாஜி எழுந்திருந்து, "பணம் சேர வேண்டிய இடத்தைச் சேர்ந்து விட்டது" என்று சொன்னபோது சபையில் ஏற்பட்ட ஆரவாரம், சைனா பஜாரில் போய்க் கொண்டிருந்தவர் காதுக்கும் எட்டியிருக்கும்.

ராஜாஜி சொன்ன இந்த வார்த்தையைக் கேட்டு வெட்கியோ, என்னமோ, அந்த அம்மாள் உடனேயே அத்தட்டைக் கணவரிடம் திரும்பிக் கொடுத்து விட்டார்!

பணத்தட்டைக் கொடுப்பதற்கு முன்னால் டி. கே. சி. செய்த ஒரு சிறு பிரசங்கம் எல்லார் மனதையும் உருக்குவதாய் இருந்தது.

நாம் கவிகளையும், கவியையும் போற்றுவதைப்போல் வேறெந்த நாட்டிலும், ஆங்கிலநாட்டில் கூடக் கிடையாது என்றார்.

இதை ஆர்னல்ட் பென்னட் என்னும் ஆங்கில ஆசிரியரே "இலக்கியச் சுவை" என்னும் தம் புத்தகத்தில் ஒப்புக் கொண்டிருக்கிறாராம். தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப் புகை முதலியவைகளால் கூடக் கலைக்க முடியாத ஒரு கூட்டத்தை ஒரு கவியினால் கலைத்து விடலாமாம். யாராவது ஒருவர் "இதோ நான் ஒரு கவி பாடப் போகிறேன்" என்று சொன்னால் போதுமாம், உடனே எல்லாரும் கூட்டத்தை விட்டுக் கலைந்து ஓடிப்போய் விடுவார்களாம்.

"தம் சொந்த சரித்திரங்களை எழுதும் அநேகர், "ஏண்டா இவன் பிறந்து தொலைத்தான்? இவன் பிறக்கக் கொண்டுதானே நாம் இவன் சரித்திரத்தைப் படித்துத் தொலைக்க வேண்டி யிருக்கிறது?" என்று பிறர் அலுப்படையும் விதத்தில் எழுதுவார்கள். சுய சரிதம் எழுதுவது அத்தனை கடுமையான காரியம். அதைக் கவிஞர் ஒரு புதிய முறையில் செய்தது மட்டுமன்றி, எல்லாரும் ரஸிக்கும் முறையிலும் செய்துள்ளார்."

கவிஞர் எழுதிய 'என் கதை'யை ரஸிகமணி மேற்கண்ட விதம் புகழ்ந்தபோது கவிஞருக்கேகூட அப்புஸ்தகத்தைத் தாம் ஒரு தடவை படித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் தோன்றி யிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கடைசியில் டி. கே. சி. கவிஞர் பாடிய பாட்டு ஒன்றை உதாரணத்துக்கு எடுத்துப் பாவத்தோடு பாடி விளக்க ஆரம்பித்தார்.

தாம் விரும்பும் நாடு எப்படி யிருக்கும் என்று கவிஞர் கற்பனை உலகில் புகுந்து ஒரு பாட்டுப் பாடியிருக்கிறார். அதில் கீழ்க்கண்ட நான்கு வரிகள் காணப்படுகின்றன.

வட்டிக்குப்போடப் பணமும் இல்லை—அங்கே
வட்டிக்கு வட்டிசெய் சட்டமில்லை
பெட்டிக்குச் சாவியும் இல்லாமல்—வெறும்
பேச்சில் புரண்டிடும் நாணயங்கள்.

இந்தப் பாட்டைத் தமக்கு வழக்கமாக உள்ள கைச் சொடக்கலுடன் ரஸிகமணி பாடிக் காண்பித்தபோது சபையில் ஏற்பட்ட உற்சாகம் சொல்லி முடியாது.

நாமக்கல் கவிஞர் சிறந்த தேசீய கவிஞரென்றும், அவரைப் போற்றுவது மிகவும் தகுதியென்றும் ஸ்ரீ காமராஜ நாடார் கூறினர்.

கவிஞர்களை ராஜாக்களும், பணக்காரர்களும் ஆதரித்த காலம் போய், பொதுமக்கள் ஆதரிக்கும் காலம் வந்துவிட்டது, இது மிகவும் நல்ல அறிகுறி என்று சந்தோஷப் பட்டார் தோழர் ராமமூர்த்தி.

கவிஞர்களை ஆதரிப்பதில் ஆண்களுக்குப் பெண்கள் ஒருவிதத்திலும் தாழ்ந்தவர்கள் அல்ல என்று ஸ்ரீமதி ராஜம் பாரதி கூறினர்.

நாமக்கல் கவிஞரின் புகழ்பெற்ற "ஆடு ராட்டே" பாட்டை ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி பாடும் அழகை அவர் வர்ணிக்க ஆரம்பித்தபோது எல்லாருக்கும் அந்தப் பாட்டு காதில் ரீங்காரம் செய்ய ஆரம்பித்து விட்டது.

"வம்பளந்து வீண் பொழுது போக்கமாட்டார்—பெண்கள்" என்னும் இப்பாட்டின் அடியை ஸ்ரீமதி எம். எஸ். பாடும் போதெல்லாம், ஒரு சங்கீத சபையில் பார்த்தாற் போல் எல்லாச் சங்கீத சபைகளிலும் கலீர் என்ற சிரிப்பும், கரகோஷமும் ஏற்படுவது உண்டு. ஸ்ரீமதி ராஜம் பாரதி "ஆடு ராட்டே" பாட்டை ஞாபகப் படுத்தியபோது இந்த அடி எனக்கு ஞாபகம் வந்து என்னல் சிரிப்பை அடக்க முடியவில்லை.

இதற்குப் பிறகு பேசிய ஸ்ரீ திரிகூடசுந்தரம் பிள்ளையும், ஸ்ரீ வையாபுரிப் பிள்ளையும் சோடாப் புட்டியின் துணை கொண்டு பேசியது ஏற்கெனவே உள்ள சிரிப்புப் போதாது என்று எல்லாரையும் வயிறு வலிக்கச் சிரிக்க வைத்து விட்டது.

கவிஞர் பேச்சையும், ராஜாஜியின் முடிவுரையையும் கேட்க வேண்டு மென்று இருந்த தங்கள் ஆவலில் ஜனங்கள் ஸ்ரீ திரிகூடசுந்தரம் பிள்ளை சற்றுப் பலமான அஸ்திவாரமாகவே போட்டுக் கொண்டு பேச ஆரம்பிக்கையில் பயந்து விட்டார்கள். இன்னும் நடுவில், நடுவில் சோடாக் குடித்துத் தம் தொண்டையைச் சரிப்

படுத்திக் கொள்ளவே ஜனங்கள் இன்னும் அதிகம் பயந்துபோய், அந்தப் பயத்தைக் கரகோஷ ரூபமாகக் காட்டத் தொடங்கி விட்டனர்.

ஸ்ரீ திரிகூடசுந்தரம் பிள்ளை, நடுவில் 'ஆகையால்' என்று சொல்லி நிறுத்தி விட்டு சோடாக் குடித்தபோது ஏற்பட்ட ஆரவாரத்தைப் பார்க்க வேண்டுமே!

இதற்குப் பிறகு ஸ்ரீ கிராமணியாரும், ஸ்ரீ வ. ராவும் தங்கள் பாராட்டுதலை வெகு சுருக்கமாகத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இத்தனைபேர் பேசியதைப் பார்த்துவிட்டு, "எனக்கும் கொஞ்சம் பேச ஆசையாக இருக்கிறது. நானும் கொஞ்சம் பேசுகிறேன்" என்று சொல்லி விட்டு ராஜாஜி பேசினார். கவிஞர்களை தேசியமாகத்தான் பாடவேண்டும், அல்லது இலக்கியமாகத்தான் பாடவேண்டும் என்றெல்லாம் கட்டளை இட முடியாது என்றார். கவிஞர் நூல்களை யெல்லாம் வெகு அழகாகப் பதிப்பித்து வருபவரும், அவருடைய நலனை தம் சொந்த நலனாகக் கருதுபவருமான தமிழ்ப் பண்ணை ஸ்ரீ அண்ணாமலையை, ராஜாஜி, "சின்ன அண்ணாமலை" என்று ஹாஸ்யமாகக் குறிப்பிட்டு, பெரிதும் பாராட்டினார்.

பெரிய இயக்கங்களின் காரணமாகத்தான் கவிகள் தோன்றுகிறார்கள் என்றும், கவிகள் காரணமாக இயக்கங்கள் தோன்றுவதில்லை யென்றும் அவர் கூறியது மிகவும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு உதாரணமாக, திலகர் விதைத்த சுயராஜ்ய விதையில் பாரதியார் தோன்றினாரென்றும், காந்தி விதைத்த சுயராஜ்ய விதையில் நாமக்கல் கவிஞர் தோன்றினாரென்றும் கூறினார்.

"இந்த நாமக்கல் செடி நல்ல கற்பாறையில் முளைத்தது. கற்பாறையில் முளைக்கும் செடிகள் வெகு ஆழமாக வேர் விட்டு, பாறையையே உடைத்து விடுவது உண்டு" என்று ராஜாஜி வெகு அழகாகச் சொன்னார்.

தமக்கு அளித்த பாராட்டுதலுக்கு அன்று கவிஞர் சற்று நீளமாகவே பதில் அளித்தார். அதிலிருந்து அவர் அதை எவ்வளவு தூரம் போற்றினர் என்பது நன்கு வெளியாயிற்று.

அவர் பிரசங்கத்தின் முதல் வாக்கியமே பச்சை மரத்தாணி போல எல்லார் மனதிலும் பதிந்தது.

"தேசத்துக்கே வாழ் நாளை அர்ப்பணம் பண்ணினவர்" என்று காந்திஜியினுல் புகழப்பட்ட ராஜாஜியின் தலைமையில், தமிழுக்கே தம் வாழ் நாளை அர்ப்பணம் பண்ணி யிருக்கும் அறிஞர் டி. கே. சி பணத் தட்டை எடுத்துக் கொடுக்க, காங்கிரசுக்கே தம் வாழ் நாளை அர்ப்பணம் பண்ணி யிருக்கும் ஸ்ரீ காமராஜ நாடார் அதை வாங்கித் தமக்குக் கொடுக்கத் தாம் பெருத்த பாக்கியம் பண்ணி யிருக்க வேண்டும் என்று கூறினர்.

தாம் இன்று இத்தனை கௌரவத்துக்கும் ஆளானதற்கு முக்கிய காரணம் தம்முடைய பள்ளித் தோழரான ஸ்ரீ நாகராஜ அய்யங்காரும், கூட்டத்துக்குத் தலைமை வகித்த ராஜாஜியும்தான் என்று கவிஞர் ஒப்புக் கொண்டார். தாம் எழுதிய கவிகளைப் பற்றி ராஜாஜி அவ்வப் பொழுது அபிப்பிராயம் எழுதி அனுப்பி, ஊக்கமளித்து வந்ததாகவும், அதற்காகத் தம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கவிஞர் கூறினர்.

தமிழர்கள் தமக்கு அளித்த கௌரவத்தை கவிஞர் எவ்வளவு பாராட்டினர் என்பது அவர் குரலிலேயே தொனித்தது.

"பணத்தைப்பற்றி நான் எப்பொழுதுமே கவலைப்பட்டதில்லை. நீங்கள் எனக்குச் செய்த மரியாதையை எல்லாம் தமிழுக்குச் செய்ததாகவே கொள்கிறேன். நீங்கள் என் மீது காட்டும் அன்பை யெல்லாம் சேர்த்துக் கோவிலாக்கி, அதற்கு நான் மணியடிக்கும் பூசாரிஆக இருக்க விரும்புகிறேன்" என்று அவர் கவித்வம் நிறைந்த வார்த்தைகளைத் தழ தழத்த குரலில் கூறினர்.

கவிஞர் பேசி முடித்ததும் கல்கி ஆசிரியர் 'கல்கி' பேச எழுந்தார். அவர் எழுந்த போது கூடவே எழுந்த கரகோஷம் சொல்லி முடியாது. ஏனெனில், "கல்கி ஆசிரியர் பேசட்டும்,

கல்கி ஆசிரியர் பேசட்டும்!'' ''கூட்டத்துக்கு வராத திரு. வி. க. வுக்குப் பதிலாகவாவது கல்கி ஆசிரியர் பேசட்டும்'' என்ற கூக்குரல்கள் முன்னுலேயே எழுந்து விட்டன. இந்த கூக்குரலுக்குச் சமாதானமாகத்தான் ராஜாஜி, ''கல்கி ஆசிரியர் கடைசியில் பேசுவார். இப்பொழுது எனக்கும் பேச ஆசையாக இருக்கிறது. நான் கொஞ்சம் பேசுகிறேன்'' என்று சொன்னது.

'கல்கி' அவர்கள் பேச எழுந்ததுமே, ''நான் சோடாப் புட்டியைத் தொடப்போவதில்லை. கவலைப் படாதீர்கள்'' என்று சொன்னுர். சோடாப் புட்டி என்றதுமே ஜனங்கள் கரகோஷம் செய்தனர். சோடாப் புட்டிக்கு அத்தனை ஹாஸ்யத் தன்மை உண்டாக்கி வைத்துவிட்டார்கள் இவருக்கு முன்னுல் சோடாக் குடித்துக் கொண்டே பேசிய ஸ்ரீ வையாபுரிப் பிள்ளையும் ஸ்ரீ திரிகூடசுந்தரம் பிள்ளையும்.

ராஜாஜி குறிப்பிட்ட சேலம் பெருமைகளைக் 'கல்கி' ஒப்புக் கொண்டு, ''இவை எல்லாவற்றையும்விட அதிகமாகச் சேலத்துக்குப் பெருமை தருவது தலைவர் ராஜாஜியைத் தேசத் துக்குத் தந்ததாகும்'' என்ருர்.

இருந்தாலும் நாமக்கல்லில் பிறந்த கவியைக் கௌரவிக்க கம்பர் பிறந்த தஞ்சாவூர்காரரான தாமும், பாரதியார் பிறந்த திருநெல்வேலிக்காரரான ஸ்ரீ டி. கே. சியும் தான் முன்வரவேண்டி யிருக்கிறது என்று அவர் சொன்னபோது ராஜாஜியின் முகத்தைப் பார்க்கவேண்டுமே!

''தாங்கள் சொல்வது மிகவும் பொருத்தம்'' என்று கூறுவது போல் சபையோர் கரகோஷம் செய்து இதை ஆமோதித்தனர்.

இத்தனை அழகாக விழாவை நடத்திக் கொடுத்ததற்காக எந்தக் கடவுள் பிரசிடெண்ட் ட்ரூமன் கையில் அடாமிக் குண்டைத் தூக்கிக் கொடுத்தாரோ, அந்தக் கடவுளை வாழ்த்தத் தொடங்கிய 'கல்கி' அடுத்த கணமே இலக்கிய ஆராய்ச்சியில் புகுந்து விட்டார்.

மற்ற பாஷைகளில் சொற்கள் சில நூறு வருஷங்களுக்குள் வழக்கொழிந்து போனதுபோல் தமிழில் இல்லை யென்றும்,

மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னுல் வழக்கில் இருந்த சொற்களே இன்னும் வழக்கத்தில் இருக்கின்றன என்றும் கம்பர், வள்ளுவர், பாரதியார் இவர்கள் இலக்கியங்களிலிருந்து மேற்கோள்களுடன் விவரித்தார்.

"கவிஞர் கனவு காணும் நாட்டில் பெட்டிக்குச் சாவி கிடையாது என்று அவரே சொல்லியிருக்கிருர். அதேமாதிரி அவர் பெட்டிக்கும் சாவி இல்லாமல் தானே இருக்கும்? இவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்கிருேமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். நல்ல வேளையாகக் கவிஞருடன் அவர் மனைவியார் வந்து பணத்தைப் பெற்றுக்கொண்டது மிகவும் நல்லதாகப் போயிற்று" என்று கல்கி சொன்னபோது, அந்த அம்மாள் முகத்தில் தோன்றிய சந்தோஷம் மற்ற எல்லார் முகத்திலும் தோன்றிய சந்தோஷத்தைத் தூக்கியடித்து விட்டது.

டி. கே. சிக்குப் பாடத் தெரிந்தால் தமக்கும் பாடத்தெரியும் என்று கல்கியும் கவிஞரின் பாட்டு ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு பாடிக்காட்டினுர்.

கல்கி அவர்கள் பொறுக்கியது மிகவும் அருமையான பாட்டு. அந்த அருமையான பாட்டை வெகு அருமையான முறையில் விளக்கினுர். அவர் கூறியதாவது :—

எல்லாக் கவிகளுக்கும் உள்ளது போல் நம் நாமக்கல் கவிஞருக்கும் காதலி உண்டு. பக்கத்தில் உள்ள அம்மையார் கோபித்துக் கொள்ளக்கூடாது. (சிரிப்பு) நான் கூற வந்தது நிஜக் காதலி அல்ல. கவிதைக் காதலி. அத்தகைய காதலியைக் கவிஞர் எப்படி வர்ணிக்கிருர் பாருங்கள்.

பொன்னும் மணியும் குறைந்தனள்—என்ற
போதும் அழகு நிறைந்தனள்

பக்கத்தில் இருக்கும் அம்மாளுடன் ஒத்திட்டுப் பார்க்கக் கூடாது. (சிரிப்பு)

சின்னஞ் சிறிய சிரிப்பினுல்—எந்தன்
சிந்தையில் இன்பம் நிரப்பினுள்
வட்ட வடிவத் திலகமும்—புது
வண்ணம் கொடுத்த மலர்களும்
பட்டும் ஜரிகையும் இன்றியும்—தங்கப்
பாவை யெனும்படி நின்றனள்.

இத்தனை அழகு வாய்ந்த மங்கைக்கு என்ன வயது இருக்கும் தெரியுமா? ஒன்றும் ஜாஸ்தி யில்லை. சுமார் மூவாயிரம் வயது. அவ்வளவுதான். (சிரிப்பு) ஏனெனில் அந்த அம்மாள் வேறு யாரும் இல்லை.

தெய்வத் தமிழ் மொழிப் பெண்ணவள்—இந்த
தேசப் பெருமைக்குக் கண்ணவள்.



பாக
சாஸ்திரம்

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே

என்ற அமரகவியின் பாட்டுடன் அன்று பிரசங்கியார் தம் பிரசங்கத்தை முடித்தார். பாவம், ஒரு மணி நேரமாக நாம் எல்லாரும் ஒற்றுமையாக வாழவேண்டியதன் அவசியத்தைப்பற்றிச் சொல்லிச் சொல்லி அவருக்கு நா உலர்ந்துவிட்டது, தொண்டை காய்ந்துவிட்டது. அதற்காகப் பத்து புட்டி கலர் ஸோடாவைக் குடித்துத் தள்ளினார். அப்பொழுதும் தொண்டை சரிப்படாமற்போகவே மேலும் பத்துப் புட்டி கலர் ஸோடாவைக் குடித்து வைத்தார்.

இந்தியர்கள் ஒற்றுமையாக இருப்பதற்காக அவர் எவ்வளவு தியாகம் வேண்டுமானாலும் செய்யத் தயார், எத்தனைக் கூட்டங்களில் வேண்டுமானாலும் பேசத் தயார், எத்தனை கலர் ஸோடாக்களானாலும் குடிக்கத் தயார்!

சென்ற ஒரு வருஷமாக அவர் அப்படித்தான் தேசத்தின் ஒற்றுமைக்காகத் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்து கொண்டிருந்தார். நாற்பத்து நான்கு ஸோடாக் கம்பனிகள் இவர் ஒருவரை நம்பித்தான் தங்கள் உயிரை வைத்துக் கொண்டிருந்தன என்றால் இவர் தேசத்தின் நன்மைக்காக எவ்வளவு பாடுபட்டுக் கொண்டிருந்தார், எத்தனை சோடாக் கலர்கள் குடிக்கத் தயாராக இருந்தார் என்று நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் எத்தனைக் கெத்தனை இவர் பிறருக்கு ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றி உபதேசம் செய்து வந்தாரோ அத்தனைக் கத்தனை இவருக்கும், இவருடைய நண்பர்களுக்கும் இருந்த ஒற்றுமை குலைந்து கொண்டு வந்தது.

இவர் ஏதாவது ஒரு ஊரில் ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்துவிட்டு, இருபது முப்பது கலர் ஸோடாக்களும் குடித்துவிட்டு அந்த ஊரில் இருக்கும் நண்பர் வீட்டுக்குச் சாப்பிடப்போக வேண்டியதுதான் தாமதம், இவருக்கும், இவர் நண்பருக்கும் உள்ள ஒற்றுமை உடனே குலைய ஆரம்பித்துவிடும். காரணம் நம் எல்லாரையும் போல் பிரசங்கி யாருக்கும் நாக்கு ஒன்று இருந்ததுதான்.

நண்பர் வீட்டுச் சாப்பாடு இவருக்குப் பிடித்திருக்காது. தான் போட்ட சாப்பாட்டை விருந்தாளி ரஸித்துச் சாப்பிடவில்லையே என்று வீட்டு அம்மாள் முகத்தைக் கடுத்துக் கொள்வாள். வந்த விருந்தாளி சரியாகச் சாப்பிடவில்லையானால் எந்த வீட்டு அம்மாளுக்குத்தான் ரோஷம் வராது? சாதம் மிஞ்சிப்போய் நாளைக்கு அதைப் பழைய அமுதாக வைத்துச் சிவனே என்று சாப்பிட வேண்டியவள் அந்த அம்மாளா அல்லது வேறு யாராவதா? அந்த கடு கடுப்பைப் பார்த்துவிட்டு, வீட்டு ஐயா, நண்பரைச் சிடுசிடுப்பார். "எங்கள் வீட்டுச் சாப்பாடெல்லாம் தங்களுக்குப் பிடிக்குமா!" என்று அங்கலாய்த்துக் கொள்வார். அவ்வளவுதான், இருவருக்குமிடையே இருந்த ஒற்றுமை நீங்கி இருவருக்கும் தாழ்வு வந்து சேரும்.

நம் நாட்டில் இந்தப் பிரசங்கியாரைப்போல் எத்தனையோ ஆயிரக்கணக்கான பிரசங்கிகள் ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றிக் கரடியாய்க் கத்தியும் இன்னும் நம்மிடை ஒற்றுமை ஏற்படாததற்கு இந்த சாப்பாடுதான் முக்கிய காரணம்.

நாம் என்ன தான் ஒருவரோடு ஒருவர் கட்டிப் பிரண்டாலும் எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம் எல்லாரும் இந்திய மக்கள் என்று கூட்டங்களில் பேசினாலும் ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிடுவது என்றால் சற்று யோசனை பண்ணத்தான் செய்கிறோம். நம் நாட்டில் வீட்டுக்கு வீடு சாப்பாட்டு ருசி வேறு படுவதால் ஒருவர் வீட்டுச் சாப்பாடு இன்னொருவருக்குப் பிடிப்பதில்லை. ஏன், ஒரு வீட்டிலேயே ஒருவர் சமையல் இன்னொருவருக்குப் பிடிப்பதில்லை. இன்றைக்குப் பிடித்தவரின் சமையல் நாளைக்குப் பிடிப்பதில்லை.

இதனால் நம்மிடை ஏற்படும் ஒற்றுமைக் குறைவுக்கு அளவில்லை.

என் கல்யாணத்திற்கு முன்பு என் மீது எவ்வளவோ அன்பு கொண்டிருந்த என் தாயார் இன்று என் மீது கோபம் கொண்டிருப்பதற்கே காரணம் இந்த சாப்பாடு விஷயம்தான். கல்யாணத்திற்கு முன்பு என் தாயார் போட்ட சாப்பாட்டை ரஸித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த எனக்கு கல்யாணம் ஆகி டில்லிக்குப்போய் இரண்டு வருஷம் தனிக் குடித்தனம் நடத்தி விட்டு வந்த பிறகு தாயார் சமைத்தால் பிடிக்க மாட்டேன் என்கிறது.

சிநேகிதனைப் போல் என் மீது அத்தனை வாஞ்சை கொண்டிருந்த என் தம்பி, இன்று அண்ணன் தம்பி அடித்துக் கொள்வது போல் என்னோடு சண்டை போட்டுக் கொண்டு, என் வீட்டிலேயே தனிக்குடித்தனம் பண்ணி வருவதற்கும் இந்தச் சாப்பாடுதான் காரணம். (தனி வீட்டுக்குப் போய் தனிக்குடித்தனம் பண்ண வேண்டும் என்று என் தம்பி துடியாய்த் தான் துடிக்கிறான். ஆனால் இந்தக் காலத்தில் வீடு கிடைத்தால்தானே! அதற்காக என் வீட்டிலேயே ஒரு மூலையில் தனிக்குடித்தனம் பண்ண ஆரம்பித்துவிட்டான்!)

என் மனைவி சமைத்தால் அவனுக்குப் பிடிப்பதில்லை. அவன் மனைவி சமைத்தால் எனக்குப் பிடிப்பதில்லை. அவன் மனைவியும், என் மனைவியும் வேளைக்கு ஒருவராக மாறி மாறி சமைத்தால் இந்த வேளை சாப்பாடு எனக்குப் பிடித்திருந்தால் அடுத்த வேளை சாப்பாடு எனக்குப் பிடிக்காது. அவனுக்குப் பிடிக்காவிட்டால் எனக்குக் கோபம் வரும். எனக்குப் பிடிக்காவிட்டால் அவனுக்குக் கோபம் வரும்.

சாப்பாட்டினால் சண்டை வேளை தவறாமல் நடக்க ஆரம்பிக்கவே அவனுக்கும் எனக்கும் போதும் போதுமென்றாகி விட்டது! நல்ல வேளையாக அவன் தனிக்குடித்தனம் பண்ண ஆரம்பித்தானே, நான் பிழைத்தேனே!

தலை தீபாவளிக்குப் பிறகு தங்கள் வீட்டை எட்டியே பார்க்க வில்லை என்று என் மாமனாரும் மாமியாரும் என் மீது குறை கூறுவதற்கும் இது தான் காரணம். தலை தீபாவளியன்று என் மாமியார் சமைத்துப் போட்ட சாப்பாட்டை சாப்பிட்டவன் தான் அதாவது சாப்பிட முயன்றவன் தான்—அதற்குப் பிறகு அந்தப் பக்கமே தலைவைத்துப் படுப்பதில்லை என்று சபதம் பண்ணி விட்டேன்.

இதனால் சமையலில் சரசு மிகவும் கெட்டிக்காரி என்று நான் சொல்வதாக நீங்கள் கொள்ளக்கூடாது. நான் என் நண்பர்கள் யாரையாவது வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தால் அவர்கள் விளக்கெண்ணெய் குடித்தவர்கள்போல் முகத்தை வைத்துக் கொள்வது எனக்குத் தெரியாமல் இல்லை.

ஆனால் இந்த சுரணை கெட்ட நாக்கு இருக்கிறதே, அதை நம்பவே முடியாது. உப்பில்லாத கஞ்சியாக இருந்தாலும் சரி, அதையே தொடர்ந்து கொஞ்சகாலம் குடித்துக் கொண்டு வந்தால் போதும், அதையே தேவாமிர்தம் என்று நினைக்க ஆரம்பித்துவிடும். அதற்குப் பிறகு தேவாமிர்தம் கிடைத்தாலும் அதற்குப் பிடிக்காது.

அதைப் போலவே இத்தனை வருஷகாலமாக சரசு சமைத்துப் போட்ட சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு, எனக்கு வேறு யார் சமைத்தாலும் பிடிக்க மாட்டேன் என்கிறது.

ஆகவே எல்லாரும் தங்கள் வீட்டு மனைவி பண்ணும் சமையல் தான் உயர்ந்தது, மற்றவர் வீட்டு மனைவிகள் பண்ணும் சமையல் தாழ்ந்தது என்று எண்ணும் மனப்பான்மை ஒழிய வேண்டுமானால் தமிழ் நாட்டில் இன்று கோடிக்கனக்கான சமையல் ருசிகள் இருப்பது போய், ஒரே ஒரு வித ருசி ஏற்படவேண்டும். ஸ்திரீகள் கையளவாக உப்பு, புளி முதலியவை சேர்க்கும் வழக்கம் ஒழிந்து, தராசு, அவுன்ஸ் கிளாஸ் இவை கொண்டு அளந்து போடும் வழக்கம் வரவேண்டும் அப்பொழுதுதான் எழுதிக் கொடுத்த கணக்கின்படி யார் சமைத்தாலும் சமையல் ஒரே ருசியாக இருக்கும். இத்தகைய நிலைமை ஏற்படுவதற்கு அகராதிகள்

கலைக்களஞ்சியங்கள் முதலியவற்றுக்குக் கமிட்டிகள் ஏற்படுத்தப் படுவதுபோல் உடனே ஒரு சாப்பாட்டுக் கமிட்டி ஏற்படுத்தப் பட்டு அவர்கள் எல்லா ஜனங்களும் ஒப்புக் கொள்ளும்படியாக ஒரு பாக சாஸ்திர நூல் உடனே தயார் செய்யவேண்டும்.

தமிழ் வெகு வேகமாக முன்னுக்கு வந்து விட்டது, வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது, அது போகிற வேகத் தைப் பார்த்தால் எங்கே தமிழ் நாட்டு எல்லையைவிட்டே ஓடிப் போய் விடுமோ என்று பயமாய் இருக்கிறது என்றெல்லாம் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் தமிழில் தினப்படி எல்லார் வீட்டிலும் நடக்கும், கட்டாயம் நடந்தாகவேண்டிய சமையலைப் பற்றி ஒரு புத்தகமும் இன்னும் வெளிவரவில்லை.

யுத்தகால சீனாவைப்பற்றியும், சமாதான கால ஜப்பானைப் பற்றியும் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் வெளி வந்து கொண் டிருக்கின்றன. அன்றாட வாழ்க்கையில் நம் எல்லாருக்கும் அத்யா வசியமாக வேண்டியிருக்கும் சமையலைப்பற்றி ஒரு புஸ்தகம் கூடக் கிடையாது.

யுத்தகால சீனர்களைப் பற்றியும், சமாதான கால ஜப்பானியர் களைப்பற்றியும் கவலை கொண்டிருக்கும் தமிழர்கள் அடுத்த வேளை சாப்பாட்டைப்பற்றி எங்கே கவலை கொள்ளப் போகிறார்கள் என்ற சந்தேகத்தினாலேயே யாரும் பாக சாஸ்திரத்தைப்பற்றிப் புத்தகம் எழுத முன் வரவில்லை போலிருக்கிறது.

இல்லையேல், புத்தகத்தைப் படித்து ஒன்றுமே தெரிந்து கொள்ள முடியாது என்று நம் நாட்டில் ஒரு எண்ணம் பரவி வருகிறதே, அதுவே இதற்குக் காரணமாக இருக்கலாம். பாக சாஸ்திர புத்தகத்தின்படி சமைத்தால் சமையல் நன்றாய் இருக் காது என்ற எண்ணம் நமக்கு வேரூன்றி விட்டது. ஒரு பெண் ணுக்குச் சமையல் தெரியாது என்று பழிப்பதற்கோ அல்லது செய்த சமையல் நன்றாக இல்லை என்று இடித்துக் காட்டு வதற்கோ நாம், "பாக சாஸ்திரத்தை வைத்துக்கொண்டு சமைத் தாயா?" என்று கேட்பதை வழக்கமாக வைத்துக்கொண்டிருக் கிறோம்.

இதற்காகத்தான் ஒரு கமிட்டி ஏற்பட வேண்டும் என்று நான் சொன்னேன். அவர்கள் மாத்திரம் சிரமத்தைப் பாராமல் எல்லாவித சாப்பாட்டுகளையும் சாப்பிட்டுப் பார்த்து, ஒரு பாக சாஸ்திர புத்தகம் தயாரித்தார்களானால், உடனே சர்க்கார் அதன் படிதான் எல்லாரும் சமைக்க வேண்டும் என்று சட்டம் போட்டு விடலாம். அப்பொழுது எங்குபார்த்தாலும் ஒரே மணம், ஒரே ருசி, ஒரே காரம் பரிமளிக்கும். தற்பொழுது சாப்பாட்டினால் ஏற்படும் மாமியார் மாட்டுப்பெண் சண்டைகள் ஒழியும், மற்றச் சண்டைகளும் ஒழியும், எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் இந்தியா மக்கள் என்ற ஒற்றுமை உணர்ச்சி ஏற்படும்.

* * * *

நான் கூறியுள்ள இந்த யோசனையைப் பார்த்துவிட்டு சரசு, "எதற்காகக் கமிட்டியும், கிமிட்டியும்? நான் தான் ஒரு பாக சாஸ்திர புத்தகம் எழுதுகிறேனே!" என்கிறாள்.

நான், "அம்மா, தாயே! வேண்டாம்! உலகத்து ஜனங்கள் எல்லாரும் இந்தப் பாழும் உலகத்திலேயே இன்னும் கொஞ்ச காலம் இருந்து அவதிப் படட்டும். எதற்காகத் தங்கள் சாப்பாட்டைக் கொண்டு அவர்களை மேல் உலகத்திற்கு அனுப்பப் பார்க்கிறீர்கள்?" என்று பதில் சொல்லி வருகிறேன்.

ஓயாப் பேச்சு

பழைய காலத்துக் கதை ஒன்றைக் கேட்டிருப்பீர்கள். ஒரு அரசன் பழம் நறுக்கும்போது இடது கைச் சுண்டு விரலை வெட்டிக் கொண்டு விடுகிறான். அப்பொழுது அரசனைப் பார்ப்பதற்காக வரும் ராஜ குரு அரசனைப் பார்த்து "எல்லாம் நன்மைக்கே" என்று சந்தோஷப்படுகிறார். இதை கேட்டு அரசன் கோபங் கொண்டு ராஜ குருவை நாட்டை விட்டுத் துரத்தி விடுகிறான்.

காலம் செல்கிறது. சில வருஷங்கள் ஓடி மறைகின்றன. அரசன் ஒரு சமயம் காட்டிற்கு வேட்டையாடச் சென்றவன், கூட வந்த பிரதானிகளிட மிருந்து பிரிந்து போய், வழி தவறி விடுகிறான். அஸ்தமித்தும் விடுகிறது. பொழுது விடிந்ததும் வழி கண்டு பிடித்துக் கொள்ளலாம் என்று அரசன் தீர்மானித்து, பக்கத்தில் உள்ள ஒரு பாழடைந்த கோவிலில் படுத்துத் தூங்குகிறான்.

அன்றிரவு சில கொள்ளைக் கூட்டத்தார் அந்தப் பக்கம் வருகிறார்கள். துளிகூட ஒச்சமில்லாத ஆளை காளிக்கு நரபலி கொடுப்பதாக அவர்கள் வேண்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆள் கிடைக்கவில்லையே, என்ன பண்ணுவது என்று அவர்கள் திகைத்துக் கொண்டிருக்கையில் அரசன் அங்கு படுத்துத் தூங்குவதைக் கவனிக்கிறார்கள். அரசனுக்கு சகல லட்சணங்களும் பொருந்தியிருக்கிறது என்று தீர்மானித்து அவனைப் பலி கொடுப்பது என்று நிச்சயிக்கிறார்கள். அரசனைப் பலி கொடுப்பதற்காக ஆயத்தங்கள் நடக்கும் சமயத்தில் அரசனது இடது கையில் சுண்டு விரல் கிடையாது என்று ஒருவன் கவனிக்கிறான். அவ்வளவுதான், ஒச்சமுள்ள

அரசனைப் பலி கொடுத்துப் பலன் இல்லை என்று தீர்மானித்து அரசனை விடுவித்து விடுகிறார்கள். அடுத்த நாள் அரசன் பத்திரமாகத் தலைநகர் திரும்புகிறான், சுண்டு விரல் வெட்டுப்பட்டதைப் பார்த்து "எல்லாம் நன்மைக்கே" என்று குரு சொன்னது சரிதான் என்று கண்டு, நாடு கடத்தப்பட்ட குருவை திரும்ப அழைத்து, வேண்டிய மரியாதைகள் செய்து தன் சமஸ்தானத்தில் வைத்துக் கொள்கிறான்.

இதைப் போலவே நமக்கு உள்ள எத்தனையோ குறைகளும் நமக்கு அனுகூலமாகவே முடிக்கின்றன. தமக்கு உள்ள ஞாபக மறதிக் குறையை வைத்துக்கொண்டு என் நண்பர் ஒருவர் எவ்வளவு அனுகூலம் அடைகிறார் என்கிறீர்கள் ?

நாமெல்லாம் நண்பர்களை விருந்துக்கு அழைக்க முடியாமல் போய், அவர்களிடம் கெட்ட பெயர் வாங்க வேண்டியிருக்கிறது. ஆனால் ஞாபக மறதி நண்பர் இருக்கிறாரே, அவருக்கு இந்தக் கவலை யெல்லாம் கிடையாது. அவர் யாரைப் பார்த்தாலும் வீட்டுக்குச் சாப்பிட கட்டாயம் வந்தாக வேண்டும் என்று வருந்தி அழைத்து விடுவார். ஆனால் அவர் வார்த்தையை நம்பிக்கொண்டு சாப்பாட்டுக்குப் போனோமோ வீட்டில் சொல்ல மறந்திருப்பார், அல்லது சாப்பாட்டு சமயத்துக்கு ஆள் இருக்கமாட்டார், எங்கேயாவது வெளியே போய் விட்டிருப்பார். அவர் ஞாபக மறதிக்காரர் என்று எல்லாருக்கும் தெரியுமாதலால், இதற்காக யாரும் அவர் மீது வருத்தப்பட்டுக் கொள்ள மாட்டார்கள். அவர் ஞாபகம் வைத்துக்கொண்டு சாப்பாடு போட்டால்தான் இவர்கள் ஆச்சரியப் படுவார்கள்.

இதைப் போலவேதான் அசட்டுத் தனத்துக்குப் பெயர் வாங்கியவர்களும். இவர்கள் எந்தக் காரியத்தை அசட்டுத்தனமாக நடத்தினாலும் யாரும் இவர்கள்மீது குறை கூற மாட்டார்கள். ஆனால் வழக்கமாக எந்தக் காரியத்தையும் சாமர்த்தியமாகச் செய்யும் ஒருவர் ஒரு நாள் சிறு அசட்டுத்தனமாக நடந்து கொண்டு விட்டாரோ, சுற்றியுள்ளவர்கள் அவரைத் தூற்றிப் பழிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

கொடுக்காத மகாராஜிதான் கொடுக்கவில்லே, வழக்கமாகக் கொடுக்கும் மூதேவி கொடுப்பதற் கென்ன என்னும் கதைதான் உங்களுக்குத் தெரியுமே?

தங்களேப் பற்றியும், தங்கள் சாமர்த்தியங்களேப் பற்றியும், சதா சர்வ காலமும் ஓயாமல் பேசும் ஓயாப் பேச்சுக்காரர்கள் அநேகர் இருக்கிருர்கள். இவர்களால் தங்கள் பெருமையைப் பற்றி ஒரு நிமிஷம் கூட பேசாமல் இருக்க முடியாது. இதனுல் இவர்கள் அடையும் நன்மையோ சொல்லி முடியாது.

இத்தகைய ஓயாப் பேச்சுக்காரர்கள், தற் பெருமைக்காரர்கள், எல்லாத் தொழில்களிலும் இருக்கிருர்கள். எனக்குத் தெரிந்த ஒரு வக்கீல் இருக்கிருர். எந்தக் கட்சிக்காரன் இவரைத் தேடிப் போனுலும் சரி, ஒரு அரை மணி நேரத்துக்கு இவர் அவர்களேக் கவனிக்கமாட்டார். தன் குமாஸ்தாவைக் கூப்பிட்டுப் பின் கண்ட கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பார். குமாஸ்தாவும் அவருக்கு தக்கபடி பதில் அளித்துக் கொண்டிருப்பார்.

"என்ன குமாஸ்தா ஸார்? அந்த ஜமீன்தார் கேஸ் என்றைக்குப் போட்டிருக்கிறது?'

"இன்றைக்குத் தான் ஸார்"

"ஆமாம் நாம் பேசிய பத்தாயிரம் ரூபாய் பீசுக்குப் பாதிப் பீஸாவது முன்னுல் கொடுத்து விடவேண்டும் என்று சொன்னேனே, கொடுத்தாரா?"

"ஜமீன்தார் அன்றைக்கே ஐயாயிரம் ரூபாய் கொண்டு வந்து கொடுத்து விட்டார் ஸார்"

"சரி, அந்த சினிமா நடிகை கேஸ் என்றைக்குப் போடப் பட்டிருக்கிறது."

"நாளேக்கு ஸார்"

"அந்த அம்மாள் கொடுக்க வேண்டிய இரண்டாயிரம் ரூபாயைக் கொண்டு வந்து கொடுத்து விட்டாரா?"

"நாளைக் காலையில் கொண்டு வந்து தருவதாகச் சொல்லி யிருக்கிறார்."

"நேற்று கேஸ் செட்டியாருக்கு ஜயித்துக் கொடுத்தேனே, அவர் பீஸ் கொண்டு வந்து கொடுத்தாரா?"

"இன்றைக்கு வருவதாகச் சொல்லியிருக்கிறார்"

"நான் நேற்று சாட்சியைக் கேட்ட கேள்வியில் எதிரி வக்கீல் எப்படித் திணறிப் போனார் கவனித்தீரா?"

"கவனித்தேன் ஸார். அந்த கட்சிக்காரன் கூட உங்களிடம் வராமல் போய்விட்டோமே என்று மிகவும் வருத்தப் பட்டான் ஸார்."

"நான் தான் அந்த வக்கீல் கிட்டே போகாதே ஐயா, கேஸை என்னிடம் கொண்டு வந்து கொடு, ஒரு நொடியில் ஜயித்துத் தரு கிறேன் என்று சொன்னேனே, கேட்டாரா? நான் கேட்ட இரு நூறு ரூபாய் பீஸ் அதிகம் என்று நினைத்துக்கொண்டு அந்த வக்கீலிடம் போனார். கேஸ் தோற்று விட்டது"

வக்கீலைத் தேடி வந்த புதுக் கட்சிக் காரரைக் கார்க்கவைத்து விட்டு இந்த ரீதியில் வக்கீலும், வக்கீல் குமாஸ்தாவும் பேசிக் கொண்டே போவார்கள். புதிதாக வந்த கட்சிக்காரர், வக்கீல் மிகவும் பெரிய வக்கீல் போலிருக்கிறது என்று பிரமிப்பு அடைந்து, வக்கீல் கேட்ட பீஸைக் கூசாமல் கொடுப்பதுடன், அவரைப் பற்றியும் நாலுபேரிடம் பிரமாதமாகச் சொல்லுவார்.

இம்மாதிரி ஓயாமல் தங்கள் பெருமையைப் பற்றிப் பேசிப் பேசி எத்தனையோ வக்கீல்கள் அனுகூலம் அடைந்திருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு வக்கீல் மட்டும் வந்தவர் யார் என்று தெரிந்து கொள்ளாமல் தன் பெருமையைப் பேசி விபத்தில் மாட்டிக் கொண்டு விட்டார். வந்தவர் இவருக்கு வருமானம் எவ்வளவு வருகிறது என்று துப்புக் கண்டு பிடிப்பதற்காக வந்த வருமான வரி இன்ஸ்பெக்டர். ஆக வருமான வரி இன்ஸ்பெக்டரிடம் மட்டுமன்றி யாரிடமும் நம் பெருமையைப் பற்றி ஓயாமல் பேசி னாலும் அனுகூலம்தான்.

வக்கீல்களைப் போலவே சில வைத்தியர்களும் தங்கள் பெருமையைப்பற்றி ஓயாமல் பேசும் வழக்கம் கொண்டிருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு அனுகூலமும் ஏற்பட்டிருக்கிறது. இவர்களும் வக்கீல்களைப் போலவே அந்த ஜமீன்தாருக்கு வைத்தியம் பண்ணினேன், இந்த ஜமீன்தாருக்கு வைத்தியம் பண்ணினேன் என்று பிரமாதமாகச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். வைத்தியர் சொன்னது உண்மையாகவே இருக்கலாம். ஒரு ஜமீன்தாருக்கு ஜல தோஷத்திற்கும், இன்னொரு ஜமீன்தாருக்கு தலைவலிக்கும் இவர் மருந்து கொடுத்திருக்கலாம். இருந்தாலும் ஜனங்கள் அதைக் கண்டார்களா? ஜமீன்தார் என்ற வார்த்தையைக் கேட்டதும் வைத்தியர் மிகவும் பெரிய வைத்தியர், எவ்வளவு சிக்கலான வியாதியாக இருந்தாலும் தீர்த்துவிடுவார் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். ஜமீன்தார் பெரியவராக இருக்கிறபடியால் அவருக்கு வரும் வியாதியும் பெரிய வியாதியாகத்தான் இருக்கும், மிகவும் சிக்கல் வாய்ந்ததாகத்தான் இருக்கும் என்று சாதாரண ஜனங்கள் நினைத்துக்கொண்டால் அதற்கு வைத்தியர் என்ன பண்ணலாம்?

சில வைத்தியர்கள் வேறு வகையில் பெருமை அடித்துக் கொள்கிறார்கள். இவர்கள் மனிதர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள், வியாதிகளுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார்கள். உலகத்தில் இல்லாத புதுப் புது வியாதிகளின் பெயர்களை சிருஷ்டித்து, அவற்றைத் தாங்கள் குணப்படுத்தி விட்டதாகப் பெருமை அடித்துக் கொள்வார்கள். இதனால் அனுகூலமும் அடைவார்கள்.

நாட்டியம், சங்கீதம், சினிமா, நாடகம் போன்ற கலைத்துறைகளில் சம்பந்தப்பட்டவர்கள் பெருமை அடித்துக்கொள்ளும் விதமே தனி.

இவர்கள் தங்களுக்கு இது தெரியும் அது தெரியும் என்றெல்லாம் சொல்லிக்கொள்ள மாட்டார்கள். ஆனால் அதே துறையில் சம்பந்தப்பட்ட மற்றவர்களைக் குறிப்பிட்டு, அவனுக்கு என்ன தெரியும், இவனுக்கு என்ன தெரியும் என்று கேட்டுக் கொண்டிருப்பார்கள். மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று இவர்கள் சொல்வதால் இவர்களுக்கு எல்லாம் தெரிந்து விட்டதாக ஜனங்கள் நினைத்து ஏமாறுவதுண்டு.

கலைத்துறையிலும், இம்மாதிரி முன்னுக்கு வருகிறவர்கள் சினிமாத் துறையில்தான் அதிகம். எனக்குத் தெரிந்த டைரக்டர் ஒருவர் இந்த வழியில்தான் முன்னுக்கு வந்து வெகு நல்ல பதவியில் இருக்கிறார். இவர் முதலில் சினிமாவில் டைரக்டராக சேர விரும்பிய பொழுது இவர் யார் என்றே ஜனங்களுக்குத் தெரியாது. இதற்கு முன்னால் இவர் எங்கு வேலைபார்த்தார் என்றும் தெரியாது. முதல் முதலில் அந்த ஸ்டூடியோவுக்குள் இவர் நுழைந்த அன்று நானும் அங்கிருந்தேன். வந்தவர் நேரே முதலாளியை வந்து பார்த்தார். அங்குள்ள சிப்பந்திகள் ஒவ்வொருவராகக் குறிப்பிட்டு இவர் என்ன போட்டோ பிடித்திருக்கிறார், இந்தமாதிரி போட்டோ பிடித்தால் ஹாலிவுட்டில் அப்படியே கிழித்து எறிந்து விடுவார்கள், இவர் என்ன செட்டிங் போட்டிருக்கிறார், ஹாலிவுட்டில் இந்தமாதிரி செட்டிங் போட்டால் அப்படியே இடித்துத் தள்ளிவிடுவார்கள், இவர் என்ன பாட்டுப் போட்டிருக்கிறார், ஹாலிவுட்டில் இந்தமாதிரி பாட்டுப் போட்டால் ஒரு நாளைக்கு மேல் வைத்துக்கொள்ள மாட்டார்கள் என்று அடுக்கிக் கொண்டே போனார். அவ்வளவுதான், ஹாலிட்டுக்குப் போய் திரும்பியவர் என்று முதலாளி நினைத்துக்கொண்டு அவருக்கு உடனே டைரக்டர் வேலை கொடுத்துவிட்டார்.

அவர் இரண்டு வருஷகாலமாக டைரக்டர் வேலைசெய்து கொண்டிருக்கிறார், அதாவது தாம் ஒன்றும் செய்து குற்றம் கண்டு பிடிப்பதற்கு இடம் வைத்துக் கொள்ளாமல் பிறர் செய்யும் காரியங்களில் எல்லாம் குற்றம் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறார். ஒரு சமயம் நான் அவரைக்கண்டு "தாங்கள் எப்பொழுது ஹாலிவுட்டுக்குப் போனீர்கள், எனக்குத் தெரியாதே" என்றேன் "நான் ஹாலிவுட்டுக்குப் போனதாக யார் சொன்னது? ஹாலிவுட் எந்தப் பக்கம் இருக்கிறது என்றுகூட எனக்குத் தெரியாதே" என்றார். "என்ன தெரியாதா? பின் தினம் ஸ்டூடியோவில் ஹாலிவுட்டுக்குப் போனதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறீரே அது?" என்று கேட்டேன்.

"நான் ஹாலிவுட்டுக்குப் போனதாகவா சொல்லிக் கொண்டிருக்கிறேன்? அந்த அசடுகள் அந்த மாதிரி நினைத்துக் கொண்டு விட்டால். நான் என்ன பண்ணலாம்? ஹாலிவுட்டில் அப்படிச்

செய்வார்கள், இப்படிச் செய்வார்கள் என்று நான் வெறுமனே சொல்லிவைத்ததற்கு அவர்கள் நான் ஹாலிவுட்டுக்குப் போய்த் திரும்பியதாக நினைத்துக்கொண்டு விட்டார்கள். நான் என்னத்தைச் செய்ய?'' என்று அவர் பதில் அளித்தார்.

கடன் கொடுப்பவர்களும் இந்த ஓயாப் பேச்சுக் காரர்களை நம்பித்தான் எளிதில் கடன் கொடுக்கிறார்கள். இந்த ஓயாப் பேச்சுக்காரர்கள், "கையில் பணம் இல்லை. நூறு ரூபாய் கடன் கொடு'' என்று கேட்கமாட்டார்கள். "தரவேண்டிய ஆயிரம் ரூபாயை அந்த அயோக்யன் இன்றைக்குத் தருகிறேன் என்று சொன்னான், கொண்டுவந்து தரவில்லை,'' "நாளைக்கே கொண்டு வந்து தருகிறேன் என்று நாலாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு போன நாகபட்டிணக் காரன் நேற்றே வருகிறேன் என்று சொன்னான், இன்னும் வந்த பாடில்லை'' என்று இப்படி யாரை யாவது நம் காது கேட்க வைது கொண்டே இருப்பார்கள். பாவம் மிகவும் பணக்காரர்கள் போலிருக்கிறது, ஏதோ தட்டு ஏற்பட்டு விட்டது என்று நம்பி நாம் பணம் கடன் கொடுப்போம். அவர்கள் நமக்கு பட்டை நாமத்தைப் பரக்கச் சாத்தி விட்டுப் போய்விடு வார்கள்.

எம். ஏ. பாஸ் பண்ணிவிட்டு வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்த ஒரு சமயம் நானே இத்தகைய ஒருவரிடம் அகப் பட்டு ஏமாந்து போயிருக்கிறேன். வேலை தேடி பட்டணத்துக்கு வந்த சமயம் மைலாப்பூர் குளத்துக்கு அருகில் ஒருவரைச் சந்தித் தேன். நான் வேலையில்லாப் பட்டதாரி என்று அவர் எப்படியோ தெரிந்து கொண்டு விட்டார். என்னைப் பார்த்து "ஏண்டாப்பா, வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறாய்? என்னிடம் ஒரு வார்த்தை சொன்னால் நான் உனக்கு ஆயிரம் வேலை வாங்கிக் கொடுப்பேனே? இந்த ஊரில் எனக்குத் தெரியாத பெரிய மனிதர்கள் கிடையாது. ஹைகோர்ட் ஜட்ஜிகள், பெரிய முதலாளி கள், பெரிய ஆபீஸ் மானேஜர்கள் எல்லாரும் எனக்கு வேண்டிய வர்கள். என்னைக் கூப்பிடாமல் ஒரு காரியமும் செய்யமாட் டார்கள். அவர்கள் வீட்டில் கல்யாணம் ஏதாவது நடக்க வேண்டுமானால் முதலில் என்னைத்தான் கூப்பிட்டு அனுப்புவார் கள். இதோ பார், இப்பொழுதுகூட ஜட்ஜ் ராமசாமி வீட்டுக்குத் தான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்கள் பெண்ணுக்கு

இன்னும் நான்கு நாளில் கல்யாணம், ஜட்ஜ் ராமசாமியைப் பார்த்து உன்னைப் பற்றிச் சொல்கிறேன், கவலைப்படாதே'' என்று சொன்னார். இந்தமாதிரி எத்தனையோ ஜட்ஜிகளைப் பார்ப்பதாக சொல்லி என்னிடம் ஐந்தும், பத்தும் கைமாத்தாக வாங்கிக் கொண்டார். இரண்டு மாதங்களுக்கு அவர் கை மாத்து வாங்கு வதுதான் அதிகரித்ததே ஒழிய எனக்கு வேலை யொன்றும் சம் பாதித்துத் தருகிறவராகத் தோன்றவில்லை. ஆனால் அவர் பொய் சொன்னதாகவும் தெரியவில்லை. எல்லாப் பெரிய மனிதர்கள் வீட்டுக்கும் அவர் தாராளமாக நுழைவதை நானே என் கண்ணால் கவனித்திருக்கிறேன். ஆனால் எனக்குப் பின்னர்தான் விஷயம் புரிந்தது. அவர் எல்லாப் பெரிய மனிதர்கள் வீட்டிலும் உபாத்தி யாயம் பண்ணிக் கொண்டிருந்தார், அவ்வளவுதானே ஒழிய அவருக்கு வேறு ஒரு செல்வாக்கும் கிடையாது என்று.

சர்க்கார் பரீட்சைகளில் நேருக்கு நேர் சந்தித்து 'வைவாவோஸி என்னும் பரீட்சை நடத்திக் கேள்விகள் கேட்கிறார்களே, அதில் இந்த ஓயாப் பேச்சுக்காரர்கள்தான் செலிப்பதாகக் கூறுகிறார்கள். எந்தக் கேள்விக்கும் நேரிடையான பதில் கூறும் வழக்கம்தான் இந்த ஓயாப் பேச்சுக்காரர்களுக்குக் கிடையாதே? ஆக பரீட்சை செய்கிறவர்கள் பின்வரும் கேள்வி கேட்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், “நீங்கள் இப்பொழுது ஏறிவந்த மாடிப்படிக்கு எத்தனை படிகள்?” என்று. சாதாரணமான நம்மைப் போன்ற ஆட்களாக இருந்தால் “தெரியாது” என்று பதில் கூறுவோம். ஆனால் இந்த ஓயாப் பேச்சுக்காரர்கள் அப்படி இருக்கமாட்டார் கள். “கீழே இருந்து மாடிக்கு வருவதற்கு எத்தனை படிகள் அவசியமோ, அத்தனை படிகள்” என்று பதில் அளிப்பார்கள். எத்தனை சாதுரியமாகப் பதில் அளிக்கிறார் பார்த்தாயா என்று பரீட்சகர்கள் அவர்களுக்கு மார்க்குக் கொடுப்பதாக விஷயம் அறிந்தவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

ஆக ஓயாப் பேச்சுக்காரர்களுக்கு அனுகூலம் இருக்கத்தான் இருக்கிறது. ஆனால் இம்மாதிரி ஓயாப் பேச்சினால் அனுகூலம் அடைவதெல்லாம் தற்காலிகமாகத்தான். பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்று சொல்கிறார்களே, அது இவர்கள் விஷயத்தில் முழுக்க முழுக்க உண்மை.

புகழ் தேடுதல்

உலகில் மனிதன் கவலைப் படுவதற்கு எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன. அன்றன்றைய சாப்பாட்டைப்பற்றியே எத்தனையோ பேர் கவலைப்பட வேண்டியிருக்கிறது. வீட்டில் மனைவியுடன் சண்டை வராமல் பார்த்துக் கொள்ளவேண்டுமே என்ற கவலையே கிட்டத் தட்ட புருஷர்களாகப் பிறந்த நம் எல்லாருக்கும் இருக்கிறது. இன்னும் அடுத்த வீட்டுக்காரர்களுடன் அன்யோன்யமாக வாழவேண்டுமே என்ற கவலை வேறு இருக்கிறது. இருந்தும் சிலருக்கு இந்தக் கவலைகள் போதாது, ஊர்க்கவலைகளையெல்லாம் தங்கள் தலையில் போட்டுக் கொண்டால்தான் அவர்கள் மனம் நிம்மதியடையும். ஐயோ உலகம் இப்படிக் கெட்டுப்போய்க் கொண்டிருக்கிறதே, ஸ்திரீகள் இப்படி தைரியமாக எத்தனையோ காரியங்கள் செய்கிறார்களே என்றெல்லாம் இவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். சிலர் சதா சர்வகாலமும் தங்கள் உடம்பைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.

ஆனால் இத்தகைய கவலைகள் எல்லாரையும் பிடிப்பதில்லை. இந்தப் புகழ் தேடும் கவலை இருக்கிறதே இது ஒருவரையாவது விட்டதாகத் தெரியவில்லை. எப்படியாவது புகழ் சம்பாதித்து விடவேண்டும், நம்முடைய பெயரை உலகில் நிலைநாட்டி விட்டுப் போக வேண்டும் என்கிற கவலை எல்லாருக்குமே இருக்கிறது.

இத்தகைய கவலை ஜனங்களுக்கு ஏற்பட்டதற்கே காரணம், திருக்குறள் எழுதிய திருவள்ளுவர்தான் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். "தோன்றிற் புகழொடு தோன்றுக,

அஃதிலார் தோன்றலிற் தோன்ருமை நன்று'' என்று அவர் குறள் எழுதிவைத்து விட்டுப்போனதுதான் இதற்குக் காரணம் என்று அவர்கள் சொல்கிருர்கள். ஆனுல் இந்த ஆசை திருவள்ளுவர் காலத்துக்கு முன்பிருந்தே இருக்கிறது, மனிதன் உலகில் தோன்றிய காலத்திலிருந்தே இருக்கிறது.

இதற்காகச் சிலர் ராப்பகலாக உழைத்து விஞ்ஞானத்துறையிலும், கலைத்துறையிலும், அரசியல்துறையிலும் இன்னும் மற்றத்துறைகளிலும் செயற்கரிய காரியங்கள் செய்து தங்கள் பெயரை நிலை நாட்டி விட்டுப் போயிருக்கிருர்கள்.

ஆனுல் எல்லாருக்குமே இத்தகைய ஆற்றல் இருக்கிறதா? எல்லாருமே ஸர் ஐஸக் நியூடன்களாகவும், மகாகவி பாரதியாகவும் ஆக முடியுமா?

அதற்காக மற்றவர்கள் சின்னச் சின்ன வழிகளில் தங்கள் பெயரை நிலைநாட்டப் பார்த்திருக்கிருர்கள்.

எல்லாருமே அசோக சக்ரவர்த்தியாகப் பிறந்து கல்வெட்டுகளும், சிலா சாஸனங்களும் நாட்டி விட்டுப்போக முடியாது. ஆனுல் திருப்பதி மலைப்படிகளில் இவர்கள் தங்கள் பெயரையும், மலைக்கு வந்த தேதியையும் பொறித்து வைத்து விட்டுச் செல்வதை யார் தடுக்க முடியும்?

தாஜ்மஹாலைச் சுற்றி நான்கு புறமும் உள்ள உயர்ந்த நீண்ட கோபுரங்களில் ஏறிப்பாருங்கள், டில்லி ஜும்மா மசூதிக் கோபுரங்களில்தான் ஏறிப்பாருங்கள், இன்னும் திருச்சி மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோவிலுக்குத்தான் சென்று பாருங்கள், இந்த வழியில் தங்கள் பெயரை அழியாமல் பொறித்து வைத்து புகழ் தேடிக்கொண்ட புகழ் அபிமானிகளின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது.

பள்ளிக்கூடத்தில் படிப்பில் கெட்டிக்காரனுக இருந்தால்தான் புகழ் சம்பாதிக்க முடியும் என்பது பழங்காலம். இந்தக் காலத்தில் சைக்கிளை வேகமாகவிடத் தெரிந்தாலும் புகழ், வெகு மெள்ள விடத்தெரிந்தாலும் புகழ், புட்பால் விளையாடத் தெரிந்தாலும் புகழ், பிங்பாங் விளையாடத் தெரிந்தாலும் புகழ்.

ஆனால் இந்தப் புகழ் சம்பாதிக்கும் விஷயம் இருக்கிறதே, இது பசிப்பிணி மாதிரி. பசி அடங்குவதற்காகச் சாப்பிடுகிறோம். ஆனால் அத்துடன் பசி அடங்கி விடுகிறதா? நாலுமணிநேரம் போனால் திரும்பவும் பசிக்கிறது; திரும்பவும் சாப்பிட வேண்டியிருக்கிறது. திரும்பவும் பசிக்கிறது; திரும்பவும் சாப்பிட வேண்டியிருக்கிறது.

புகழ் தேடுவதும் இதைப் போலத்தான். ஏதோ ஒரு காரியத்தைச் செய்து புகழ் தேடிவிட்டோம், இனி பேசாமல் இருக்கலாம் என்று இருக்க முடியாது.

உதாரணமாக பெரிய நன் கொடை கொடுத்து புகழ் சம்பாதிக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அந்தப் புகழ் என்றும் நிலைத்து நிற்கும் என்று நம்பமுடியாது. திரும்பத் திரும்ப நன் கொடைகள் கொடுத்துக் கொண்டே இருந்தால்தான் புகழ் நிற்கும்.

ரேடியோவில் ஒரு நாள் நன்றாகப் பேசி எல்லாரும் பேஷ் பேஷ் என்று சொல்லிவிட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதற்காக வரும் புகழ் நிலைத்து நிற்குமா? திரும்பத் திரும்ப நன்றாகப் பேசிக்கொண்டிருந்தால்தான் புகழ் நிலைத்து நிற்கும்.

இதே தான் கட்டுரைகள் எழுதுவதிலும், நாடகங்கள் நடிப்பதிலும், கச்சேரிகள் செய்வதிலும், சினிமாவில் நடிப்பதிலும். உங்களுக்கே தெரியும், நேற்று "ஹா! ஹா!" என்று ஜனங்கள் புகழ்ந்த சினிமா நட்சத்திரங்கள், இன்று எங்கிருக்கிறார்கள் என்று விளக்கேற்றிக் கண்டு பிடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறதல்லவா?

இதற்காகத்தான்போலும் வெகு கஷ்டப்பட்டு ராவ் பகதூரோ அல்லது திவான் பகதூரோ பட்டம் பெற்றவர்கள் பட்டம் பெற்றதுடன் திருப்தி அடைந்து விடுவதில்லை.

தாங்கள் பட்டதாரிகள் என்கிற விஷயத்தை எப்படியாவது பரப்பிக்கொண்டே இருக்க வேண்டும் என்று சதா சர்வகாலம் இதே கவலையாக இருப்பார்கள்.

நான் புதிதாகக் குடிவந்திருக்கும் வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் ஒருவர் இருக்கிறார். நான் புது வீட்டுக்குக் குடி வந்த மறுநாள் அவர் தம் வேலைக்காரனுடன் பேசிக்கொண்டிருந்தார். "என்னடா திவான் பகதூர் தேவராஜனையா ஏமாற்றலாம் என்று பார்த்தாய்? அதெல்லாம் திவான் பகதூர் லேசில் ஏமாற மாட்டார். ஞாபகம் இருக்கட்டும். திவான் பகதூர் என்ன, ஏமாந்த சோணகிரியா? யாரை ஏமாற்றினாலும் ஏமாற்றலாம், திவான் பகதூர் தேவ ராஜனை மட்டும் ஏமாற்ற முடியாது, தெரிந்ததா?" என்று வேலைக் காரனுடன் சொல்லிக் கொண்டிருந்தார்.

தெருவு முழுவதும் கேட்கும்படி எதற்காக அத்தனை உச்ச ஸ்தாயியில் இரைந்து பேசிக்கொண்டிருக்கிறார் என்று புரியாமல் சுற்றும் முற்றும் பார்த்தேன். வேலைக்காரனுடன்தான் பேசிக் கொண்டு இருக்கிறாரா, அல்லது தூரத்தில் உள்ள வேறு யாரோடாவதுதான் பேசிக் கொண்டிருக்கிறாரா என்று தெரிந்து கொள்ளத்தான் அப்படிச் சுற்றிப் பார்த்தேன். ஆனால் சுற்று வட்டாரத்துக்கு ஒரு அரை பர்லாங்கு தூரம் வேறு யாரையும் காணாததால், தான் திவான் பகதூர் வாங்கிய பெருமையைப் புதிதாகப் பக்கத்து வீட்டுக்குக் குடி வந்திருக்கும் எனக்குத் தெரிவிப் பதற்காகத்தான் அப்படிச் செய்திருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன்.

இது நான் புது வீட்டுக்குக் குடி வந்த மறுநாள் நடந்தது. ஆனால் இதே விஷயம் தினப்படி நடக்க ஆரம்பித்துவிட்டது. வாசலில் யாராவது புதிதாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்றால் இந்தப் படலம் ஆரம்பித்துவிடும். வேலைக்காரன் அகப் பட்டால் வேலைக்காரன், மனைவி அகப்பட்டால் மனைவி, பெண் அகப்பட்டால் பெண், அல்லது வேறு யாரும் அகப்படாவிட்டால் மேஜை, நாற்காலி, கதவு, ஜன்னல் சுவர் எதையாவது பார்த்துத் தாம் ஒரு திவான் பகதூர் என்பதை அவர் வலியுறுத்திச் சொல்லிக் கொண்டிருப்பார். எதைப் பார்த்துச் சொன்னால் என்ன, அவர் நோக்கமெல்லாம் தாம் ஒரு திவான் பகதூர் என்பது வாசலில் போய்க் கொண்டிருக்கிறவர் காதில் விழவேண்டும் என்பதுதான்.

பணத்தையே முக்கியமாகத் தேடும் சிலருக்கு இவர்களுடைய செய்கைகளும் பேச்சுக்களும் ஆச்சரியமாகத்தான் இருக்கும்.

புகழ்தேடுவதற்காக இவர்கள் செலவழிக்கும் பணமும் காலமும் வியப்பைத்தான் விளைவிக்கும்.

என் நண்பர் ஒருவர் எந்தக் கூட்டமானாலும் சரி, எழுந்து பிரசங்கியாரைக் கேள்வி கேட்பது என்று ஒரு வழக்கம் வைத்திருக்கிறார். அவர் கேள்விக்கும் பிரசங்கியாருடைய விஷயத்துக்கும் முக்கால் வாசி சமயங்களில் ஒரு சம்பந்தமும் இருக்காது. சில சமயங்களில் தப்பித் தவறி சம்பந்தம் ஏற்பட்டுவிட்டும். ஆக முக்கால்வாசிக் கூட்டங்களில் கேள்வி கேட்ட என் நண்பர் அவமானப் பட்டுத்தான் திரும்புவார். இருந்தும் நண்பர் கேள்வி கேட்கும் வழக்கத்தை விடாது தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறார் என்றால் அவர் புகழ் மீது கொண்ட அக்கரை தான் இதற்குக் காரணம்.

இதே மாதிரி, ஒன்றுமில்லாத விஷயங்களைப்பற்றிக் குடைந்து குடைந்து பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதுகிறவர்களும் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

சிலர் புகழ் தேடுவதற்காக எல்லா வேலைகளையும் விட்டு விட்டு ஒரு கூட்டம் தவறாமல் பேசுவது என்று வைத்திருக்கிறார்கள். கூட்டத்தை ஏற்படுத்தியவர்கள் இவர்களைப் பேசுவதற்காக முன் கூட்டி அழைத்திருக்க மாட்டார்கள். கூட்டத்தில் என்ன விஷயம் பேசப் போகிறார்கள் என்றும் இவர்களுக்குத் தெரியாது. முன்னால் பேசியவர்கள் என்ன பேசினார்கள் என்றும் இவர்களுக்குத் தெரியாது. இருந்தாலும் அதற்காக இவர்கள் சளைத்து விடமாட்டார்கள். ஏதாவது பேசி, பேச்சாளர் என்று புகழ் சம்பாதித்துக்கொண்டு போய் விடுவார்கள்.

உதாரணத்துக்கு வேறு ஒன்றையும் கவனிக்காமல் இம்மாதிரிக் கூட்டங்களில் பேசுவதையே தாம் புகழ் சம்பாதிப்பதற்கு வழியாக வைத்துக்கொண்டிருக்கும் என் நண்பர் ஒருவர் கையாளும் யுக்தியைக் கூறுகிறேன், கேளுங்கள்.

ஒரு நாள் கம்பராமாயணத்தைப்பற்றி ஒரு அறிஞர் பிரசங்கம் பண்ணி முடித்தார். அந்த அறிஞர் பிரசங்கம்

பண்ணி முடிப்பதற்கும், என் நண்பர் கூட்டத்துக்கு வந்து சேர்ந்ததும் ஒன்று சேரவே நண்பர் தாமும் சில வார்த்தைகள் கூற விரும்புவதாக அக்கூட்டதின் தலைவரிடம் சொன்னார். தலைவர் சரி என்று ஆமோதிக்கவே எனக்கு திகைப்பாகப் போய் விட்டது. நண்பருக்கு கம்பராமாயணத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று எனக்குத் தெரியும். இருந்தும் ஏதோ பேசப் போவதாகச் சொல்கிறாரே என்று ஆச்சரியப்பட்டு நிமிர்ந்து உட்கார்ந்தேன். நண்பர் பின் வரும் கதை சொல்ல ஆரம்பித்தார்.

எஸ். எஸ். எல். ஸி. பரீட்சை தேறின ஒரு பையனுக்கு வேலை கிடைக்கவில்லை. அதற்காக ஒரு சர்க்கஸ் கம்பெனிக் காரரைப் பார்த்து வேலை கேட்டான். அவர் சொன்னார்: "அப்பா, என்னிடம் தற்சமயம் ஒரு குமாஸ்தா வேலையும் காலி கிடையாது. என்னிடம் வேடிக்கை வேடிக்கையாக வித்தை செய்த ஒரு மனிதக் குரங்கு இருந்தது. அது சமீபத்தில் இறந்து விட்டது. அதன் தோலை எடுத்து வைத்திருக்கிறேன். அதன் தோலை வேண்டுமானால் நீ போர்த்திக் கொண்டு குரங்கு மாதிரி ஆடு. சம்மதமிருந்தால் சொல்லு. இதைத் தவிர தற்சமயம் என்னிடம் வேறு ஒரு வேலையும் காலி கிடையாது" என்றார்

எஸ். எஸ். எல். ஸி. தேறின அந்தப் பையன் வேறு வழி யின்றி வேலையை ஒப்புக் கொண்டான். அன்றிலிருந்து குரங்குத் தோலை போர்த்திக் கொண்டு குரங்கு போல் நடிக்கவும் தொடங்கினான்.

ஒரு நாள் இவன் உயரத்தில் கம்பியில் தொங்கிக் கொண்டிருந்த போது அகஸ்மாத்தாகக் கீழே இருந்த சிங்கக் கூண்டில் விழுந்து விட்டான். "ஆ" என்று வாயைத் திறந்து கொண்டு பக்கத்தில் நின்று கொண்டிருந்த சிங்கத்தைக் கண்டதும் பையன் நடுங்கிவிட்டான். வாய்க் குளறவும் ஆரம்பித்து விட்டான். இதைப் பார்த்த சிங்கம், "அப்பா கவலைப்படாதே! நீ எப்படி நிஜக் குரங்கு அல்லவோ அதைப் போல நான் நிஜ சிங்கம் அல்ல. நான் பீ. ஏ. பாஸ் பண்ணிவிட்டு வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில் இந்த வேலை கிடைத்தது, ஒப்புக் கொண்டேன்" என்று சொல்லிற்று.

இந்தக் கதையைக் கேட்டு நீங்கள் சிரிக்கிறீர்கள் அல்லவா? அதைப் போலத்தான் அன்று கூட்டத்துக்கு வந்திருந்தவர்களும் கேட்டுச் சிரித்தார்கள். இந்த ஹாஸ்யக் கதைக்கும் கம்ப ராமாயணத்துக்கும் என்னடா சம்பந்தம் என்று நான் யோசிப்பதற்குள் நண்பர் தொடர்ந்து மேலே சொன்னார்.

"நீங்கள் எல்லோரும் சிரிக்கிறீர்கள் அல்லவா? சிரியுங்கள், நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் கம்பராமாயணத்தில் இத்தகைய ஹாஸ்யத் துணுக்குகள் இருக்குமென்று நினைத்து படிக்க ஆரம்பித்தீர்களோ, ஏமாந்து போவீர்கள். அப்படித்தான் எதிர்பார்த்து நான் ஏமாந்து போனேன்" என்று நண்பர் தம் பிரசங்கத்தை முடித்துக்கொண்டார்.

இம்மாதிரி சம்பந்தா சம்பந்தமற்ற ஹாஸ்யத் துணுக்குகளை வைத்துக்கொண்டு பிரசங்கம் பண்ணி புகழ் சம்பாதிப்பதையே இவர் ஒரு வேலையாக—சம்பளமில்லாத வேலையாகக் கொண்டிருக்கிறார்.

புகழ் தேடுவதற்காகச் சிலர் பணத்தை வாரி இறைப்பதைப் பார்த்தால் நமக்கு வயிற்றெரிச்சலாக இருக்கும். நாட்டில் எந்தத் தேர்தல் வந்தாலும் சரி, இவர்களும் உடனே நிற்கத் தொடங்கி விடுவார்கள். தங்களுக்கு பத்து வோட்டுக்களுக்கு மேல் கிடைக்காது, டிப்பாசிட் போவதுடன், தேர்தல் செலவு வேறு ஏகத்தாராக ஏற்பட்டுவிடும் என்று தெரிந்தும் இவர்கள் தேர்தலுக்கு நிற்பார்கள். இன்னாருக்கு வோட்டுப் போடுங்கள் என்று தங்கள் பெயரைப் பிரபலப் படுத்த இதைவிட வேறு நல்ல சந்தர்ப்பம் வேறு எங்கு கிடைக்கப் போகிறது என்று இவர்கள் சுவரொட்டி விளம்பரங்களும் நோட்டீஸ்களும் அடித்துத்தள்ளுவார்கள். என்னடா இந்தச் சர்க்கார் எப்பொழுதாவது ஒரு தடவைதானே தேர்தல் நடத்துகிறார்கள், மாதம் ஒரு தேர்தலாவது நடத்தக் கூடாதா, அப்பொழுது எவ்வளவு புகழ் சம்பாதிக்கலாம் என்று இவர்கள் கவலைப்படுவார்கள்.

சிலர் ஊருக்கு எந்தப் பெரிய மனிதன் வந்தாலும் சரி, உடனே அவரைத் தேடிக் கண்டு பிடித்து அவருக்கு ஒரு டீ பார்ட்டி ஏற்படுத்திவிடுவார்கள் இந்தத் தேக் கச்சேரிக்கு ஊரில் உள்ள

மற்றப் பிரமுகர்களை அழைப்பார்கள். பத்திரிகைக்காரர் காலில் விழுந்து அவர்களையும் வரச் சொல்லித் தங்கள் டீ பார்ட்டியைப் பற்றி எழுதச் சொல்லுவார்கள். இம்மாதிரி டீ பார்ட்டி கொடுப்பதில் இவர்களுக்கு இரண்டு விதத்தில் புகழ். ஒன்று எல்லாருக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்புவதின் மூலம் தங்கள் பெயர் பிரபல்யமாவது. இன்னொன்று தங்கள் டீ பார்ட்டியைப்பற்றிப் பத்திரிகைகளில் விவரங்கள் வெளியாகி அதன் மூலம் இவர்கள் பெயர் அடிபடுவது.

இன்னும் நிதி திரட்டுகிறவர்கள் இருக்கவே இருக்கிறார்கள். செத்துப் போனவர்கள், செத்துப் போகாமல் இன்னும் இருக்கிறவர்கள், இனி மேல் தான் பிறக்கப்போகிறவர்கள் இவர்கள் எல்லார் ஞாபகமாகவும் நிதி திரட்டுவதுதான் இவர்கள் வேலை. இவர்கள் யார் ஞாபகத்துக்காக நிதி திரட்டுகிறார்களோ, அவர்கள் ஞாபகம் நிலைக்குமோ, என்னமோ, நிதி திரட்டிய இவர்கள் ஞாபகம் கட்டாயம் நிலைக்கும் என்பது இவர்களுக்கு நிச்சயம்.

ஊரில் எங்கே போட்டோ எடுக்கிறார்கள் என்று தெரிந்தாலும் சரி, அங்கே போய் போட்டோவுக்குள் தலையை நீட்டி புகழ் சம்பாதிப்பவர்களும் உண்டு. பெரிய தலைவர்கள் விமானத்திலிருந்து இறங்கும் போதும் ஏறும் போதும் எடுக்கப்படும் போட்டோக்களில் கூர்ச்சம் மாதிரி தலையை நீட்டிக் கொண்டிருக்கும் பிரகிருதிகள் இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

ஆக புகழ் தேடிக் கொண்டிருக்கும் இவர்களுக் கெல்லாம் வேறு கவலை கிடையாது. இவர்கள் வீட்டில் திருடர்கள் புகுந்து கொள்ளையடித்தாலும் கூட இவர்கள் கவலைப்படமாட்டார்கள். அப்படியாவது இவர்கள் பெயர் பத்திரிகைகளில் வெளிவந்து இவர்கள் புகழ் சம்பாதித்தால் போதும். என்ன பண்ணலாம், இப்படிச் சில பிருகிருதிகள்.

புருஷர்களுக்கு மட்டும்

புருஷர்களே, ஜாக்கிரதை! நீங்கள் பிரிட்டிஷாரிடமிருந்து சுய ஆட்சி பெற்றது பெரிய காரியமல்ல. இந்த ஸ்திரீகளிடமிருந்து நீங்கள் எப்படி விடுதலை அடையப் போகிறீர்கள் என்பதைப் பற்றித்தான் எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது.

தொன்று தொட்டு, தலை முறை தலை முறையாக, ஆயிரக் கணக்கான வருஷங்களாக, புருஷர்களாகிய நாம் அனுபவித்து வந்த எத்தனையோ உரிமைகளை நம்மிடமிருந்து பிடுங்கிக் கொள்வதற்கு இந்த ஸ்திரீகள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எனக்கு நம்பகமான இடத்திலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது.

புதிய தேர்தல் ஏற்பட்டதும், இவர்கள் எல்லா ஸ்தானங்களையும் கைப் பற்றிக் கொண்டு, புருஷர்களுடைய உரிமைகளைக் கட்டுப் படுத்துவதற்காக ஒரு புதுச் சட்டம் கொண்டு வரப் போகிறார்களாம்! இந்தச் சட்டம் இப்பொழுது உள்ள கடைச் சிப்பந்திகள் சட்டத்தை ஒட்டி இருக்கலாமாம்.

சட்டத்தின் நகல்கூடத் தயாராகி விட்டது. எனக்குக் கிடைத்த தகவல்களிலிருந்து சட்டம் பின் கண்ட முறையில் இருக்கும் என்று தெரிகிறது.

மனைவிமார் சட்டம் 1952

ஒவ்வொரு வீட்டிலும் வேலை செய்யும் மனைவிமார்களின் வேலை நேரம், ஊதியம், வசதி முதலியவற்றை ஒழுங்கு படுத்துவதற்காகத் திட்டங்கள் ஏற்படுத்துவது அத்தியாவசியமாக இருக்கிறபடியால் இச்சட்டம் பிறப்பிக்கப் படுகிறது.

இந்தச் சட்டத்துக்கு மனைவிமார் சட்டம் 1952 என்று பெயர்.

பொதுவாக மற்றக் கருத்துக்களுடன் முரண்படாத வரையில், இந்தச் சட்டம் சம்பந்தப்பட்ட வரையில் மனைவி என்றால் ஒரு ஆண் மகனைக் கலியாணம் பண்ணிக் கொண்டு அவனுடன் சேர்ந்து வசிப்பவள் என்று அர்த்தம்.

புருஷன் என்றால், மனைவியைக் கல்யாணம் செய்து கொண்டு அவளுடன் சேர்ந்து வசிப்பவன் என்று அர்த்தம்.

வீடு என்றால் புருஷனும், மனைவியும் சேர்ந்து தங்கள் குடித்தனத்தை நடத்தும் இடம் என்று அர்த்தம்.

குடித்தனம் நடத்துதல் என்றால் மனைவி சமைத்துப் போட்டு, அதைப் புருஷன் சாப்பிடுதல் என்று அர்த்தம்.

தற்போதுள்ள முறையில் மனைவிமார்கள் வேலை செய்வதற்கென்று ஒரு வீட்டிலும் குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப் படவில்லை. புருஷன் தனக்கு இஷ்டப்பட்ட போதெல்லாம் மனைவியைக் கூப்பிடுகிறான். இஷ்டப்பட்ட போதெல்லாம் வேலை ஏவுகிறான். இந்தச் சட்டப்படி ஒவ்வொரு புருஷனும் தன் மனைவியை எட்டு மணி நேரத்துக்கு மேல் வேலை வாங்கக் கூடாது. இந்த வேலை நேரம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, நடுவில் ஒரு மணி நேரம் ஓய்வுக்காக விடப்பட வேண்டும். ஒவ்வொரு புருஷனும் தன் வீட்டின் முன்னால், கொட்டை எழுத்துக்களில் தொழில் விசாரணை உத்தியோகஸ்தர் கண்ணுக்குப் படும்படியாக, தன் மனைவியின் பெயரையும், அவளுக்காக இடப்பட்டுள்ள வேலை நேரத்தையும் குறிக்க வேண்டும். அப்படிக் குறிக்கத் தவறினால், புருஷனுக்கு இந்தச் சட்டத்தின் படி இரண்டு வருஷ சமையல் வேலை தண்டனையோ அல்லது மனைவிக்குப் பத்து புதுப் புடவை வாங்கிக் கொடுக்கும் தண்டனையோ, அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

வாரம் முழுவதும் ஓய்ச்சல் ஒழிவின்றி, மனைவிமார்கள் வேலை செய்வதாகத் தெரிகிறது. இது அவர்கள் தேக நலனை மிகவும் பாதிக்குமாகையால், வாரத்தில் ஒரு நாள் குறிப்பிட்டு, அன்று

மனைவிமார்களுக்குப் பூரண விடுமுறை விட வேண்டும். இந்த விடுமுறையின் போதும் மனைவிமார்கள் வீட்டில் இருந்தால், புருஷன் அவளை வேலை வாங்க ஏதுவாகுமாகையால், புருஷன் தன் செலவில் அவளைக் காலையில் ஒரு சினேகிதி வீட்டுக்கும், மாலையில் ஒரு சினிமாவுக்கோ, நாடகத்துக்கோ அழைத்துக்கொண்டு போகவேண்டும். இந்த விடுமுறை நாள், வாரத்தில் எந்த ஒரு கிழமையாகவும் இருக்கலாம். ஆனால் இந்தக் கிழமையை மூன்று மாதத்துக் கொரு தடவைதான் மாற்றலாம். அதுவும் தொழில் விசாரணை உத்தியோகஸ்தரின் அனுமதி பெற்றுத்தான் மாற்றலாம்.

அடுப்பு மூட்டல், தண்ணீர் நிரப்புதல், அடுப்பை விசிறுதல், வீட்டை ஒழித்து வைத்தல், குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளுதல், துணி துவைத்தல் இது போன்ற அபாயகரமான வேலைகளில் சிலர் மனைவிமார்களை ஈடுபடுத்துவதாகத் தெரிகிறது. இச் சட்டத்தின்படி, இத்துடன்வரும் அனுபந்தம் 'அ' வில் கண்டுள்ள எல்லா வேலைகளையும் புருஷர்கள் தான் செய்ய வேண்டும். இச் சட்டத்தை மீறி மனைவிக்கு இந்த வேலைகளை எந்தப் புருஷன் இட்டாலும், அந்தப் புருஷனுக்கு ஆறுமாத சமையல் அறை வாச தண்டனை விதிக்கப்படும். இப்படி தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஆறுமாச காலத்திற்குள் சமையல் அறையை விட்டு வெளியே போனால், இந்த சட்டத்துக்கு முன்னால் மனைவிமார்கள் சமையல் அறையில் செய்து கொண்டிருந்த எல்லா வேலையையும் இவர்கள் செய்ய வேண்டும்.

மனைவிமார்கள் வேலை செய்யும் இடமாகிய சமையல் அறைகள் போதுமான விஸ்தீர்ணத்துடனோ, அல்லது போதிய காற்றோட்டத்துடனோ கட்டப்படுவதாகத் தெரியவில்லை. இச் சட்டத்தின் பிரகாரம் சமையல் அறை, நீளம் இருபது அடி, அகலம் பதினைந்து அடி, உயரம் பதினைந்து அடிக்குக் குறைந்து இருக்கக் கூடாது. சமையல் அறையின் நான்கு பக்கங்களிலும், பக்கத்துக்கு இரண்டு ஜன்னல்கள் வீதம் இருக்க வேண்டும். ஒவ்வொரு ஜன்னலும் ஐந்து அடி அகலம், ஏழு அடி உயரத்திற்குக் குறைந்து இருக்கக் கூடாது.

தற்சமயம் உள்ள சமையல் அறைகளில் புகை போக்கி என்று பெயருக்கு வைக்கிறார்களே யொழிய அவற்றின் வழியாகப் புகை

சரியாகப் போவது கிடையாது. ஆகவே உள்ளேயுள்ள புகையை வெளியே அனுப்புவதற்கு ஒவ்வொரு புகைப் போக்கியிலும் மின்சார விசிறி யொன்று பொருத்தப்படவேண்டும். தற்பொழுது உள்ள முறைப்படி மனைவிமார்கள் நின்றுகொண்டோ, உட்கார்ந்து கொண்டோ தான் சமைக்கவேண்டியிருக்கிறது. அதை விடுத்து இவர்கள் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி சமைப்பதற்கு புருஷர்கள் ஏற்பாடு செய்து தர வேண்டும். சாதம் கொதிக்கும் நேரத்தில் படிப்பதற்குக் கதைப் புத்தகங்களும், சமையல் அறையில் இருக்க வேண்டும். தங்களுக்குப் பிடித்ததைத்தான் சமைக்கவேண்டும் என்று புருஷர்கள் மனைவிமார்களைக் கட்டாயப் படுத்துவதாகத் தெரிகிறது. இச்சட்டம் அமுலுக்கு வரும் தேதியி லிருந்து மனைவிமார்கள் தாங்கள் இஷ்டப்பட்டுச் சமைத்ததைத் தான் புருஷர்கள் சாப்பிடவேண்டும். அப்படி அவர்களுக்குச் சாப்பிட இஷ்டமில்லாவிட்டால், ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிடுவதை சட்டம் தடை செய்யவில்லை.

இச்சட்டப் பிரகாரம் புருஷர்கள், தங்கள் நண்பர்களையோ, அல்லது வேறு விருந்தினர்களையோ, வீட்டுக்குச் சாப்பிட அழைத்துக் கொண்டு வர விரும்பினால் மனைவிக்கு இரண்டு வார நோட்டீஸ் கொடுப்பதுடன், அவளுக்குச் சௌகரியப்பட்ட நாளாகப் பார்த்துத் தான் அழைத்துவரவேண்டும். அப்படி அழைத்து வந்தாலும் ஒரே சமயத்தில் இரண்டு விருந்தினர்களுக்கு மேல் அழைத்து வரக்கூடாது. மாதத்தில் மூன்று விருந்தினர் களுக்கு மேல் அழைத்துவரக்கூடாது.

ஒவ்வொரு மனைவியும் தன் இஷ்டப்படி பிறந்த வீடு போய்வர, வருஷத்தில் இரண்டு மாத ரஜா புருஷன் கொடுக்கவேண்டும். இந்த ரஜாவை ஒரு வருஷ காலத்துக்கு மேற்படாமல் சேர்த்து சமயத்தில் எடுத்துக்கொள்ள ஒவ்வொரு மனைவிக்கும் பூரண உரிமையுண்டு. இந்த ரஜா காலத்தில், மனைவி இருக்கும் இடத்துக்குப் புருஷன் நேரிடையாகப் போவதன் மூலமோ, அல்லது கடிதம் எழுதுவதன் மூலமோ மனைவியின் மன நிம்மதிக்குப் பங்கம் ஏற்படுத்தினால், ஒவ்வொரு கடிதத்துக்கும் ஒரு வாரம் வீதமும், நேரிடையாகப் பார்க்கும் ஒவ்வொரு

நாளைக்கும் ஒரு வாரம் வீதமும் மனைவிக்குத் தன் ரஜாவை நீடித்துக் கொள்ள பூரண உரிமை உண்டு.

சில புருஷர்கள் அடிக்கடி சமையல் அறையில் நுழைவதன் மூலமோ, அல்லது வீட்டில் அதிகமாகத் தங்குவதன் மூலமோ மனைவியின் வேலையை அதிகப்படி மேற் பார்வை பார்ப்பதாகத் தெரிகிறது. இதனால் புருஷன், மனைவிக்கு இடையே உள்ள ஒற்றுமை குலைவதற்கு ஏது இருப்பதால், எந்தப் புருஷனும் ஒரு நாளைக்கு நான்கு தடவைக்கு மேல் சமையல் அறைக்குள் நுழையக் கூடாது. இந்த நான்கு தடவையும், தடவைக்கு மூன்று நிமிஷத்திற்கு மேல் தங்கக்கூடாது.

கன்னா பின்னா வென்று ஆபீஸ் நேரத்தை வைத்துக்கொண்டு, சில புருஷர்கள் மனைவியை அவசரம், அவசரமாகச் சமைக்கத் தூண்டுவதாகவும் தெரிகிறது. இன்னும் கன்னா பின்னா வேளைகளில் சாப்பிட வருவதாகவும் தெரிகிறது.

இந்தச் சட்டத்தின் பிரகாரம், ஒவ்வொரு புருஷனும் தான் சாப்பிடும் வேளையை முன்கூட்டியே நிர்ணயித்து, அதைத் தொழில் விசாரணை உத்தியோகஸ்தர் கண்ணுக்குப் படும்படியாக கொட்டை எழுத்துக்களில் எழுதி வைக்க வேண்டும். இந்தச் சாப்பாட்டு வேளை, நேரம், எல்லாம் சேர்ந்து ஒரு நாளைக்கு மூன்று தடவைக்கு மேல் போகக்கூடாது. இந்த நேரங்கள் சூரியோதயத்துக்குப் பிறகு ஐந்து மணி நேரத்துக்கு முன்னால், சூரியாஸ்தமனத்துக்குப் பிறகு ஒரு மணி நேரத்துக்குப் பின்னாலும் போகக் கூடாது. வேளை தவறி வந்த புருஷர்களுக்குச் சாப்பாடு போடும் கட்டாயம் இதுவரை இருந்து வந்தது இனி இச்சட்டத்தினால் நீக்கப் படுகிறது.

இத்துடன் வரும் அட்டவணை 'ஆ' வில் கண்டுள்ள குடும்பக் காரியங்களைத் தவிர, வேறு வீட்டைப் பாதுகாத்தல், குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தல், சலவைக் கணக்கு எழுதுதல், பால் கணக்கு எழுதுதல், முதலிய காரியங்களுக்குச் சிலர் தங்கள் மனைவிமார்களைப் பயன் படுத்துவதாகத் தெரிகிறது.

இந்த வேலைகளையும் தடுக்க வேண்டுமென்பது இந்தச் சட்டம் கொண்டுவருகிறவர்களின் நோக்கமென்றாலும், தற்காலிகமாக அதைத் தடுக்காமல், இந்த வேலைகளுக்கு. சர்க்கார் விதிக்கும் திட்டப் படி புருஷர்கள் மனைவிமார்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் என்ன வேலையானாலும், தொழில் விசாரணை உத்தியோகஸ்தரின் பார்வைக்காகக் கொட்டை எழுத்துக்களில் குறிக்கப்பட்டிருக்கும் எட்டு மணி கால வரையரைக்குள்தான் இருக்கவேண்டும்.

மனைவிமார்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வம்பர் மகா சபைகளில் ஈடுபடவோ, அல்லது அப்பளக்கச்சேரிகள் நடத்தவோ பூரண உரிமையுண்டு. இக்கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கும்பொழுது புருஷர்கள் உள்ளே நுழைந்து கூட்டத்தின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடாது.

மாமனார், மாமியார்களைப் பற்றி இந்தச் சட்டத்தில் ஒரு தகவலும் கூறாததன் காரணம் 1951ல் நிறைவேறிய குடும்ப அமைதிச் சட்டத்தின் பிரகாரம், கல்யாணம் பண்ணிக் கொண்ட எந்தப் புருஷனும் தன் தாயார் தகப்பனாருடன் சேர்ந்து வாழக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருப்பதுதான்.

என்ன, புருஷர்களே! இந்த மாதிரி சட்டம் வரப்போகிறது என்று தெரிந்து முன் கூட்டியே உங்களை எச்சரித்துவிட்டேன். என்வரையில் இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு நான் ஒரு வழி கண்டுபிடித்துவிட்டேன். காவி வஸ்திரங்களுக்குச் சொல்லி அனுப்பியிருக்கிறேன். அவை வந்ததும், அவ்வளவுதான், சன்னியாச ஆசிரமத்தை மேற்கொண்டு விடப்போகிறேன்!



நாடோடி எழுதிய நூல்கள்

		ரூ.	அ.	பை.
1.	புருஷர்களுக்கு மட்டும் ...	4	0	0
2.	பரந்த அனுபவம் ...	4	0	0
3.	தமிழா, தூங்காதே! ...	4	0	0
4.	என்னைக் கேளுங்கோன்னு ...	4	0	0
5.	அட பரமசிவா! ...	3	0	0
6.	குடும்ப ரகசியம் ...	3	0	0
7.	முடியாத யுத்தம் ...	3	0	0
8.	படித்த பெண் வேண்டாம் (2-ம் பதிப்பு) ...	3	0	0
9.	நாடகமே உலகம் (3-ம் பதிப்பு) ...	3	0	0
10.	இதுவும் ஒரு பிரகிருதி (2-ம் பதிப்பு) ...	3	0	0
11.	ஒரு நாள் கூத்து (2-ம் பதிப்பு) ...	3	0	0
12.	ஹே, அனுராதா (2-ம் பதிப்பு) ...	3	0	0
13.	பிழைக்கும் வழி (3-ம் பதிப்பு) ...	2	8	0
14.	எங்கள் குடும்பம் பெரிது ...	2	8	0
15.	ஸ்திரீகள், ஜாக்கிரதை ...	1	0	0
16.	கிழவியும் குமரியும் ...	1	0	0
17.	பேசும் பதுமை ...	1	0	0
18.	மாயப் பிரபஞ்சம் ...	1	0	0
19.	ரஷ்ய நீதிக் கதைகள் ...	(அச்சில்)		

கிடைக்குமிடம்:

நாடோடி

தியாகராயநகர் • சென்னை—17

சில அபிப்பிராயங்கள்

THE HINDU

Tamil readers have by now come to associtea a high standard of felicity and engaging humour with all Nadodi's writings. The volumes which have now issued from his pen-sustain that reputation. That his capacity to approach life and its problems in a light vein and make the most out of them for a delightful skit is apparently inexhaustible, is proved amply by the first three books (Tamizha Thungadav, Parantha Anubhavam & Mudiyatha Uddham). The other two (Pesum Padumai & Maya Prabanjam) containing a number of tit-bits belong to the type of snippets which Nadodi has already made popular.

சென்னை ரேடியோ

இயல்பிலேயே ஹாஸ்யச் சுவை படைத்த எழுத்தாளரே இந் நிகழ்ச்சிகளில் பொதிந்துள்ள ஹாஸ்ய நிலைகளை நமக்குப் புலப் படுத்த முடியும். தமிழ் நாட்டில் இன்று இவ்வியல்பினைப் படைத்தவர்கள் மிகச் சொற்பம். இவர்களில் ஸ்ரீமான் நாடோ டிக்குக் கௌரவமானதோர் இடமுண்டு.

தினமணி

ஹாஸ்யத்திலும், கேலியிலும் இப்புத்தகத்தில் (நாடகமே உலகத்தில்) காணப்படும் கட்டுரைகளும், நாடகங்களும் ஒன்றுக் கொன்று சளைக்கவில்லை.

INDIAN EXPRESS

The author has demonstrated with what great ease a clever writer can humorously portray the faults and foibles of our society. A score of such books (NATAKAME ULAGAM) can do more social reform than a thousand platform politicians.

● கல்கி

தமிழ் நாட்டில் பிறந்து தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் நாடோடியின் நூல்களைப் படித்துச் சிரித்திரா விட்டால் அப்படிப் பட்டவர்களை அதிசயப் பிரகிருதிகள் என்றே சொல்லவேண்டும்.

● ஹிந்துஸ்தான்

நாடோடியின் கட்டுரைகளுக்கே ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. அவர் எழுத்தைப் படித்தவுடன் துக்கத்தை மறந்து சிரிக்க ஆரம்பிக்கிறோம். அவர் நம்மையே கேலி செய்தாலும் கோபம் வருவதில்லை, சிரிக்கவும் சிரிக்கிறோம்.

● WHIP

He (NADODI) snatches his themes from everyday life, has a good pair of ears and eyes for himself and then also a brilliant pen which remarkably reproduces his rich thoughts on white paper. Witty, philosophical and in every way humane, Nadodi is a class Tamil writer without any rival in his way of writing in Tamil to day.

● நவயுவன்

தமது பெயர் போன சரளமான ஹாஸ்ய நடையைக் கொண்டு ஒன்றுமே இல்லாத விஷயங்களைப் படித்து மகிழும்படி செய்து விடுகிறார் நாடோடி.

● ஹனுமான்

மனம் நொந்து, உடல் தளர்ந்து, சோர்வு அடைந்து கிடக்கும் ஜனங்களுக்கு நாடோடியின் தமாஷ் இலக்கியம் சோர்வை நீக்கி ஊக்கம் அளிக்கும் டானிக் ஆகும்.

● வீரகேசரி

கட்டுரையின் அமைப்பு, அதில் சித்திரிக்கப்படும் சம்பவம், கருத்து, எல்லோரையும் பரவசப்படுத்தும் ஹாஸ்ய ரஸம் எல்லாம்

நாடோடியின் பேனாவில் ஒரு தனி இயல்பைப் பெற்று விளங்குகின்றன.

- **சந்திரோதயம்**

சாதாரண விஷயங்களை, அதுவும் ஹாஸ்யமாக, சுவாரஸ்யம் குன்றாமல் எடுத்துக் கையாள்வது மிகவும் சிரமமான காரியம். இந்தச் சிரமமான காரியத்தைச் சாதிக்கிறார் ஆசிரியர்.

- **பிரசண்ட விகடன்**

நாடோடியின் சிருஷ்டிகளில் அனேகமாக எல்லாவற்றிலும் உயர்தரமான ஹாஸ்ய ரஸத்தை அனுபவிக்கிறோம். சாதாரணமாக நம் சமூகத்தில் காணப்படும் ஆண் பெண்களைப் பாத்திரங்களாகக் கொண்டு வாழ்க்கையில் நடக்கக் கூடியவாறு உள்ள சம்பவங்களையே தம் எழுத்துத் திறமையால் நாடோடி சித்திரித்திருப்பது போற்றத்தக்கது.

- **சக்தி**

தங்கு தடையின்றி, மளமளவென்று செல்லும் ஆசிரியருடைய தமிழ் நடை.

- **கிராம ஊழியன்**

நாடோடியின் பெயரைத் தமிழுலகம் நன்கறியும். தமிழ் ஹாஸ்ய எழுத்தாளர்களில் சிறந்தவர்களில் ஒருவர் இவர்.

- **கலைமகள்**

தினந்தோறும் நம் முன்னே நிகழும் நிகழ்ச்சிகளையும் நடமாடும் மனிதர்களையும் கொண்டு வந்து நிறுத்தி நாடகமும், கதையும் ஆக்கி விடுகிறார் அவர்.

- **திருச்சி ரேடியோ**

தமிழில் ஹாஸ்யம் எழுதுவதில் மிகச் சிறந்த சிலரில் நாடோடி என்னும் புனைபெயர் ஆசிரியரும் ஒருவர்.

- **அறிஞர் டி. கே. சி.**

ஆசிரியரது உள்ளம் ஒரு பெரிய ஹாஸ்யச் சுரங்கம். தோண்டத் தோண்ட வந்துகொண்டே இருக்கிறது சரக்கு.